# பாரும்

# போரும்



வலிங்க நூற்பதிப்புக் கழகம்
ஈரோடு

# பாரும் போரும்

திரு. சின்னுசெட்டியார்க்கு -

சேலம்
2.5.63

முருகுசுந்தரம்

புலவர். முருகுசுந்தரம், எம். ஏ.,
23-A, மாரியம்மன் கோயில் தெரு, சேலம்-7


புலவர் மு. சண்முகசுந்தரம், B.A

தமிழாசிரியர்,

நகராட்சி உயர்நிலைப் பள்ளி, சேலம்.



சிவலிங்க நூற்பதிப்புக் கழகம்

ஈரோடு

முதற் பதிப்பு—1958
இரண்டாம் பதிப்பு—1959
மூன்றாம் பதிப்பு—1959
நான்காம் பதிப்பு—1960
உரிமைப் பதிவுடையது.

விலை ரூ. 1-10 காசு

©
சிவலிங்க நூற்பதிப்புக் கழகம், ஈரோடு.

Approved by the Text-Book Committee,
Madras. Vide Fort St. George Gazette
dated 13—5—1959, Page No. 22 for Std. VIII and
dated 18—5—1960, Page No. 17 for Std. IX.

24 இராத்தல்—வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டது.

Printed at The Madras City Printers, Madras-1.

டாக்டர் மா. இராசமாணிக்கம், M.A.,L.T., M.O.L., Ph. D.,
தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த் துறைத் தலைவர்
தியாகராயர் கல்லூரி, மதுரை.

36, மஞ்சனக் காரத் தெரு,
மதுரை, 31-11-1958.

## முகவுரை

"பாரும் போரும்" என்னும் பெயர் கொண்டு விளங்கும் இந்நூல், தோற்றுவாய், தமிழரும் போரும், போரியல் மக்கள், போர் வெறியர்கள், உலகப் போர்கள், போரைத் தடுக்க வழி என்னும் ஆறு பகுதிகளைக் கொண்டது.

சங்ககாலத் தமிழருடைய போர்முறைகள் விரிவாகவும்,தெளிவாகவும் கூறப்பட்டுள்ளன. கிரேக்கர், அராபியர், மங்கோலியர் முதலியவர் போர்த்திறங்கள் விளக்கப்பட்டுள்ளன. அலெக்சாந்தர், ஜூலியஸ் சீசர் முதலிய பேரரசர்களின் போர் வெறி நன்கு காட்டப்பட்டுள்ளது. உலகப் பெரும்போர்கள் உலகத்துக்கு உண்டாக்கிய அழிவுகள் திறம்பட விளக்கப்பட்டுள்ளன. இறுதியில் போரைத் தடுக்கச் சிறந்த யோசனை கூறப்பட்டுள்ளது.

இந்நூல் உயர்வகுப்பு மாணவர்க்கு ஏற்றமுறையில் நல்ல தமிழில் எழுதப்பட்டுள்ளது. பள்ளியுலகில் இத்தகைய நூல் இதுகாறும் வெளிவந்ததில்லை. இதனை மாணவர் உலகம் நன்கு வரவேற்கும் என நம்புகிறேன். இப்புது முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்ட ஆசிரியர்க்கு என் வாழ்த்து உரியது.

மா. இராசமாணிக்கம்

# முன்னுரை

உலகில் போரை ஒழித்து, அமைதியை நிலை நாட்டும் பணியில் இந்திய நாடு பெரும் பங்கு எடுத்துக்கொண்டு செயலாற்றுவதை உலகம் அறியும். பெர்னர்டுஷா, இரஸ்ஸல், தால்ஸ்தாய் போன்ற உலகப் பேரறிஞர்களும், ஐன்ஸ்தீன் போன்ற விஞ்ஞானிகளும், காந்தி, நேரு போன்ற அரசியல் வாதிகளும் உலக அமைதிக்குப் பாடுபட்டனர் ; பாடுபடுகின்றனர். எதிர்கால உலகை உருவாக்கும் சிற்பிகளான மாணவர்கள், இப்பெரியார்களின் குறிக்கோளைத் தங்கள் வழிகாட்டியாகக் கொண்டு ஒழுக வேண்டியது, அவர்கள் தலையாய கடமையாகும். அக்கடமையை அவர்கட்கு உணர்த்தவேண்டிப் 'பாரும் போரும்' என்ற இந்நூலை அவர்கட்கு உரிமையாக்குகிறேன். இந்நூலை அச்சியற்றும்போது உடனிருந்து உதவிசெய்த ஈரோடு, மாசன உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர், புலவர் கரு. காசி அய்யா அவர்கட்கும், சென்னை, C. A. H. இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர், வித்துவான் பு. செல்வராசனார் அவர்கட்கும், வெளியிட்ட சிவலிங்க நூற்பதிப்புக் கழகத்தார்க்கும் என் உளங்கனிந்த நன்றி.

சேலம்.
16—10—58.

இங்ஙனம்,
மு. சண்முகசுந்தரம்.

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | தோற்றுவாய் | ... ... | 1 |
| 2. | தமிழரும் போரும் | ... ... | 9 |
| 3. | போரியல் மக்கள் | ... ... | 32 |
| 4. | போர் வெறியர்கள் | ... ... | 50 |
| 5. | உலகப் போர்கள் | ... ... | 82 |
| 6. | போரைத் தடுக்க வழி | ... ... | 104 |
| | கட்டுரைப் பயிற்சி | ... ... | 116 |

# 1. தோற்றுவாய்

சிறு மீன் ஒன்று பொற்றகடு போல் ஒரு குளத்தில் மெல்ல நீந்திச் சென்று கொண்டிருந்தது. எதிரே ஒரு பெரிய மீன் வந்தது. சிறுமீனைக் கண்டதும், அதை விழுங்குவதற்குப் பெரிய மீன் வாயைத் திறந்தது. அதைக்கண்டு அச்சமுற்ற சிறு மீன், "இது என்ன கொடுமையாக இருக்கிறது? நாம் இருவரும் ஓரினமாயிற்றே! இனத்தை இனம் விழுங்குவது சரியா? முறையா? அறமா?" என்று அரற்றத் தொடங்கியது.

" அப்படியானால் நீ என்னை விழுங்கு " என்று பெரிய மீன் கூறியது. சிறு மீன் வாயைத் திறந்து, பெருமீனை விழுங்க முயற்சித்தது; ஆனால் முடியவில்லை.

" சரி! நீயே என்னை விழுங்கிவிடு " என்று சிறுமீன் கூறியது. பெரிய மீன் உடனே விழுங்கி விட்டது.

உலகச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை இது. இதை எழுதியவர் ஓர் உருசிய எழுத்தாளர். இக்கதை, அளவில் சிறியதாகவும், பிஞ்சுள்ளம் கொண்ட சிறுவர்களின் உளப் பாங்கிற்கு ஏற்றதாகவும் தோன்றும். ஆனால். இக்கதை

யோ, உலகியலின் அடிப்படைக் கருத்தைத் தன்ன கத்தில் கொண்டு மிளிர்கிறது.

## போராட்டமே உலகியல் :

ஒன்றை ஒன்று அழித்து முன்னேறுவதுதான் உலகியல். படைப்புக் காலந்தொட்டு இன்றுவரை உயிர்களின் வளர்ச்சி இத்தகையதே. **சார்லஸ் டார்வின்** (Charles Darwin) என்ற பேரறிஞரால் ஆய்ந்து வெளியிடப்பட்ட பரிணமக்கொள்கையை எல்லாரும் அறிவர். "உயிரினங்களின் போராட்டமே உலக வாழ்க்கை; ஒன்றன் அழிவிலேதான் மற்றொன்று கருக்கொள்கிறது" என்று அவ்வறிஞர் வகுத்துப் போந்தார்.

சிறுமீனைப் பெருமீன் உண்டு வளர்கிறது. வலி வற்ற மனித இனத்தை அழித்து, வலிவுள்ள மக்கள் இனம் ஓங்குகிறது. இம்மாநிலத்தில் தோன்றிய மக் களினம் பல. அவை உலக அரங்கில் தோன்றின; சிறிது காலம் நடித்தன; பின் அழிந்தன; அழிக்கப் பட்டன. திராவிடர், ஆரியர், மங்கோலியர், காக்கே சியர், கெல்ட்டுகள், ஹூணர்கள் என எத்தனையோ கூட்டத்தார் தோன்றினர்; வாழ்ந்தனர்; தங்களுக் குரித்தான சில குறியீடுகளை உலகிற்கு வழங்கிவிட்டு அழிந்தனர்; வலி குன்றியிருந்தபொழுது வலிமிக்க பிறரால் அழிக்கப்பட்டனர்.

மொகஞ்சதாரோ, ஆரப்பா என்ற இடங்களில் செழித்து வாழ்ந்த திராவிடரின் சிந்துவெளி நாகரி கம் மண்ணில் மாண்டது. யூபிரிடிஸ், டைக்ரிஸ்

ஆறுகளின் கரைகளிலே அரசோச்சிய சுமேரிய நாகரிகம் அழிக்கப்பட்டது. எகிப்து நாட்டில் எழில் பெறு சிறப்புடன் இலங்கிய பாரோ நாகரிகம் பாழடைந்தது. பழஞ்சிறப்புப் பெற்ற கிரீட் தீவில் மிளிர்ந்த மெசானிய நாகரிகம் வீழ்ந்தது.

**ஹோமர்** என்ற உலக கவியை ஈந்து, பேரறிஞர் **சோக்ரதரைப்** பெற்றெடுத்துக் கலையையும் அறிவியலையும் வளர்த்துக் குன்றாச் சிறப்போடு வாழ்ந்த கிரேக்க நாகரிகமும் குன்றியது. **சீசரையும், பாம்பியையும், சீசேரோவையும்** ஈன்று, உலக அரசியாய் ஈடும் எடுப்பு மற்று வாழ்ந்த உரோமப் பேரரசு அழிவுற்றது. இந்திய நாட்டில் இணையற்ற புகழோடு வாழ்ந்த மூவேந்தர் முடியரசு, மோரியர் பேரரசு, குப்தரின் கோனாட்சி, மொகலாயரின் முடியாட்சி யாவும் கனவாய்ப் பழங்கதையாய்ப் போயின.

திராவிட நாகரிகத்தை அழித்து ஆரிய நாகரிகம் ஓங்கியது. மெசானிய நாகரிகத்தை அழித்துக் கிரேக்க நாகரிகம் ஓங்கியது. கிரேக்க நாகரிகத்தின் அழிவில், உரோம நாகரிகம் உயர்சிறப்புக் கொண்டது. இவ்வாறு அழிக்கப்பட்ட பிணக்குவியலின் மீது அரியணை அமைத்துத்தான், இன்று பெருமிதத்தோடு ஐரோப்பிய நாகரிகமும், அதனைச் சார்ந்து வாழும் பிற நாகரிகங்களும் வீற்றிருக்கின்றன. இன்றைய நாகரிகம் இந்நிலைக்கு உயர்வதற்கு எத்தனைப் போராட்டங்கள்! எத்தனை அழிவுகள்! உலக வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தோமானால் இவ்வுண்மை தெற்றென விளங்கும்.

## போரும் இலக்கியமும்:

'சாதலின் இன்னுதது எதுவும் இல்லை' என்று வள்ளுவப் பெருந்தகையே வற்புறுத்துகிருர். ஆனல் அதே வள்ளுவப் பெரியார், சாவு முழக்கமிட்டுக் களி நடம்புரியும் போர்க்களத்தில், உயிரைத் துக ளென எண்ணி 'விழுப்புண் படாத நாட்களை வீணை நாட்களில் வீரர் வைப்பர்' என்று கூறிப் படைச் செருக்கைப் பலபடப் பாராட்டுகிருர். அடிக்கும் கோலுக்கு அஞ்சாமல் சீறும் படவரவுபோல், குத் தும் வேலுக்கஞ்சாமல் கொதித்தெழும் வீரர்களை நம் நாடு கண்டிருக்கிறது. கைவேலைக் களிற்றின்மேல் வீசி, மெய்வேலைப் பறித்து நகும் வீரர்களின் புகழை நம் இலக்கியங்கள் பாடி மகிழ்கின்றன

இகல் வேந்தர் வலிதொலைத்து, அவர் நாட்டில் எரியூட்டிய வெற்றியாளன் சிறப்பு இலக்கியங்களில் மிகுத்துக் கூறப்படுகிறது. பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் கொன்ற பார்வேந்தன் புகழை, நம் நாடு பரணிபாடிப் போற்றுகிறது. ஏன்? உலகில் இன்று தலைசிறந்த இலக்கியங்கள் என்று போற்றப்படுவன எல்லாம், பல்லாயிரவர் ஒன்ருகப் படுகொலை செய் யப்படுவதையே பரக்கப் பாடுகின்றன.

வடமொழியிலுள்ள இராமாயண மகாபாரதங் களும், தமிழிலுள்ள புறப்பொருள் நூல்களும், கிரேக்க மொழியிலுள்ள இலியாது, ஒதீசியம் போன்ற நூல் களும், இலத்தீன் மொழியிலுள்ள ஏனீடு என்ற இலக் கியமும், ஆங்கிலத்திலுள்ள ஆர்தர் மன்னரின் காவிய

மும், சேக்ஸ்பியர் எழுதியுள்ள ஜூலியசு சீசர், மாக் பெத் முதலிய உயர் நாடகங்களும், போரின் விளை வால் ஏற்படும் பெரும் உயிர்க் கொலைகளையும், அழிவுகளையுமே படலம் படலமாக, எதுகை இடரு மல், மோனை முறியாமல், அணியழகோடு எடுத் தியம்புகின்றன. உயிர்க்கொலை செய்வதில் வல்ல வீரன், வீரசுவர்க்கத்திற்குப் புலவர்களால் அனுப் பப்படுகிருன். அவ்வீரர்களின் புகழைப் பாடுவதை அந்நாட்டு மக்கள் தங்கள் கடமையாக எண்ணு கின்றனர்.

## போரைப்பற்றி அறிஞர்கள் :

நாட்கள் செல்லச் செல்லப் போரைப் பற்றி, மக்கள் கொண்டிருந்த கொள்கை வலியுற்று வந்திருக் கிறதே யன்றிச் சிறிதேனும் நெகிழ்ந்து கொடுத்த தாகக் காணேம்.

இன்றும் போர்வீரர்களின் புகழை, நாம் காது செவிடுபடும்படி உரக்கக் கேட்கிருேம். போரின் பண்புகள் கற்பனை யினிமையோடு, மக்களிடையே சிறப்பாகக் கூறப்படுகின்றன. நெருப்பில் புடம் போட்ட பொன் மாசு நீங்கிச் சுடர் பெறுவதுபோல, மடியும் அச்சமும் கொண்ட மக்கள், போரினல் ஆற்றலும் ஆண்மையும் நாட்டுப் பற்றும் பெறுவ தாகச் சிலர் கூறுகின்றனர். போரிலே காட்டப் படும் உயர்ந்த வீரத்தையும், உள்ள முருக்கும் தியா கத்தையும், தங்கள் கூற்றுக்குச் சான்ருக அவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். அவர்கள் சொல்வதைப் பார்த்தால் மேற்கூறிய உயர் பண்புகட்குப் போரே பிறப்பிடம் என்றுகூட நினைக்கத்தோன்றும். போர்

வெறியர்களும், பேராட்சி வெறியர்களும் (Imperialists) இவ்வாறு போரைப் பற்றியும், போரின் அவசியத்தைப் பற்றியும் புகழ்ந்து பேசுவதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் பேராசிரியர்களும் தத்துவ அறிஞர்களுங்கூட இவ்வாறு பேசினர். இங்கிலாந்தில் வாழ்ந்த பேரறிஞர் இரஸ்கின் (Ruskin) காந்தியாருக்கு மிகவும் பிடித்தமான ஆசிரியர்; பொருளியல் வல்லுநர். அவர் தம்முடைய நூலொன்றில் பின்வருமாறு கூறுகின்றார்:

"சுருங்கக் கூறின் நான் கண்ட உண்மை இது தான். பெருநாடுகள் எல்லாம் தங்கள் சொல்லின் உண்மையையும், எண்ணத்தின் வலிமையினையும் போரிலே கண்டு சமாதானத்திலே இழக்கின்றன. போர் அந்நாடுகளுக்கு நல்லறிவு கொளுத்துகிறது. சமாதானம் அவற்றை வஞ்சிக்கிறது. போர் அவர்களுக்கு நல்ல பட்டறிவையும், பயிற்சியையும் அளிக்கிறது. சமாதானம் அவற்றைக் காட்டிக்கொடுக்கிறது. இன்னும் சொல்லப் போனால் அந்நாடுகள் போரில் உயிர்பெற்றுச் சமாதானத்தில் செத்து மடிகின்றன."

இரஸ்கின் எத்தகைய வடிகட்டின பேராட்சி வெறியராக இருந்தார் என்பதற்கு அவருடைய நூலிலிருந்து இன்னுமொரு மேற்கோள் தருகிறேன்:

"இங்கிலாந்து பின்வரும் கடமையைச் செய்ய வேண்டும் அல்லது சாகவேண்டும். அதாவது, அது தான் கால் வைக்கும் எல்லாப் பயனுள்ள இடங்களையும் கைப்பற்றிக் கொண்டு, அங்குக் குடி

யேற்ற நாடுகளை நிறுவ வேண்டும். பிறகு அந் நாடுகளுக்கு, 'நிலத்திலும் நீரிலும் இங்கிலாந்தின் வலிமையை வளர்ப்பதே உங்கள் முதல் நோக்கமா யிருக்க வேண்டும்' என்று அறிவுறுத்திக் கொண் டிருக்க வேண்டும்."

ஆங்கிலப் படையில் எளிய போர்வீரனாக இருந்து இறுதியில் தளபதி (Major General) யான ஒருவர் கூற்றைக் கேளுங்கள் :

"போரில் வெற்றியடைய மனமாரப் பொய் சொல்லவேண்டும்; புரட்டுச் செய்ய வேண்டும். அவ்வாறு எவன் செய்ய மறுக்கிறானோ, அவன் தன் தோழர்களுக்கும் தனக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும் இரண்டகம் செய்தவனாவான். அவனைக் கீழ்மகன் என்றும், பிணத்திற்குப் பிறந்த கோழை என்றும் கூறவேண்டும். அறம், மறம் பற்றிப் பேசுவதெல் லாம் பொருளற்ற வெறும் பேச்சு. பகைவன் மடியும் வரையில் அடிமேல் அடிகொடுக்க வேண்டியது தான் ஒரு நாட்டின் கடமையாகும்."

மேற்கூறிய எடுத்துக் காட்டுகளால் ஆங்கிலே யர்கள் எவ்வளவு போர் வெறியர்களாகவும் பேராட்சி வெறியர்களாகவும் இருந்தார்களென்பது விளங்கும். ஆங்கிலேயர் மட்டுமல்ல; உலகத்தில் வாழ்ந்த மக்கள் இனமே போர் உணர்வை ஓர் இயல்பூக்க (Instinct) மாகக் கொண்டு வாழ்ந்திருக்கிறது.

இவ்வியல்பூக்கம் உலகை இதுகாறும் எப்படி எப்படி அலைக்கழித்தது? இவ்வியல்பூக்கத்தை

மிகுதியாகக் கொண்டு வாழ்ந்தோர் யார்? அவர்களுடைய போர் வெறி என்னும் ஊழித் தீயில் வெந்து நீருகிய மக்கள் யார்? அறிவியலின் துணைகொண்டு ஆக்கப்பட்ட அழிவுப் படைகளின் வன்மை என்ன? அப்படைக் கலங்கள் உலகப்போரை எவ்வாறு உருக்கொள்ளுமாறு செய்தன? உலகப் போரால் உலகம் உற்ற பெருங்கேடு எத்தகைத்து? போரை ஒழிக்க முடியுமா? ஒழிப்பதற்கு உலகோர் செய்யும் முயற்சி என்ன? என்பன போன்ற செய்திகளே ஈண்டு ஆராய்தற் குரியன.

# 2. தமிழரும் போரும்

## தமிழரின் போர்ப்பண்பு:

உலகில் போரியல் மக்கள் (Warlike people) என்று சிறப்பாகக் கூறப்படுபவர்கள் கிரேக்கர்களும் உரோமானியர்களுமே ஆவர். அவர்கட்கு இணை யான போர் உணர்வும், அஞ்சா நெஞ்சமும் படைத் தவர்கள் தமிழ் மக்கள். ஆனால் இச் செய்தி உலக வரலாற்றிலே மறைக்கப்பட்டதன் காரணம், தமிழ் மக்கள் வரலாற்று நூல் எழுதும் இயல்பூக்கத்தைப் பண்டை நாள் தொட்டுக் கைக் கொள்ளாமலிருந் ததுதான். கிருத்து பிறப்பதற்கு முன்னும் பின்னும் கிரேக்க நாட்டிலும் உரோம நாட்டிலும் வரலாற்று ஆசிரியர்கள் மலிந்திருந்தனர். அரித்தாத்தலும் (Aristotle) தாலமியும் (Ptolemy) கிரேக்க நாட்டில் தலை சிறந்த வரலாற்று ஆசிரியர்களாகத் திகழ்ந்த பொழுது, தமிழகத்துப் புலவர்கள் இயற்கையின் எழிலைப் பாக்களில் வடித்து மகிழ்ந்தனர். உரோம நாட்டில் சிசேரோவும் சீசரும் மக்கள் மன்றத்தின் முன்னே நின்று அரசியல், பொருளியல், சமூக இயல் பற்றிச் சொன்மழை பொழிந்துகொண்டிருந்த பொழுது, தமிழ் நாட்டுப் பாவேந்தரெல்லாரும் மூவேந்தர் முன்னின்று பாமாலை பாடிக்கொண்டிருந் தனர். வயிற்றுத் தீத்தணியப் பழமரம் நாடும் பறவை போல் வள்ளல்களைத் தேடும் பணியே, அவர்கள் வாழ்நாளின் பெரும்பகுதியைக் கொள்ளை கொண் டது. அதனாற்றான், அவர்கள் தம்மை ஆதரித்த வள்ளல்களைப் பற்றி மட்டும் தனிப் பாடல்களும்

நூல்களும் எழுதினர்களே தவிர, நாட்டிற்குப் பொதுவான வரலாற்று நூல் எழுத யாரும் முன்வர வில்லை. தமிழகம் மூவேந்தர்களாலும், சில சிற்றர சர்களாலும், பல வேளிர்களாலும் ஆளப்பட்டு வந்தமையால், அவர்கள் தங்கள் தங்கள் நாட்டின் நலத்திலேயே பெரிதும் நாட்டங்கொண்டிருந்தனரே யன்றித் தமிழகத்திற்குப் பொதுவான வரலாறு எழுதுவதில் யாரும் நாட்டங்கொண்டவர்களாகத் தெரியவில்லை. எனினும் பண்டைத் தமிழரின் வீர வரலாற்றை ஓரளவு விளக்கும் காலக் கண்ணுடி யாக விளங்குவன **புறநானூறு, பதிற்றுப்பத்து** என்ற தொகை நூல்களும், **தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை** முதலிய இலக்கண நூல்களுமேயாம்.

தமிழ்நாட்டு வீரத்துக்கு முறையான வரலாற்று நூல் எதுவும் இல்லையென்ருலும், அண்டை நாட்டு வரலாறுகள் போதிய சான்று பகருகின்றன. வட திசை விளங்கும் வான் தோய் இமயத்தின் கொடு முடிகளும், கங்கைப் பேரியாறும், கடாரமும் (Malaya), ஸ்ரீவிஜயமும் (Sumatra), ஈழமும் (Ceylon), அந்தமான் தீவுகளும் (Andaman Isles), நக்கவாரத் தீவுகளும் (Nicobar Isles) காவிரிக் காவலர்களான இராசராச சோழன், இராசேந்திர சோழன் போன்ருரின் வெற்றிச் சிறப்புக்குச் சான்று பகர்கின்றன. இந்தியத் துணைக்கண்டம் முழுவதை யும் ஒரு குடைக் கீழ்க் கட்டியாண்ட சந்திரகுப்தன், அசோகன் போன்ருர் செலுத்திய மௌரியப் பேரரசின் ஆணை ஆழி தமிழ்நாட்டின் எல்லைக்குள் வரவில்லை. இந்திய நெப்போலியன் என்று

வரலாற்று ஆசிரியர்களால் புகழப்படும் சமுத்திரகுப் தனின் குதிரைக் குளம்பு, தமிழகத்தின் வட எல்லையை வட்டமிட்டதே யன்றி, ஊன்றி நிலைபெறு கொள்ளவில்லை. பார்புகழ, பரதகண்டமெங்கும் கொடிகட்டி ஆண்ட மொகலாயரின் போர் முரசு தமிழகத்தில் ஒலிக்கவில்லை. என்றும் தமிழர் சுயேச்சை விரும்பிகள். காரணம் அவர்கள் போராற்றலே.

எந்தக் குற்றச்சாட்டை வேண்டுமானாலும் தமிழர்கள் பொறுத்துக் கொள்வர். வீரமில்லாதவ னென்றோ, ஈகையில்லாதவனென்றோ கூறினால் எந்தத் தமிழனும் பொறுத்துக்கொள்ள மாட்டான். வீரமும், காதலும், ஈகையும் தமிழரின் தலையாய பண்புகள். இம் மூன்றின் அடிப்படையிலேயே தமிழ் இலக்கியங்களெல்லாம் எழுந்துள்ளன. போரை ஒரு கலையாகக் கொண்டனர் தமிழர். வாழ்க்கையை அகம் புறம் என இரு கூறுக்கி, அவற்றிற்கு இலக்கண இலக்கியம் படைத்து வாழ்ந்த பெருமை வேறு எந்நாட்டார்க்கும் இல்லா மல், தமிழர்க்கே வாய்த்த தனிச் சிறப்பாகும்.

## போர்க் காரணங்கள் :

மண்ணாசை, மண்ணாள் வேந்தர்க்கு இயல்பான பண்பாகும். தங்கள் நாட்டின் எல்லையை விரிவு செய்து, பேரரசனாக வாழவேண்டுமென்று ஒவ் வொரு மன்னனும் விரும்பினான். எனவே தமிழக வேந்தர் 'இடஞ்சிறிது என்னும் ஊக்கம் துரப்பப்' போர் புரிந்தனர். போருக்கு மற்றுமோர் காரணம்

வீரமும் ஆகும். புகழை விரும்பாத மனிதன் உலகில் இல்லை என்று சொல்லலாம். "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்பது வள்ளுவர் வாய்மொழியன்றோ? எனவே ஒவ்வொரு மன்னனும், தன் வீரத்தையும் வலிமையையும் போர்க் களத்தில் நிலைநாட்டிப் பீடும் புகழும் பெற விரும்பினான். அப் பீடும் புகழும் புலவராற் சிறப்பித்துப் பாடப் பெறுதலையும் விரும்பினான். "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவன் ஏவா வானவூர்தி எய்துப", "இசையுடையோர்க் கல்லது உயர்நிலையுலகத்து உறையுள் இல்லை" என்பவற்றில் அக் காலத்து மன்னர் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தனர் போலும். எனவே, "மைந்து பொருளாகவும்" பண்டைத் தமிழகத்தில் போர் நிகழ்ந்தது. ஒரு மன்னன் மற்றொரு நாட்டு மன்னன் மகளை மணக்க விரும்பிப் பெண் கேட்டு மறுக்கப்பட்டால், அதன் காரணமாகவும் போர் நிகழுமென்று புறப்பொருள் வெண்பா மாலை கூறும். பாரி வேளுக்கும் மூவேந்தர்கட்கும் நடந்த போர் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாம். இம்மூன்றும் போர்க் காரணங்களாகத் தமிழ் நூல் கூறு நிற்கும்.

## போர் முறைகள் :

தமிழரின் போர்முறைகள், அறிந்து மகிழ்தற்குரிய சிறப்புகளுடையன. தமிழரின் போர் முறைகளைப் பற்றிக் கூறும் பழமையான நூல் **தொல்காப்பியமாகும்**. அதற்குப் பின் எழுந்த **பன்னிரு படலம்** என்னும் இலக்கண நூல், விரிவாகவும் விளக்க

மாகவும் போரைப்பற்றிக் கூறிச் செல்கிறது. ஆனால் அந்நூல் முழுவதும் இப்பொழுது கிடைத்திலது. பன்னிருபடலத்தின் வழிநூலான புறப் பொருள்வெண்பா மாலை போரைப் பற்றி அறிதற்கு மிகவும் சிறந்த நூலாக இப்பொழுது விளங்குகிறது.

தமிழர் போர்ச் செயலை எண்வகைத் திணைகளாகப் பிரித்தனர். அவை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை என்பன. இவ்வெட்டும் பல துறைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இப் பிரிவுகளின் அடிப்படையிலேயே இலக்கியங்களும் எழுந்துள்ளன. இவை புறத்தில் அடங்கும். தமிழரின் போர்ச் செயல்களைக் கூறும் இலக்கியங்களில் தலை சிறந்ததாக விளங்கும் புறநானூறு என்னும் தொகை நூல், இத்திணைகளையும் துறைகளையும் தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது.

## வெட்சி :

ஒரு நாட்டின் மன்னன் மற்றொரு நாட்டின் மீது போர் தொடுக்கக் கருதினால், அந்நாட்டில் வாழும் பார்ப்பனர் முதலியோரையும், பசு முதலியவற்றையும் அந்நாட்டினின்றும் விலக்கல் வேண்டி, “நாம் போர் தொடுக்கப் போகின்றேமாகலின், பசுவும், பசுவின் இயல்புடைய பார்ப்பன மக்களும், பெண்டிரும் பிணியுடையீரும், நுமது குடியில் இறந்தோர்க்குச் செய்யக் கூடிய பிண்டோதகக் கிரியைகளைப் பண்ணும் பிள்ளைகளைப் பெறாதீரும், நுமக்குப் பாதுகாப்பான இடங்களைத் தேடிக் கொள்ளுங்கள்”* என்று பறையறைவிப்பான்.

* புறநானூறு 9.

அவ்வாறு பறையறைவதை உணரமாட்டாத பசுக்களைக் கவர்ந்து வந்து பாதுகாக்கக் கருதி அரசன் தன் வீரர்களை ஏவுவான். அரசனின் ஆணை பெற்ற வீரர்கள் துடியை முழக்கிச் செந்நிறமான வெட்சிப் பூவையேனும் அதனாலான மாலையை யேனும் சூடுவர்; பின் தாங்கள் மேற்கொண்ட போர்ச்செயல் வென்றி விளைக்குமா என்பதை அறிய நற்சொல் கேட்டுப் பின் பகைவர் நாட்டின் மேல் செல்வர். அவ்வாறு செல்லும்போது, ஒற்றர்கள் பகைப்புலத்தில் பசுக்கள் நின்ற இடம், அவற்றின் தொகை, அவற்றைக் காத்து நின்ற வீரர் களின் நிலை ஆகியவற்றை இருளிற் சென்று அறிந்து வந்து கூறுவர். உடனே, வெட்சியார் பகைவர் நாட்டில் ஆநிரை நின்றுள்ள குறுங்காட்டின் வாயில்களைச் சுற்றி வளைந்து, காவலாளர்களைக் கொன்று அங்குள்ள ஆநிரைகளைக் கைக்கொண்டு, எதிர்த்த பகைவர்களோடு பொருது வெல்வர். பிறகு தாம் கைக்கொண்ட ஆநிரையை அரிய வழியிடத் தும் காட்டிடத்தும் வருந்தாமற் செலுத்திச் செல்வர்.

வெட்சியார் வரவைச் சேய்மையிலிருந்து கண்ட அவர்கள் இனத்தினர் மகிழ்ச்சிக் கூத்தாடுவர். தாம் கொண்டுவந்த ஆநிரையை, ஊர்ப் பொதுமன்றில் நிறுத்தி அவற்றை வீரர்களின் தகுதிக்கேற்பப் பகுத் தளித்து, மனங்களித்து ஆடி மகிழ்வர் அவ்வீரர்கள். பின்னும் கிணைப்பறை கொட்டும் பொருநன், பாணன், விறலி என்பவர்கட்கு வேண்டியன வழங்குவர். பகைப்புலத்தின் தன்மையை அறிந்துவந்த ஒற்றர்

களுக்கும், கரிக்குருவியின் சொல்லாகிய நிமித்தத்தை அறிந்து சொன்ன கணிக்கும், ஆநிரையின் நிறைந்த பங்கைக் கொடுத்துப் பரம்பரையாகத் துடிகொட்டி வருபவனுக்கும் சிறப்புச் செய்து, வெற்றியை அளித்த துர்க்கையை வழிபடுவர். அவ்வீரர்களின் மனைவிய ராகிய மறத்தியர், வள்ளியின் வேடம் புனைந்து முருகபூசை பண்ணும் வேலனோடு வெறியாட்டு ஆடிமகிழ்வர். வெறியாட்டு, வள்ளிக் கூத்து என்றும் கூறப்படும். இவையனைத்தும் வெட்சியின்பாற்படும்.

**கரந்தை :**

தம் நாட்டின் பசுநிரை பகைவரால் கவர்ந்து செல்லப்பட்டதை, அரசன் ஆணையால் அறையப் படும் பறையினால் வீரர்கள் அறிந்தவுடன், தாம் தாம் செய்துகொண்டிருந்த தொழிலை, இருந்த நிலை யிலேயே நிறுத்திவிட்டுக் கரந்தைப் பூவையாவது, அதனாலாய மாலையையாவது சூடுவர். கரந்தை என் பது கொட்டைக்கரந்தை என்னும் பூடு. பின் வீரக் கழல் புனைந்து கொண்டு, வில்லையேந்திக் கூட்ட மாகக் கூடி, ஆநிரையைக் கைக்கொண்ட பகை வர் சென்ற வழியில் பெருமுழக்கத்தோடு சென்று அவரைச் சூழ்ந்து போர் புரிந்து ஆநிரையை மீட்டு வருவர்.

அவ்வீரருட் சிலர் முகத்திலும் மார்பிலும் பட்ட புண்களுடன் வருவர். சிலர் தம் புகழை நிலை நிறுத்தி விட்டுப் போரிலே உயிர் நீப்பர். ஆநிரையை மீட்டுக்கொள்ளும் ஆற்றலின்றிக் கரந்தையர் மீண்டு

செல்லுதலும் உண்டு. அப்பொழுது ஒரு வீரன் தனியே நின்று, போர்க்கருவிகளால் தன்மேல் புண் உண்டாதலை விரும்பிக் கூத்தாடிப் பகைவரைக் கொன்று, அவர்களுடைய குடரை மாலையாகச் சூட்டித் தன் வேலைச் சுழற்றி ஆடுவான்.

ஆநிரை மீட்கும் போரில் இறந்து பட்ட வீரர்களைப் பாணர் புகழ்ந்து அவர்கட்காக இரங்குவர். வெற்றிகொண்ட மறவர், தம் மேம்பாட்டை அரசனிடத்தே எடுத்துக்கூறி மகிழ்வர். தீய அறிகுறிகள் தென்படுவதையும் பொருட்படுத்தாமல், பகைவர் மேல் சென்று பொருது வெற்றி பெற்ற வீரர்களுக்கு வயல் முதலிய வரிசைகளை அரசன் வழங்குவான்.

மறவர்கள் தம் அரசனைப் புகழ்வர். இம்மறக் குடியினர் உலகம் உண்டான காலமுதற்கொண்டு வீரத்தோடு தோன்றி விளங்குபவர்களென்று பாணரால் புகழப்படுவர். இவையனைத்தும் கரந்தைத் திணையுள் அடங்கும்.

## வஞ்சி :

வெட்சி சூடிப் பகைப்புலத்தில் ஆநிரை கவர்ந்த மன்னன் பிறகு பகைவர் நாட்டின்மேல் படையெடுத்துச் செல்வான். அவன் வீரர்கள் முரசை முழக்குவர். யானை முதலியன முழங்கும். மன்னன் தன் குடையையும் வாளையும் நல்ல நாளில் தனக்கு முன்னே செல்லவிடுப்பான். அக்காலத்தில் அரசனுக்கு வெற்றியுண்டாகும் பொருட்டு, வீரர் துர்க்கையை வழிபடுவர்; பிறகு படை வகுப்பில் தத்தமக்கு ஏற்ற நிலையை மேற்கொள்வர்.

வேந்தன் சிறப்பை வீரர் புகழ்ந்து பகைவரது நாடு அழிதலுக்காக இரங்குவர். போரில் பொருத வீரர்களுக்கு அரசன் பல பரிசுகளை வழங்கிச் சிறப்புச் செய்வான். பகைவர் தனக்கு அஞ்சிப்பணிந்து திறையளப்ப, அரசன் சினம் தணிந்து மீளுதலும் உண்டு. பகைவரோடு போரிட்டு வென்ற வீரர்கள் அரசனாற் சிறப்புப் பெற்றதைச் சிலர் புகழ்வர். பகைவரோடு பொருத காலத்தில் சில வீரர் தம்முடைய ஆண்மையை மிகுத்துக் கூறுவர். போரிற் பட்டவர்களுடைய மக்களுக்கு அரசன் விளைநிலம் முதலியவற்றை அளிப்பான்.

சில அரசர் பகைவருடைய நாட்டில் எரியூட்டுவர் ; அங்குள்ள பொருள்களைக் கொள்ளை கொண்டு வருவர் ; அங்ஙனங் கொணர்ந்த பொருள்களைப் பாணர் முதலியவர்களுக்குக் கொடுத்து உவப்பர். சில அரசர் தம்மை எதிர்த்துப் போர் செய்பவரால் குடிகளுக்கு உண்டாகும் துன்பத்துக்கு அஞ்சி, பகையரசருக்கு யானை குதிரை முதலியவற்றைத் திறையாகக் கொடுத்து, அத்துன்பம் உண்டாகாதபடி பாதுகாப்பர். பகைமேற் சென்ற காலத்தில் அரசன் பாசறையை அமைத்து, அதில் படைகளுடன் தங்குவான்.

போர் செய்யுங் காலத்தில், தன்னை எதிர்த்து வந்த படையை ஒரு வீரன் தனியே நின்று பெரு வெள்ளத்தைத் தடுக்கும் அணையைப்போலக் காப்பதும் உண்டு. வீரர், தமக்குத் தோற்றுப் புறங்காட்டுபவரைப் படைகொண்டு தாக்கமாட்டார்கள் ; அவ்வாறு செய்வதை மிகவும் இழிந்த செயலாகவும், போர்

நெறிக்குப் புறம்பான செயலாகவும் கருதுவர். போரில் புறமுதுகிடுவதால் உண்டாகும் புறப் புண் ணுக்காக நாணி வடக்கிருந்து, உணவையும் உண்ணீரையும் நீக்கி உயிர் விடுவர்.

சோழன் கரிகாற் பெருவளத்தானும் சேரமான் பெருஞ்சேரலாதனும் போரிட்டபோது, புறப்புண் நாணிச் சேரமான் வடக்கிருந்ததாக வெண்ணிக் குயத்தியாரால் பாடப்பட்ட பாடல் * ஒன்று புற நானூற்றில் காணப்படுகிறது. சேரமான் வடக்கிருந்த போது கழாத் தலையார் என்னும் புலவர்,

**''தன்போல் வேந்தன் முன்புகுறித்தெறிந்த**
**புறப்புண் நாணி மறத்தகை மன்னன்**
**வாள்வடக் கிருந்தனன்!''—**

என்று பாடியுள்ளதும் நோக்கற்பாலது.

பகையரசர் திறை கொடுத்துப் பணிந்து பகைமை நீங்கிய பின்னரும், சில காலம் அரசன் பாசறையில் இருத்தல் உண்டு. சில அரசர் முதன் முறை தீயிட்ட பின்னரும் தம்மைப் பணியாத பகைவர்களது நாட்டில் மீண்டும் தீயிடுவர். படை வீரர்களுக்குப் போர்க்களத்திலேயே பெறும்படி உணவைத் தருதல் அரசர் வழக்கம். பகைவரது நாட்டின் மேற் படை யெடுத்துச் சென்று தங்கிய பின்பும், அரசர்கள் சினம் தணியாமல் இருத்தல் உண்டு. அக்காலத்தில் பகை வர் நாடு அழிதலை எண்ணிச் சிலர் இரங்குவர். இச் செயல்கள் யாவும் வஞ்சியுள் அடங்கும்.

---

*** புறநானூறு, 65**

**காஞ்சி :**

பகையரசன் தன் நாட்டின் புறத்தே படைகளுடன் தங்கியிருத்தலை அறிந்த ஓர் அரசன், முரசை முழக்கித் தன் வீரர்களைத் திரட்டிக்கொண்டு எழுந்து, பகைவர் படை தன் நாட்டெல்லையுட் புகாதபடி வழிகளைப் பாதுகாத்து நிற்பான். வீரர்களிற் சிறந்தவர்களுக்கு அரசன் படைக்கலங்களை வழங்குவான். அவற்றைப் பெற்ற வீரர் மகிழ்ந்து, தங்கள் ஆற்றலைப் போரில் புலப்படுத்துவர். பகையரசனின் அறை கூவலை ஏற்க இம்மன்னன் தன் வீரரோடு காஞ்சிப் பூவையோ அல்லது மாலையையோ சூடுவான். வாளையும் குடையையும் நல்ல வேளையில் முன்பு செல்ல விட்டு, வஞ்சின மொழிகள் பகர்வான்.

பூதப்பாண்டியனைப் பகை மன்னர் பலர் கூடி **ஒல்லையூர்** என்ற இடத்தில் எதிர்த்தனர். ஒல்லையூர் என்பது இப்பொழுது சோழ நாட்டில் **ஒலியமங்கலம்** என்ற பெயரோடு விளங்குகிறது. அப்போது பூதப் பாண்டியன், "என் மாற்ருரை அலறத் தாக்கித் தேரோடு அவர்களைப் புறங்காணேனாயின், பெரிய அமர்த்த மையுண்ட கண்களையுடைய என் மனைவியைப் பிரிவேனாகுக. அறம் திறம்பாத அவைக்களத்தில், நீதியின் திறம் அறியா ஒருவனை வைத்து, முறை கலங்கிய கொடுங்கோல் செய்தேனாகுக. மாவன், ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதனழிசி, இயக்கன் ஆகிய என் கழிபெரும் நண்பரின் கேண்மையை இழப்பேனாகுக. உயர்ந்த பாண்டியர் குடிப்பிறப்பை நீங்கிப் பிறர் வன்புலம் காக்கும் காவற் கண்ணே பிறப்பேனாகுக" * என்று கூறுகின்றான்.

---

* புறநானூறு 71.

பாண்டியன் நெடுஞ்செழியனைச் சோழன், சேரன் ஆகிய முடியுடைப் பெருவேந்தர் இருவரும், எருமையூரன் முதலிய வேளிர் ஐவரும் ஒருங்கு கூடித் **தலையாலங்கானம்** என்ற இடத்தில் எதிர்த்தனர். அப்போது பாண்டியன்,

"என்மீது போருக்கு வந்துள்ள, புல்லிய சொற்களைக் கூறிய வேந்தர்களைப் போரிலே சிதறடித்து அவர்களைப் புறங் காணேனாயின், என் குடி மக்கள் என்னைக் கொடியவன் என்றும் கொடுங்கோலன் என்றும் தூற்றுவராக. மாங்குடி மருதன் முதலான தலைசிறந்த புலவர் என்னைப் புகழாமற் போக—என் கேளிர் துயரம் அடைய இரப்பவர்க்குக் கொடாத வறுமையை யான் அடைவேனாக"* என்று வஞ்சினம் கூறுகின்றான்.

சோழன் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் போர் ஏற்பட்ட பொழுது நலங்கிள்ளி,

"என் உள்ளத்தை இகழ்ந்த பகைவனை, மூங்கிலைத் தின்னும் வலிய யானையின் காலில் கீழகப் பட்ட மூங்கில் முளையை ஒப்பப் பொருது சிதைக்காவிடின் அன்பில்லாத பொதுப் பெண்டிர் கூட்டுறவு பெற்றேனாகுக"† என்று வஞ்சினம் பகர்கின்றான். மேற் கூறியவை வஞ்சினக் காஞ்சியின் பாற்படும்.

பகைவர்களை எதிர்த்த காலத்தில் இறந்த வீரனுடைய தலையைச் சிலர் சிறப்பித்துப் புகழ்வர்; அத்தலையைக் கொண்டு வருபவர்களுக்கு அரசன் பரிசில்

* புறநானூறு, 72
† புறநானூறு, 73

வழங்குவான். தம் படை வலிமையிழந்த காலத்தில் பகைவராற் சாதலை விரும்பாத வீரர் சிலர் தம்மேல் ஏற்பட்ட புண்ணைத் தாமே கிழித்துக்கொண்டு உயிர் விடுவர். இவை யாவும் காஞ்சித் திணைக் குரிய செயல்களாம்.

**நொச்சி :**

பகை மன்னர் தன்னுடைய மதிலின் புறத்தே வந்து முற்றுகை செய்த காலத்தில் அரசன் நொச்சிப் பூவையேனும், மாலையையேனும் சூடித் தன் மதிலைக் காத்து நிற்பான். நொச்சி சூடிய வீரர்கள், மதிலைச் சூழ்ந்த படையை எதிர்த்துப் போரிடுவர். காவற்காடும் அகழியும் சிதையாமல், முற்றுகையிடும் வீரர்களை வெற்றிகொள்வர்.

பகைவரால் விடப்பட்ட குதிரை மதிலுக்குள் தாவிவரும். மதிலில் நின்று போர் புரியும் வீரர் சிலர் இறக்க, அவர்களுடைய உடலின் பகுதிகள் மதிலுக்குப் புறத்திலும் அகத்திலும் சிதறிவிழும். பகைவரின் தாக்குதலுக்கு அஞ்சிச் சில வீரர் பின்வாங்க, வேறு சிலர் அச்செயலுக்குச் சினந்து மதிலைக் காப்பர். மதிலிலுள்ள வீரர் மகளை வெளியிலுள்ள பகைவர் விரும்பி வேண்ட, அதற்கு இணங்காமல் வீரம் பேசுதல் நொச்சியார் இயல்பு.

**உழிஞை :**

பகையரசருடைய மதிலைக் கைக்கொள்ளக் கருதிப் படையெடுத்துச் செல்லும் மன்னர், உழிஞைப் பூவைச் சூடிச் செல்வர். குடையையும்

வாளையும் முன்னே செல்லவிடுத்து, முரசிற்குப் பூசை செய்து அடித்து முழக்கி, ஊக்கம் வன்மை சூழ்ச்சி முதலியவற்றைக் கைக்கொண்டு படைகளுடன் போருக்கு எழுவர்.

அக்காலத்தில் திருமால் 'சோ' வென்னும் மதிலையும் சிவபெருமான் 'திரிபுரங்களை'யும் அழித்த செயல்களையும், முருகவேள் சூரபன்மனை வெல்லக் கருதிக் காந்தளாகிய அடையாளப் பூவைச் சூடியதையும், அரசனுக்கு ஊக்கமுண்டாதற்பொருட்டுச் சிலர் சிறப்பித்துப் பாடிச் செல்வர். அரசன் படைகளுடன் சென்று, மதிலின் வெளிப்புறத்தில் பாசறை அமைத்துத் தங்குவான். வீரர்கள் பகைவருடைய மதிலின் இயல்பையறிந்து கூறுவர்; யானையை ஏவி அதன் கொம்பால் மதிற்கதவைப் பிளக்கச் செய்து மதிலைக் கைக்கொள்வர் ; காவற் காட்டைக் கடந்து நாவாய், தோணி முதலியவற்றால் அகழியைக்கடந்து போர் செய்வர் ; மதிலின் மேல் அமைக்கப்பட்டுள்ள பொறிகள் பல வகையாகத் தம்மை வருத்தினலும், அஞ்சாமல் அம்மதிலின் மேல் ஏணியைச் சாத்தி ஏறி உள்ளே குதிப்பர். சிலர் அம்மதிலின் உள்ளே இருப்பவருடைய தொகையை அறிந்து கூறுவர்.

விடியற் காலையில் மதிலினுள் உள்ள அரசனது முரசம் அதிர, அதனற் சினம் கொண்ட வெளியிலுள்ள மன்னன் சமைத்தற்குரிய அகப்பை முதலிய கருவிகளை மதிலினுள் எறிந்துவிட்டு, 'இன்று மாலைக்குள் இம்மதிலைக் கைக்கொண்டு உட்புகுந்து, பிறகே சமைத்து உண்போம்' என்று வஞ்சினம் கூறுவான்.

மதிலின் புறத்தே ஓர் அரசன் முற்றுகையிடுதலை அறிந்து, மதிலிலுள்ளவருக்கு நண்பராகிய அரசர், அவ்வேற்றரசனோடு பொருது துரத்த வருதலும் உண்டு.

மதிலைக் கைக்கொண்ட பிறகு, அரசன் அதனுள் கழுதை ஏரால் உழுவித்துக் கவடியையும் வேலையும் விதைப்பான். பின்பு வீரர் அவனது வாளைப் புனித நீரால் மஞ்சனமாட்டுவர்; மன்னன் மதிலைக் கைக்கொண்ட வெற்றியைப் புகழ்வர்.

பகையரசர் சிலர் பணிந்து திறைகொடுப்ப, எதிர்த்த அரசன் முற்றுகையைக் கைவிடுவான். பகைவர் அடிபணிந்த பின்னும் நீண்ட காலம் இருந்த இருப்பிலே அவன் இருத்தலும், பல அரண்களிலுமுள்ள வேந்தர் யாவரும் அவனுக்கு முன் தம் வலியிழந்து அடிபணிதலும் உண்டு.

## தும்பை :

போர்க்களத்தில் மாறுபட்ட இரு மன்னர்களின் படைகள் எதிர்ப்படும்போது அவர்கள் தும்பைப் பூவையேனும் மாலையையேனும் அணிந்திருப்பர். போர் செய்யப் புகுமுன், மன்னர் தம் வீரர்களுக்கு விளை நிலம், பொருள், யானை, குதிரை முதலிய வரிசைகள் வழங்குவர். அப்பொழுது போரினால் இருதிறத்துச் சேனைகளும் பொருது மடியாமற் காத்தல் அரசனுடைய கடமையென்று சிலர் கூறுவர். சிலர் காலம் கடத்தாமல் போர் செய்வதால் வெற்றியுண்டாகுமென்று மொழிவர். வேறு சிலர் அரசனுடைய படையின் வீரமிகுதியைப் பாராட்டிப் பகைவர் அறி

யார் என இரக்கப்படுவர். யானை குதிரை முதலியன போரில் தத்தம் ஆற்றலை வெளிப்படுத்தி நிற்கும்.

போர் புரியுங்காலத்தில் தனியே நின்ற அரசனைப் பகையரசர் பலர் சூழ்ந்துகொள்ள அங்கே யுள்ள தனி வீரனொருவன் வீரத்தோடு போரிட்டு அவர்களை வெல்வதுண்டு. அரசனது தேர் உதிர வெள்ளத்தில், பகைவருடைய பிணங்களின் மேல் ஊர்ந்துவரும். போரில் யானையை எறிந்து இறந்து பட்ட வீரரைக் குறித்துப் பாணர் நெருப்பை மூட்டிச் சாப்பண்ணாகிய '**விளரி**'யைப் பாடுவர். போரில் இரு திறத்துப் படைகளும் அரசர்களும் முற்ற அழிவது முண்டு.

தம் சேனை புறமுதுகிட்டு ஓடும்போது வீரர் சிலர் அதன்பின்னே நின்று, தொலைவில்வரும் பகைவரோடு போர் புரிவர். சிலர் தம் கையிலுள்ள வேல்களை யானைமேல் எறிந்து படைக்கலமின்றி நின்ற பொழுதும், தம் தோளையே கொம்பாகக் கொண்டு ஆண் எருமையைப் போல் எதிர்த்து வெற்றி கொள்வர். சிலர் பகைவரைக் கொன்று வேலைச் சுழற்றி ஆடுவர். சிலர் தம்மேல் தைத்த வேலைப் பறித்து, அதனையே கொண்டு பகைவரோடு போர் செய்வர். இது **நூலிலாட்டு** எனப்படும். "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியா நகும்"—என்ற குறள் இதற்குச் சிறந்த இலக்கியமாகும்.

வெற்றி பெற்ற வேந்தனது தேரின் முன் வீரர்கள் ஆடுவார்கள். அதன்பின் விறலியர்களும் ஆடுவார்கள். மன்னனோடு வாள் வீரர் முழங்கி ஆடுவர்.

இரண்டு படையினரும் ஏத்தும் வண்ணம் வீரத் தோடு படை நடுவே மன்னன் நிற்பான்.

வீரர் சிலர் தம் உடம்பில் அம்புகள் பட்டு நிலத் தைத் தீண்டாமற் கிடப்பர். போரிற் பட்ட வீரரை அவர்கள் மனைவியர் வந்து கண்டு தழுவுவர். அவர் களுட் சிலர் தம் கணவர்கள் விழுப்புண்ணோடு இறந்ததைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிவர். தம் வேந்தன் போரில் இறந்து படின், வீரர் தம் உயிரையும் போக்கிக் கொள்வர். இச்செயல்கள் யாவும் தும்பைத் திணையுள் அடங்கும்.

**வாகை :**

பகையரசரை வெற்றிகொண்ட மன்னன் வாகை மாலையைச் சூடுவான். அவனுடைய அரண்மனையில் வெற்றி முரசு முழங்கும். சேனையாகிய வரம்பை யுடைய போர்க்களமென்னும் வயலுள், கோப மாகிய வித்தை யூன்றி, வேலாகிய கோலையும், யானை யாகிய எருதையும் உடையவனுகிப் புகழை விளை விக்கும் உழவனுக, அரசன் சிறப்பிக்கப்படுவான். போரை வென்ற அரசன் கள வேள்வி செய்வான். "உன்னுடைய புகழையும் பெருமையையும் எண் ணிச் செருக்குற்றுப் பிறரை எள்ளி நகையாடுதலை நீக்குவாயாக" என்று அறிவுடையோர் அரசனுக்குக் கூறுவர். அரசனுடைய குடையைப் பலர் பலவாறு சிறப்பிப்பர். "தன் பகைஞர்களை அடக்கி உலகில் அமைதியை நிலை நிறுத்தினமையால் இவனுடைய

கண்கள் சினக் குறிப்பின்றி உறங்குகின்றன" என அவன் துயிலைச் சிறப்பித்துச் சிலர் பாராட்டுவர்.

## படைக் கருவிகள் :

பண்டைத் தமிழர் பலதிறப்பட்ட படைக்கலங்களைப் போரில் பயன்படுத்தினர். அவை இரும்பாலும் செம்பாலும் செய்யப்பட்டவை. அவை அடார், அம்பு, அரம், அரிவாள், எஃகு, கண்ணுடை தைத்த கேடகம், கணிச்சிப்படை, கலப்பை, கர்லெஃகம், குந்தாலி, குறடு, கேடகம், கோடரி, சக்கரம், சிறியிலை எஃகம், தறிகை, நவியம், படைவாள், பூண் கட்டிய தண்டு, மழு, வாள், வில், வேல் முதலியன. அவை அடிக்கடி சாணை பிடிக்கப் பட்டுத் துருப் பிடிக்காமலிருக்க நெய் பூசப்பட்டு மயிற்பீலி அணியப்பட்டு, அணிபெறப் படைக்கலக் கொட்டிலில் வைக்கப்பெறும்.

## அரண்கள் :

வானத்தையளாவிய அரண்கள் கற்களால் கட்டப்பட்டன. அதன் வாயில்கள், யானை தம் அம்பாரியோடு சென்றாலும், தடை செய்யாத அளவு உயர்ந்திருந்தன. அவ்வாயில்களை அடைக்க மரத்திறற் செய்யப்பட்ட பெருங் கதவுகள் பொருத்தப் பட்டிருந்தன. அக்கதவுகள் சிற்ப வேலைப்பாட்டோடு கூடி அழகுடன் விளங்கின. அக்கதவுகளை உள்ளிருந்து தாங்க உரமான கணைய மரங்கள் பொருத்தப் பட்டிருந்தன. கோட்டை மதிற் புறத்தே அகன்ற ஆழமான அகழி உண்டு. அவ்வகழிகளில் கராம்

முதலைகள் செருக்கித் திரிந்தன. அவ்வகழியின் புறத்தே காவற்காடு அமைந்திருந்தது.

கோட்டை மதில்களில், மிகவும் நூதனமான பொறிகள் அக்காலத்திலேயே பொருத்தப்பட்டிருந்தன. அவைகளின் சிறப்பு மிகவும் போற்றற் குரியதாகும். மாற்ருரைக் கடித்துத் துன்புறுத்தும் கருங் குரங்கு போன்ற பொறியும், கல்லினை வீசுகின்ற கவணும், அருகில் வருவோரின் மேல் கொதித்த நெய்யை வீசும் பொறியும், செம்பினை உருக்குகின்ற குழிசிகளும், இரும்பு காய்ந்து உருகுவதற்கு வைத்த உலைகளும், கல்நிறைய இடப்பெற்ற கூடைகளும், வந்தோரை மாட்டித் துன்புறுத்தும் தூண்டில் போன்ற கருவிகளும், கழுத்திற் பூட்டி முறுக்கும் சங்கிலியும், ஆண்டலைப்புள் வடிவாகச் செய்த அடுப்புகளும், அகழியினின்று ஏறின் தள்ளுகின்ற இரும்புக் கப்புகளும், கழுக்கோலும், அம்புக்கட்டுகளும், நுழைவோரை மயங்க வைக்கும் அறைகளும், தன்னை நெருங்கிஞேர் தலையை நெருக்கித் திருகும் மரங்களும், மதிலின் உச்சியைப் பற்றுவார் கையை நடுங்கச் செய்யும் ஊசிப் பொறிகளும், பகைவர்மேற் சென்று தாக்கும் சிச்சிலிப் பொறியும், மதிற்கண் ஏறிஞரைக் கோட்டாற் கிழிக்கும் பன்றிப் பொறியும், மூங்கில் வடிவாகச் செய்து அடித்தற்கு வைத்த பொருள்களும், கதவிற்கு வலியாக உள் வாயிற்படியிலே நிலத்தில் வீழவிடு மரங்களும், எறிகோலும், சிறு சவளமும், ஈட்டி முதலியனவும் மதிலின் மேற் பொருத்தப் பட்டிருந்தன. *

* சிலப்பதிகாரம்—மதுரைக் காண்டம்

### போர்க் கொடிகள் :

விற்கொடியும், புலிக்கொடியும், மீனக்கொடியும் முறையே சேர சோழ பாண்டியர்க்குரியபோர்க்கொடி களாக விளங்கின. இவைகளல்லாமல் காளைக் கொடி, கருடக்கொடி, துகிற்கொடி, நாட்கொடி, பனைக்கொடி, மயிற்கொடி, விசயக்கொடி (வெண் கொடி) முதலியவை சிற்றரசர்கட்கும் வேளிர்களுக் கும் உரியனவாக விளங்கின.

### படை வகுப்பு :

சங்க காலத்தில் பொதுவாகத் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என நாற்படைகள் இருந்தன. இன்னும் முன்படை, பின் படை, தூசிப்படை, கிடுகுப்படை, விற்படை, வாட் படை, வேற்படை, பக்கப்படை என்ற சிறப்புப் பிரிவு களும் இருந்தனவாக அறிகிறோம். அரசனே படைத் தலைமை தாங்கிப் போர் நடத்தி வந்தான். **பெருஞ் சோழர்** (Imperial Cholas) காலத்தில் யானைப்படை யும், குதிரைப்படையும், காலாட்படையுமே இருந் தன. யானை வீரர்கள் **குஞ்சரமல்லர்** என்று அழைக்கப் பட்டனர். குதிரைப்படை 'பரிப்படை' என்ற பெய ரால் அழைக்கப்பட்டு வந்தது. காலாட்படைஞர்கள் **கைக்கோளப் பெருமக்கள்** என்று அழைக்கப்பட்டு வந்தனர். வில் வீரர்கள் **வில்லிகள்** என்றும், வேல் வீரர்கள் **வேல் பெற்ற கைக்கோளர்** என்றும் **வலங்கை வேலைக்காரர்** என்றும் அழைக்கப்பட்டனர்.

பெருஞ்சோழர்கள் **எல்லைப்படைகளும்** (Territorial Divisions) வைத்திருந்தனர். பாண்டி நாட்டின்

எல்லையில் வைக்கப்பட்டிருந்த படை பாண்டிப் படை என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. காவற் படை (Garrisons) வைத்திருந்தனர். உள்நாட்டுப் படை வீடுகள் (Cantonments) கடகம் என்ற பெய ரால் அழைக்கப்பட்டன.

இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன்பிருந்தே தமிழ் மன்னர்கள் கப்பற்படை வைத்திருந்தனர். கப்பலைக் குறிப்பிடக் கலம், நாவாய் என்ற சொற்கள் சங்க இலக்கியங்களில் மலிந்து காணப்படுகின்றன. எனவே, தமிழகத்தில் கப்பற்படையின் தொன்மை விளங்கும். நேவி (Navy) என்ற ஆங்கிலச் சொல் தமிழ்ச் சொல்லாகிய நாவாய் என்பதிலிருந்து பெறப் பட்டதாகும். பருவக் காற்றின் திறமறிந்து கலம் செலுத்தியவர் உரோமானியரே என்பர் மேலைநாட்டு வரலாற்றாசிரியர். அக்கூற்று பிழைபட்ட தாகும். "நளியிரு முந்நீர் நாவாயோட்டி வளிதொழிலாண்ட உரவோன் மருக"* என்ற வெண்ணிக் குயத்தியாரின் புறப்பாட்டால் கரிகாலன் முன்னோர் காற்றின் வகை தெரிந்து கலம் செலுத்திய வரலாறு விளங்கும். சேர மன்னனான நெடுஞ்சேரலாதன் கப்பற்படையின் துணைகொண்டு மேற்கடலில் இருந்த தீவுகளின்மேற் படையெடுத்துச் சென்று கடம்பெறிந்தான் என்ற வரலாறு, கிரேக்க ஆசிரியரான தாலமியின் குறிப்பு களில் காணக் கிடக்கிறது. பதிற்றுப்பத்தும் இதை வலியுறுத்தும்.

இராசராச சோழன் கப்பற்படையின் துணை கொண்டு ஈழத்தையும், மாலத்தீவுகளையும் (Maladive Isles) வென்றான். அவன் மகனான இராசேந்திரன்

---

* புறநானூறு 66.

ஸ்ரீவிஜயம், கடாரம், நக்கவாரத் தீவுகள் முதலிய வற்றை வென்றான். காந்தளூர்ச்சாலை என்ற சேர நாட்டுக் கடல் துறைப்பட்டினத்தில் சோழர்களின் கப்பற்படை யொன்று இருந்தது.

**மகளிர் வீரம்:**

ஆடவர்கட் கொப்பத் தமிழ் மகளிரும் வீர உணர்வு பெற்று விளங்கினர்; அளவற்ற நாட்டுப் பற்றும் மானஉணர்ச்சியும் கொண்டிருந்தனர்; சிறந்த வீரர்களைத் தமக்குரிய கணவராகப் பெறப் பெரிதும் விழைந்தனர்; புலியைக் கொன்று அதன் பல்லைத் தாலியாக அணிவிக்கும் காளையைப் பெரிதும் விரும்பினர். பண்டைத் தமிழகத்தில் ஏறு தழுவல் என்னும் வீர விளையாட்டு சிறப்பாகப் போற்றப்பட்டு வந்தது. பருவமடைந்த ஒரு பெண்ணோடு ஒரு முரட்டுக் காளையையும் பெற்றோர் வளர்ப்பர்; அம் முரட்டுக் காளையை அடக்கும் வீரனுக்கே தம் மகளை மணமுடித்து வைப்பர். முல்லை நிலக் கடவுளான திருமால்கூடத் தன் காதலியான நப்பின்னையை ஏறுதழுவி மணந்ததாகக் கூறுவர்.

முதல் நாள் போரில் தமையனையும், இரண்டாம் நாட்போரில் கொழுநனையும் இழந்த ஒரு மறப்பெண், மூன்றாம் நாள் போர்ப்பறையின் ஒலிகேட்டுப் பால் மணம் மாறாத் தன் ஒரே மகனைப் பாறுமயிர்க் குடுமி எண்ணெயிட்டு நீவி, வெள்ளுடை விரித்துடுத்தி, வேலைக் கையில் கொடுத்துப் போர்க்களம் நோக்கி அனுப்பிய வீர வரலாறு, ஒக்கூர் மாசாத்தியாரின் புறப்பாட்டில் விரித்துரைக்கப் படுகிறது. காவற் பெண்டு என்ற மற்றோர் பெண்பாற் புலவர் வீரமகனை

யீன்ற தம் வயிற்றைப் "புலி வாழ்ந்து போகிய கல்லளை"க்கு ஒப்பிட்டுப் பெருமைப்படுகின்றார்.

மற்றொரு மறத்தி, தன் மகன் போரில் புறப்புண் பட்டு இறந்தான் என்று கேட்டு, அவன் செயலுக் காக வெட்கி, "இஃது உண்மையாயின் அவனுக் குப் பாலூட்டிய என் மார்பை அறுத்தெறிவேன்" என்று வஞ்சினம் கூறிப் போர்க்களம் புகுந்தாள்.

போர்க்களத்தில் கணவர் உயிர் நீங்கினால், அவர் பட்ட வேலால் தாங்களும் உயிர் விடுப்பர் சில மகளிர். சிலர் தீப்பாய்ந்து இறத்தலும் உண்டு. வேறு சிலர் போரில் பட்ட தம் கணவரின் வீரத்திற்கு அறிகுறியாக நாட்டப்பட்ட நடுகல்லுக்கு நாள் தோறும் வழிபாடு நிகழ்த்தித் தம் எஞ்சிய வாழ்நாட் களைக் கழிப்பர்.

எனவே மேற்கூறிய செய்திகளிலிருந்து, தமிழ்க் குடியின் வீரமும், அஞ்சாமையும், போர்ப்பண்பும் விளங்கும். இன்னும் சுருக்கமாகச் சொன்னால் தமிழ் நாட்டு ஆண் மக்கள், தங்கள் வாழ்வின் குறிக் கோளாகவும், கடமையாகவும் போர் செய்தலைக் கருதினர்.

ஆனால், கிரேக்கர்களைப்போலவோ உரோமானி யர்களைப் போலவோ தமிழர் என்றும் பேராட்சி வெறியராக (Imperialists) இருந்ததில்லை. கரிகாலன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன், இராசேந்திரன் போன்றாரின் வடநாட்டுப் படை யெடுப்புகள், தங்கள் பெருமையை நிலைநாட்டுவ தற்காக மேற்கொள்ளப் பட்டனவேயன்றிப் பிறர் நாட்டைக் கவர்ந்து அடக்கியாள்வதற்காக அன்று.

# 3. போரியல் மக்கள்

**கிரேக்கர்கள் :**

கிரேக்கம் (Greece) என்ற சொல் மேலை நாட்டு வரலாற்றில் பொன் எழுத்துக்களில் பொறிக்கத்தக்க தாகும். கிரேக்கர்களைத் தங்கள் மூதாதையர் என்று கூறிக் கொள்வதில் மேலைநாட்டில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் பெருமை கொள்கிருன். வீரம், கலை,இலக் கியம், தத்துவம் முதலியவற்றை மேலை நாடுகளுக்கு வாரிவழங்கி, மங்காப் புகழ்கொண்டது கிரேக்கநாடு. மக்களாட்சி முறையைஉலகுக்குவகுத்துக்கொடுத்து, 'மக்களாட்சியின் தந்தை' என்ற பெயருக்கு உரிமை கொண்டதும் கிரேக்கமே. கிரேக்கம் என்ற சொல் நம் செவியில் விழுந்ததும், இன்றைய விஞ்ஞான உலகம் நம் உள்ளத்தினின்றும் மறைந்து விடுகிறது. **திராய்** நகரின் மேல் மாடத்தில், அமரகவி ஹோமரின் அழகோவியமான **இலியாதின்** தலைவியும், அழகிற்கு ஓர் எல்லைக் கல் என்று மேலைநாட்டுக் கவிஞர்களால் போற்றிப் புகழப்படுபவளுமான **ஹெலன்,** யாழையும் குழலையும் வெறுக்கச்செய்யும் தன் தீங்குரலால் இன்னிசை எழுப்பிக் காந்தள் மலர் போன்ற தன் மென் கரத்தால்இசைக் கருவியை மீட்டித்தென்றலில் மெல்லென அசைந்தாடும் மலர்க்கொடிபோல் காட்சி யளிக்கிருள். திராய் நகரத்தோடு கிரேக்கநாட்டின் மாபெரும் வீரர்களின் அழிவுக்குக் காரணமாக விளங்கிய அவள் ஒப்பற்ற அழகைக் கண்டு வியந்த வண்ணம் நாம் இருக்கிரேம். ஹோமரின் இலியாது

(Iliad), ஒதீசியம் (Odyssey) ஆகிய இரு அமரகாவியங்களும், அன்றைய கிரேக்க நாட்டின் புகழ் மணத்தைப் பரப்பிய வண்ணம் நம் கண்ணெதிரே தோன்றுகின்றன. உலிசிஸ், அகில்லிஸ், ஹெக்டர், ஹெர்குலிஸ் போன்ற அரியேறுகள் விளைத்த வீரம் நம் கண்முன் நிழலாடுகிறது. ஏதென்ஸ் நகரின் எழில் மிக்க சிற்பங்களும், கலைக் கூடங்களும் தோன்றுநிற்கின்றன. அந்நகரின் முச்சந்தியில் பேரறிஞர் சோக்ரதர் (Socrates) மக்களின் அறியாமை இருளைத் தம் பகுத்தறிவுத் தீவர்த்தியால் விலக்குகிறார். மாவீரன் அலெக்சாந்தர் பாருலகம் கண்டும் கேட்டுமிராத தன் பெரும் படையின் அணிவகுப்பைப் பாரசீகப் பேரரசை நோக்கிச் செலுத்தி, அதைச் சுடுகாடாக்குகிறான். இச்செய்திகள் யாவும் பண்டைக் கிரேக்க நாட்டின் படப் பிடிப்புகள்.

கலைக்கும் நாகரிகத்திற்கும் ஒரு கலங்கரை விளக்கமாக நின்று விளங்கிய கிரேக்க நாடு, வற்றாத பேராறுகளும், வளங்கொழிக்கும் சமவெளிகளும் அற்ற ஒரு மலைநாடு. மலைப் பகுதிகளில் வாழும் மக்கள், இயற்கையிலேயே உடற்கட்டும், வன்மையும், சகிப்புத் தன்மையும், போர் வெறியும் கொண்டவர்கள். கிரேக்கர்கள் இந்தோ-ஆரிய (Indo-Aryan) இனத்தைச் சேர்ந்தவர்கள்; அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். போர் அவர்களுக்குப் பொழுது போக்கு. வீரம் மிக்கவன் கிரேக்க சமுதாயத்தில் மிகவும் சிறந்தவனாக மதிக்கப்பட்டான். கிரேக்க மகளிர், வீரம் மிக்க ஆடவரை விருப்பொடு மணம் ஏற்றனர்.

கிரேக்க நாடு பல நகர அரசுகளாக (City States) விளங்கியது. ஒவ்வொரு நகரமும் மக்களின் உடல் வன்மையைப் பெருக்குவதிலும், படையை வலிமை மிக்கதாக அமைப்பதிலும், பெரிதும் கவனம் செலுத்தியது. கிரேக்க சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு துறையும் போரின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

அந்நாட்டில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும், நல்ல வளமுள்ள உடலைப் பெற்றிருக்கிறதா என்று அரசியலாரால் ஆய்ந்தறியப்பட்டது. நலமற்ற உடலைப் பெற்ற குழந்தைகள், மலையுச்சியிலிருந்து எறிந்து கொல்லப்பட்டன. ஏழு ஆண்டுகள் நிரம்பியதும், குழந்தைகள் அரசியலாரிடம் ஒப்படைக்கப் பட்டன. மிகவும் துன்பமான வாழ்க்கையையும் ஏற்றுப் பொறுத்துக் கொள்ளும் நிலையில் அவை பெரிய இராணுவப் பள்ளிகளில் வளர்க்கப்பட்டன. இப் பள்ளிகளில் ஏட்டுக்கல்வி அதிகம் இடம் பெறவில்லை. சிறந்த உடற்பயிற்சியும், படைக்கலப் பயிற்சியும், குதிரை ஏற்றமும், தேர் செலுத்துதலும் நன்கு பயிற்றுவிக்கப்பட்டன. இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து தவறிய இளைஞர்கள் கடுமையாகக் கசையடி கொடுக்கப்பட்டனர். இருபதாம் ஆண்டு கழியப்பெற்றதும், அவர்கள் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். முப்பதாண்டு கழியும் வரையிலும், இராணுவ மனையிலேயே (Barracks) வைத்துக்கொள்ளப்பட்டனர். முப்பதாண்டுகளுக்குப் பிறகே, அவர்கள் ஒரு குடிமகனுக்குரிய முழுத்தகுதி பெற்றவர்களாகக் கருதப்பட்டனர்.

இக்குடி மக்கள் ஊர்ப்பொது உணவு விடுதி (Public mess)களில் உண்டனர். அவ்வுணவு விடுதி கள் பிடிஷியா (Phiditia) என்று அழைக்கப்பட்டன. போர்க் காலங்களில் இவ்வுணவு விடுதிகள் ஒன்ருக இயங்கிப் போர் வீரர்கட்கு உணவைப் பங்கிட்டு வழங்கின. கிரேக்க நாட்டு மகளிர் கூட, உடற் கட்டும் வனப்பும் பெற்று, வலிவுள்ள குழந்தைகளைப் பெறுவதற்காக, ஆண்களைப்போல் உடற் பயிற்சி யளிக்கப்பட்டனர்.

கிரேக்கர்களின் போர்க்கடவுள் ஏர்ஸ் (Ares) ஆகும். அவர்களுடைய திருவிழாக்கள் யாவும் வீர விளையாட்டுக்களும், போட்டிகளும் நிறைந்து விளங் கின. காரணம், கிரேக்கக் கடவுளர் அவ்விளையாட் டுக்களால் மகிழ்ச்சியுறுவதாக அவர்கள் கருதினர். ஒவ்வோர் நகரிலும் விளையாட்டுப் போட்டிகள் நடை பெற்றன. ஓட்டப்பந்தயமும், தேர் செலுத்தும் போட்டியும், மற்போரும், குத்துச்சண்டையும், வட்டு எறியும் போட்டி (Disc Throw) யும் பெரும்பாலும் இடம் பெற்றன. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற வன் தலையில் **ஆலிவ்** அல்லது **லாரல்** இலையால் செய் யப்பட்ட முடியை அம்மக்கள் சூட்டினர். அவ்வீரன் மக்களால் சிறப்பாக மதிக்கப்பட்டான்.

இவ்வீர விளையாட்டுப் போட்டிகளில் சிறப் பானது **ஒலிம்பியன்** விளையாட்டுப் போட்டியாகும். இப்போட்டி முதன் முதலாகக் கி. மு. 776-இல் **ஒலிம்பியா** என்ற இடத்தில் நடத்தப்பட்டது. இப் போது நடைபெறும் உலக விளையாட்டுப் போட்டி யின் பெயரான **ஒலிம்பிக்** என்பது ஒலிம்பியா என்பதி

விருந்து பெறப்பட்டதாகும். பண்டைக்கிரேக்க நாட்டில் இப்போட்டிகள் நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டது. கிரேக்க உலகில் வாழ்ந்த எல்லா வீரர்களும் இதில் பங்கு கொண்டனர். பாரின் பல பகுதிகளிலிருந்து மக்கள் இப்போட்டியைக் காண விரைந்தனர். மேலும் இவ்விழா சிதறுண்டிருந்த கிரேக்க மக்களின் ஒற்றுமை வளர்ச்சிக்கும் நாட்டுப் பற்று மறுமலர்ச்சியடைவதற்கும் பெரிதும் உதவியது.

•

கிரேக்கர்கள் சிறந்த கோட்டைகளும், அரண்களும் கட்டி வாழ்ந்தனர். திராய் நகர்க் கோட்டையானது பன்னிரண்டு ஆண்டு முற்றுகைக்கும் தலை குனியாமல் வீறுகொண்டு நிமிர்ந்து நின்றது என்று 'இலியாது' கூறும். அக்கோட்டையைப் புதை பொருள் ஆராய்ச்சியாளரில் ஒருவரும், ஜெர்மானிய நாட்டைச் சேர்ந்தவருமான **என்ரிச் ஸ்கிகிமன்** என்பார் நிலத்தைத் தோண்டிக் கண்டறிந்து, உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளார். ஹோமரால் இலியாதில் அது எவ்வாறு சிறப்புறக் கூறப்பட்டுள்ளதோ அவ்வண்ணமே அது எழிலோடும், இகல் வேந்தரால் எய்தற்கரிய வன்மையோடும் விளங்குகிறது. கிரேக்க வீரர்கள் வில்லும், வேலும், வாளும், கோடரியும் தங்கட்குரிய சிறந்த படைக் கலன்களாகக் கொண்டிருந்தனர். அவை பெரும்பாலும் வெண்கலத்தால் செய்யப்பட்டவை.

கிரேக்கர்கள் கலஞ்செலுத்துவதில் வல்லுநர்கள். மத்தியதரைக் கடலில் அவர்களின் கப்பற்படையரசி

தனியரசு செலுத்தினுள். அவர்கள் கப்பற்படையின் பெருமைக்கு ஹோமரின் இலியாது சிறந்த சான்று பகர்கிறது. கப்பற்படையின் அணிவகுப்பைப்பற்றிய ஹோமரின் வருணனை (Episode) அக்காவியத்திற்கு ஒரு தலைமணி போன்றதாகும்.

கிரேக்க மக்களின் மறப்பண்பைப் பற்றிப் பேசும் போது, **ஸ்பார்ட்டா** நகர வீரர்கள் **தர்மாப்பைலி** என்ற இடத்தில் விளைத்த வீரச் செயலைக் குறிப்பிடா மலிருக்க முடியவில்லை. கி. மு. நான்காம் நூற்றுண்டில் பாரசீகம் மாபெரும் வல்லரசாக விளங்கியது. சிற்றுசியாவிலிருந்து சிந்து நதிவரையில் அது பரவியிருந்தது. எகிப்து கூட அப் பேரரசில் அடங்கியிருந்தது. ஆனுல், கிரேக்கத் தாயகத்தின் ஒரு சிறிய புழுதி மண்ணைக்கூட அப்பேரரசால் கைப்பற்ற முடியவில்லை.

**ஸெர்க்சிஸ்** என்பவன் புகழ்மிக்க பாரசீக வேந்தன். தன் மூதாதையால் வெற்றி கொள்ள முடியாத கிரேக்க நாட்டை எவ்வாறேனும் தன்னடிப்படுத்த வேண்டுமென்று அவன் பேராவல் கொண்டான்; மாபெரும் படைதிரட்டிக் கொண்டு சிற்றுசியா வழியாகச் சென்றுன்; டார்டனல்ஸ் கடலிணைக் (அக்காலத்தில் ஹெல்லஸ்பாண்ட் அல்லது கிரேக்கக் கடல் என்று அழைக்கப்பட்டது) கால்வாயைக் கடந்து ஐரோப்பாவிற்குள் புகுந்தான்; இக்கால்வாயைக் கடக்க ஒரு பெரிய பாலம் அமைக்கப்பட்டது. இக்கால்வாயின் வழியாகத் தன் படை அணிவகுத்துச் சென்ற காட்சியை, அருகிலிருந்த குன்றின்

உச்சியில் சலவைக் கல்லால் செய்யப்பட்ட அரியணையில் வீற்றிருந்த அம்மன்னன் பார்த்தான். கிரேக்கக் கடலில் தன் கப்பல்கள் மொய்த்து நிற்பதையும், கடற்கரையிலும் சமவெளியிலும் தன் போர் வீரர்கள் மொய்த்து நிற்பதையும் கண்டு அவன் பெருமிதமும், பூரிப்பும் கொண்டான்.

இம்மாபெரும் படைவெள்ளத்தைக் கண்ட சிறிய தொகையினராகிய கிரேக்கர்கள் செய்வதறியாது திகைத்தனர். கிரேக்கப் படை பின்வாங்கிச் சென்று, பாரசீகப் படையைத் தர்மாப்பைலி என்ற இடத்தில் தடுத்து நிறுத்த முயன்றது. ஒரு பக்கத்தில் மலையும், மற்றொரு பக்கத்தில் கடலும் உடைய குறுகலான வழி இது. ஆகவே ஒரு சிலர் கூடப் பெருஞ் சேனையை இவ்விடத்தில் எதிர்த்து நிற்கலாம். பாரசீகப் படையை எதிர்ப்பதற்கு **லியோனிடஸ்** என்பானைத் தலைவனாகக் கொண்ட முந்நூறு கிரேக்க வீரர்களடங்கிய சிறுபடை ஒன்று அனுப்பப்பட்டது. அஞ்சா நெஞ்சும், அசைவற்ற ஊக்கமும் கொண்ட அவ்வீரர்கள் தங்கள் நாட்டின் தலை விதியை முடிவு செய்ய வேண்டிய அந்நாளில் போற்றற்குரிய நாட்டுப் பற்றையும் வீரத்தையும் வெளிப்படுத்தினர். ஒருவர்பின் ஒருவராக அப்பெரும்படையை எதிர்த்து மாண்டனர். பாரசீகச் சேனை முன்னேறிச் செல்ல முடியவில்லை. முந்நூறு பேரும் இறந்த பிறகே செல்ல முடிந்தது. தர்மாப்பைலிக்கு நாம் இன்று சென்றால் கூட அங்குக் கல்லில் பொறித்திருக்கும் கீழ் வரும் செய்தியைக் கண்டு கண்கலங்கி நிற்போம்.

"இவ்வழியே போகும் நீங்கள் ஸ்பார்ட்டா நகருக்குச் சென்று, தாயகத்தைக் காப்பதற்காக எங்கள் கடமையை ஆற்றி, நாங்கள் இங்கு இறந்து பட்ட செய்தியை அங்குள்ளவர்களுக்குச் சொல்லுங்கள் !"

**உரோமானியர் :**

கிரேக்க நாடானது, சிறந்த நாகரிகத்தையும், கலையையும், அரசியல் முறையையும் உரோமானியர்களுக்கு வழங்கிச் சிறப்புற்றது என்று கூறலாமே தவிர, ஒரு பேரரசை நிறுவிக் கட்டியாண்டது என்று கூறுவதற்கில்லை. கிரேக்க மக்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து தங்களுக்குள்ளேயே போருடற்றிப் பேரரசை நிறுவும் ஆசையற்றுக் கிடந்தனர். பேராட்சி வெறிகொண்டு, உலகம் முழுவதும் வென்று ஒரு குடைக் கீழ் ஆளவேண்டும் என்ற பேரவாவால் உந்தப்பட்டு, மார்தட்டிக் கிளம்பிய அலெக்ஸாந்தர் தன் ஆசை நிறைவேறுமுன் முப்பத்து மூன்றும் வயதிலேயே உயிர் துறந்தான். ஆனால், உரோமாபுரி ஒரு பேரரசை நிறுவி **உலக அரசி** என்ற பெருமைக்கு உரிமை பெற்றது. இன்றைய இத்தாலியே உரோம நாடாகும். அதில் சிறப்புற்று விளங்கும் உரோம் நகரமே, உலகத்தை நடுங்க வைத்த மாவீரர்களைப் பெற்றெடுத்த உரோமாபுரியாகும். உலகம் என்று அக்கால மேலை நாட்டு மக்களால் எண்ணப்பட்ட நிலப் பகுதிகள் எங்கணும், உரோமானியர்களின் கொடி பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தது. அவர்களின் போர் முழக்கம் எங்கும் எதிரொலித்தது.

வீரமும் வெற்றிச் சிறப்பும் நாகரிகமும் நற்கலை யும் ஓங்க, பீடும் பெருமையும் திகழ வாழ்ந்த கிரேக்க நாடு, உரோமானியரின் தாளடியில் மண்டியிட்டுக் கிடந்தது. எந்த நாட்டிலும் மாவீரர்கள் என்று சிறப்பிக்கத் தக்கவர்கள் நூற்றுண்டுக்கு ஒருவர் கூடத் தோன்றல் அரிது. ஆனுல், உரோம நாட்டிலோ, ஒரே நூற்றுண்டில் **பாம்பி, சீசர், அந்தோணி, அக்டேவியஸ்** போன்ற மாவீரர்கள் தோன்றி உலகையே நடுங்க வைத்தனர். அவர் களுடைய போர்க் கப்பல்களும், வாணிகக் கப்பல் களும் பாய்விரித்துச் செல்லாத பரவை கிடையாது. தமிழகத்தின் தொண்டியிலும், முசிரியிலும், கொற்கை யிலும், புகாரிலும் உரோமானியரின் புகழ் மணம் கமழ்ந்தது.

உரோமானியர்கள் அழகிய மேனியும், வடித் தெடுத்த சிலைபோன்ற உடற்கட்டும், போர் என்ருல் புடைத்தெழும் தோள்களும், சலியாமல் போர் உடற் றும் தொலையா ஊக்கமும் கொண்டவர்கள். போரையே தங்கள் வாழ்வின் குறிக்கோளாகவும் கடமையாகவும் கொண்டவர்கள். போர் வீரனே உரோமாபுரியில் உண்மை மனிதனுகக் கருதப்பட் டான். மாற்றுரின் வலியைத் தொலைத்து, மாவீர னுக வாகைசூடி வந்தவனை உரோம நாட்டின் தலைமைப் பீடம் எதிர் கொண்டழைத்து ஏந்திக் கொண்டது. பேரும் புகழும், பொன்னும் மணி யும், அவன் தாளடியில் புரண்டன. "வல் லான் வகுத்ததே வாய்க்கால்" என்னும் சொல்லுக் கிணங்க, மாவீரர் ஏந்திய வாள் அசைந்த பக்க மெல்லாம் உரோம நாடு அசைந்தது. ஐரோப்பியப்

பெரு நிலத்தையும் வென்று, ஆசியாவின் பகுதிகளை யும், ஆப்பிரிக்காவின் வடபகுதிகளையும் உரோமப் பேரரசு தன்னடிப் படுத்தியது. சீசர் தன் கடற்படை யின் வலிமையால் பிரிட்டனையும் வென்று வாகை சூடினன். "உலகம் முழுவதையும் வென்று, அதன் மேல் அரியணை அமைத்து, அதில் அமர்த்தி உனக்கு அணிமுடி சூட்டுகிறேன்" என்று எகிப்து நாட்டரசி **கிளியோப்பாத்திரைக்கு** அஞ்சாநெஞ்சன் அத் தோர்ணி ஆணையிட்டுக்கூறினன். சீசரின் உறவின ஞன அக்டேவியஸ் உறுதியும் அழகும் மிக்க **கொலீசியம்** என்ற மாபெரும் மாளிகையைக் கட்டியதுபோல, அமைப்பாலும் பரப்பாலும் சிறப் பமைந்த உரோமப் பேரரசை நிறுவினன்.

சாவைக்கண்டு அஞ்சாதவனும், வெறுப்படை யாதவனும் உலகில் இல்லை என்பர். ஆனல் உரோ மானியர்கள் சாவைக் கண்டு அஞ்சியதாகவோ வெறுத்ததாகவோ வரலாறு கூறவில்லை. வட இந்தி யாவின் ஒரு பகுதியில் கி. பி. ஆரும் நூற்றுண்டில் **ஹூணர்கள்** (Huns) என்ற முரட்டுக் கூட்டத்தார் ஆண்டார்கள். அவர்களில் **மிகிரகுலன்** என்பவன் இரக்கமற்ற அரக்கன். கொடுஞ் செயலுக்குப் பேர் பெற்றவன். மலைமீதிருந்து யானைகளை உருட்டி விட்டு, அவைகள் வீறிட்டுக் கொண்டு வீழ்ந்து மடி வதைக் காண்பது அவனுக்கு மிகவும் பிடித்தமான இன்பப் பொழுது போக்கு என்று காசுமீர நாட்டு வரலாற்றை விளக்கும் **இராசதரங்கினி** என்னும் நூல் கூறுகிறது. ஆனல் உரோம நாட்டு மன்னர்களோ, தங்கள் முன்னல் செத்து மடிவதற்கென்று ஒரு கூட் டத்தையே சோறிட்டு வளர்த்தனர். அவர்கள்

கிளேடியேட்டர்கள் (Gladiators) என்று அழைக்கப் பட்டனர். அவர்கள் கூட்டமாக அரசன் முன் னிலையில் நின்று, வாளால் ஒருவரை யொருவர் தாக்கிப் போரிட்டுச் செத்து மடிவர். அதைக் கண்டு மன்னன் மகிழ்வான்.

கொடுங்கோன்மைக்கும் இரக்கமற்ற தன்மைக் கும் பெயர்பெற்ற **நீரோ** என்ற மன்னன் ஒரு சமயம் எரியில் மூழ்கிய உரோமாபுரியில் மக்கள் ஓலமிட்டோ டிய அவலக் காட்சியை, அரண்மனையின் மேன் மாடியில் நின்று கண்ணுரக் கண்டு மகிழ்ந்ததோடு, கின்னரத்தை (Fiddle) மீட்டி இன்னிசை எழுப்பினு னும். **இரேன்** என்ற ஒரு பெண், பட்ட மேறுவதற் காகப் பெற்ற மகனையே கொன்றெழித்தாள். இச் செயல்கள் யாவும் உரோமானியரின் இரத்தவெறிக் குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாம்.

இன்று ஐரோப்பாக் கண்டத்தில் வாழும் எல்லா நாட்டு மக்களும், உரோமானியரின் வழிவந் தவராகத் தங்களைப் பெருமையோடு கூறிக்கொள்கி ருர்கள். அரசியற் சட்ட அமைப்புத் துறையில் உரோமானியர் உலக மக்கள் எல்லாருக்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றனர். இன்றுகூட மேல் நாடுகளில் சட்டக்கல்வி பயில்வோர், உரோ மானியச் சட்டம் (Roman Law) பயிலவேண்டும். உலகத்தில் வாழ்ந்த எந்த இனமும் ஒரு சில நூற் ருண்டுகளுக்கு மேல் ஒரு பேரரசைக் கட்டியாண்ட தாக வரலாறு கிடையாது. பல மாறுதல்களுக்கும், வீழ்ச்சிகட்கும் இலக்காகி இருந்தாலும், ' உரோமப் பேரரசு' என்னும் விண்மீன் உலக சரித்திர வானில்

இரண்டாயிரம் ஆண்டுகள் வட்டமிட்டுத் திரிந்தது. பதினெட்டாம் நூற்றுண்டு வரையில் 'புனித உரோமப் பேரரசு' என்ற பெயரால், ஓர் ஆட்சி **கான்ஸ்டாண்டி நோபிளைத்** தலைநகராகக் கொண்டு விளங்கியது குறிப்பிடத்தக்கது. இதன் காரணம் உரோமானியரின் போர் ஆற்றலே என்ருல் மிகையாகாது.

## அராபியர் :

நீரற்ற வெம்பாலையில் வாழும் மக்கள் எப்பொழுதும் முரடர்களாகவும், விடுதலை வேட்கை மிக்கவர்களாகவும் விளங்குவது இயல்பு. அவர்களை அடக்கியாள்வது முடியாது. இத்தகைய பண்புகள் கொண்டவரே அராபியர். விரைபரியும், ஒட்டகமும், கழுதையுமே அவர்களுடைய நீங்காத் தோழர்கள். வேறு நாடுகளில் ஒருவனைக் கழுதைக்கு ஒப்பிடுதல் இழிவானதாகக் கருதப்படும்; ஆனல் அரேபியாவில் உயர்வாகக் கருதப்படும். இவர்கள் சிறு சிறு கூட்டங்களாக வாழ்ந்த நாடோடிகள். பெரும்பாலோர் பாலைவனக் கொள்ளையராகத் திரிந்தனர். இவர்கள் மான உணர்ச்சி மிக்கவர்கள் ; பிறர் இகழ்ந்து கூறும் சிறு சொல்லையும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். இதனல் அடிக்கடி ஒரு கூட்டத்தாரோடு மற்றொரு கூட்டத்தார் போரிட்டுப் படுகொலைக்குள்ளாவர். நாடோடிகளாகத் திரிந்த இந்நாகரிகமற்ற மக்கள் கி. பி. ஏழாம் நூற்றுண்டில் நாடாளும் மன்னர்களாக மாறித் தங்கள் போர் வன்மையாலும் கலைப் பண்பாலும் உலகத்தையே வியப்பிலாழ்த்தினர்.

இவர்களை இந்நிலைக்கு உயர்த்திய பெருமை இஸ்லாம் மதத்தைத் தோற்றுவித்த பெரியார் முகம்மது நபியையே சாரும். ஒருவரோடொருவர் சண்டையிட்டு ஒற்றுமையற்று அறியாமை இருளில் மூழ்கி வாழ்ந்த மக்களிடத்தில் முதலில் இவருடைய கொள்கைக்கு வரவேற்புக் கிடைக்கவில்லை. இவர் தாம் வாழ்ந்த ஊரான மக்காவிலிருந்து, கல்லால் அடித்துத் துரத்தப்பட்டார். ஆனால் தன்னம்பிக்கை மிக்கவரான நபி, அராபிய மக்கள் உள்ளத்தில் அசையாத நம்பிக்கையை ஊட்டி, அவர்களை ஒரு மாபெரும் சக்தியாக மாற்றினார். காட்டு வாழ்க்கை வாழ்ந்த அம்மக்கள், அக்காலத்தவர் அறிந்திருந்த உலகில் பாதியை வென்று, கொடி கட்டி ஆண்டனர். அவர்கள் மேற்கொண்ட இஸ்லாம் மதம் அவர்களுடைய உள்ளத்தில் ஒற்றுமையையும் பொதுமை உணர்ச்சியையும் வேர்கொள்ளுமாறு செய்துவிட்டது.

சென்ற பக்கமெல்லாம் வெற்றி அராபியரைப் பல்லாண்டு பாடி வரவேற்றது. நபி நாயகம் இறந்து இருபத்தைந்து ஆண்டுகள் கழிவதற்குள்ளாக அராபியர் கீழ்த்திசையில் பாரசீகம், சிரியா, ஆர்மீனியா, மத்திய ஆசியாவின் பெரும்பகுதி ஆகியவற்றையும் ஆப்பிரிக்காவின் வட பகுதியையும் எளிதில் வென்றனர்; கிழக்கில் மீண்டும் முன்னேறிச் சென்று, ஈரட், காபூல், பால்க் முதலிய பகுதிகளை வென்று சிந்து நதிவரையில் சென்றனர். அராபியப் படைத்தலைவன் உக்பா தன் ஆட்பெரும் படையோடு ஆப்பிரிக்காவைக் கடந்து, அதன்

மேற்குக் கரையிலுள்ள அட்லாண்டிக் மாகடலை அடைந்தான். கடல் குறுக்கிடக் கண்டு ஏமாற்றம் கொண்டு, குதிரை மீதமர்ந்தபடியே கடல் நீரில் சென்று, அல்லாவின் பேரால் வெற்றிகொள்ள அத் திசையில் நிலமில்லையே என்று வருந்தினும்.

ஆப்பிரிக்காவையும் ஐரோப்பியப் பெருநிலத்தையும் பிரிக்கும் கடலிணைக் கால்வாயைக் கடந்து ஸ்பெயின் நாட்டினையும் அராபியர் வெற்றி கொண்டனர். அக்கால்வாயைக் கடந்த படைத்தலைவன் பெயரான **ஜபல்-உத்-தரீக்** என்பதே இன்று ஜிப்ரால்டர் என்று மருவி வழங்குகிறது. பிறகு அராபியர் தென் பிரான்சிலும் நுழைந்தனர் ; ஐரோப்பாவை இருபுறங்களிலும் தாக்கினர். அராபியர் சிறிய தொகையினராயிருந்ததாலும், தாயகத்திலிருந்து நீண்ட தொலைவு சென்று விட்டதாலும், நடு ஆசியாவை வெல்ல முழு முயற்சியுடன் போரில் ஈடுபட்டிருந்ததாலும் அவர்கள் ஐரோப்பாவை வெல்வதில் அக்கரை காட்டவில்லை. எனினும் ஐரோப்பியர், அராபியர் எழுச்சிகண்டு இடியேறு கேட்ட பட அரவுபோல் அஞ்சி நடுங்கினர் ; அராபியரின் எழுச்சியைத் தடுத்து நிறுத்தச் **சார்லஸ் மார்டல்** என்ற வீரன் தலைமையில் ஒரு கூட்டுப் படையணி அமைத்தனர். அப் படை பிரான்சு நாட்டில் **டூர்ஸ்** என்ற இடத்தில் அராபியரை முறியடித்தது. இத்தோல்வி ஐரோப்பாவை அராபியரிடமிருந்து காத்தது. "உலகப் பேரரசை நிறுவி, ஒரு குடைக்கீழ் ஆள விருந்த அராபியரின் நல்வாய்ப்பை, டூர்ஸ் போர்க்களம் தலைகீழாக மாற்றி விட்டது" என்று ஒரு மேலை நாட்டு வரலாற்றுசிரி

யர் குறிப்பிடுகிருர். அப்போர்க் களத்தில் அராபியர் வெற்றியடைந்திருந்தால், ஐரோப்பிய வரலாறே மாற்றியமைக்கப்பட்டிருக்கும். அவர்கள் நேரே கான்ஸ்டாண்டிநோபிளுக்குச் சென்று கீழ் உரோமப் பேரரசையும், வழியிலுள்ள வேறு பல நாடுகளையும் வென்றிருக்கக் கூடும். ஐரோப்பாவின் மதம் கிருத் தவமாயிருப்பதற்குப் பதிலாக இஸ்லாமாக மாறி இருக்கும். வேறு பல பெரும் மாறுதல்களும் விளைந் திருக்கும். இருந்தாலும் அராபியர் ஸ்பெயினில் தங் கிப் பல நூற்ருண்டுகள் ஆட்சி புரிந்தனர்.

அராபியப் பேரரசு உயர்நிலையில் இருந்த பொழுது, ஸ்பெயினிலிருந்து மங்கோலியா வரையில் உள்ள நாடுகள் யாவும் அதில் அடங்கியிருந்தன. **டமாஸ்கஸ், பாக்தாது** போன்ற இலக்கியப் புகழ் பெற்ற மாநகரங்கள் தோற்றுவிக்கப்பட்டன. கண் கவரும் அரண்மனைகளும், பண்கமழும் இசை மண் டபங்களும், விண் தவழும் மசூதிகளும், ஆட லரங்குகளும், பூங்காக்களும் அந்நகர்களை அழகு செய்தன. செல்வமும், ஆடம்பரமும் செழித்து விளங்கின. கவிஞரும் கலைஞரும் கணக்கற்றவர் வாழ்ந்தனர்...ஆம்; அது பொற்காலம்!...ஆனுல், அவ்வலி மிக்க பேரரசும், எழில்மிக்க நகரங்களும், மங்கோலியப் போர் வெறியன் **செங்கிசுகானின்** படையெடுப்பின் போது மண்மேடாக மாறிவிட்டன. அந்நாட்டுக் கவிஞர்கள் யாத்த அரபுக் கதைகளும், **ஆயிரத்தோர் இரவுகளுமே** (அல்ப் லைலாவலைலா) இன்று அவைகட்குச் சான்று பகர்கின்றன.

## மங்கோலியர் :

ஆசியாவின் வறண்ட பகுதியான மங்கோலியப் பெருவெளியே மங்கோலியரின் தாயகமாகும். மங்கோலிய ஆண்களும் பெண்களும் உடற்கட்டும் உறுதியும் வாய்ந்தவர்கள் ; அஞ்சாநெஞ்சும், போர் வெறியும் கொண்டவர்கள். வளமற்றதும் குளிர் மிக்கதுமான பெருவெளிகளில் அமைக்கப்பட்ட கூடாரங்களில் வாழ்ந்துவந்த இவர்கள், எத்தகைய இன்னலேயும் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவர்கள். வலிமையும் விரைவும் மிக்க குதிரைகளே வளர்க்க மங்கோலிய நாடு ஏற்ற தட்ப வெப்ப நிலேயைப் பெற்றிருந்ததால் குதிரை ஏற்றத்தில் இவர்கள் மிகவும் வல்லவர்களாயிருந்தனர்.

திடீரென்று இவர்கள் ஆற்றல் வளர்ந்தது. பல கூட்டங்களாகச் சிதறிக்கிடந்த இவர்கள் ஒன்றுபட்டனர். தங்களுக்கென ஒரு தலேவனேத் தேர்ந்தெடுத்து, அவனுக்கு அடங்கி நடப்பதாக உறுதி பூண்டனர். அவர்கள் தலேவன் மகாகான் என்று அழைக்கப்பட்டான். சீனநாட்டை வென்று புகழ் மிக்க கான் ஆட்சியை நிறுவியவர்கள் இவர்களே. மேற்கே படையெடுத்துச் சென்று, வழியிற் கண்ட பேரரசுகளே யெல்லாம் துடைத்துப் போக்கினர் ; உருசிய நாட்டை வென்று கைக்கொண்டனர் ; பாக்தாது நகரையும் அராபியப் பேரரசையும் அடியோடு இல்லாதொழித்து, ஐரோப்பாவில் போலந்துக்கப்பாலும்சென்றனர். இவர்களேத் தடுத்து நிறுத்துவார் எவருமில்லே. இந்தியா இவர்களிடமிருந்து தப்பிப் பிழைத்தது இந்நாட்டின் நல்வாய்ப்பே என்றுதான்

சொல்ல வேண்டும். கனல் கக்கும் இம்மங்கோலிய எரிமலையைக் கண்டு உலகம் எய்திய நடுக்கத்தை வாயினால் சொல்வதைவிட, மனத்தினால் எண்ணிப் பார்த்துக் கொள்வதே மேலாகும். இயற்கையே சீறி எழுந்தால் மனிதன் என்ன செய்ய முடியும்? நிலநடுக்கத்தை எதிர்க்கவோ தடுக்கவோ முடியுமா? அவ்வாறே மங்கோலியப் படையெடுப்பையும் நாம் கருதவேண்டி யிருக்கிறது.

மாங்கோலியர் நாடோடி வாழ்க்கையில் ஊறின வர்கள். அவர்கள் வாழ்க்கையின் அமைப்பு, நுட்ப மும் திட்டமும் வாய்ந்தது. எண்ணிக்கையில் மிகுந் திருந்ததாலேயே அவர்கள் போர்க்களத்தில் பெரு வெற்றியெய்தினர் என்பது பொருந்தாது. அவர்க ளுடைய ஒற்றுமையும் வாழ்க்கை அமைப்புச் சிறப் புமே வெற்றிக்குக் காரணம். எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறந்த படைத்தலைவர்களையும் அவர்கள் பெற்றிருந்தனர். எனவேதான், ஏறத்தாழ ஆசிய ஐரோப்பாக் கண்டங்கள் முழுவதையும் அவர்கள் வென்று கட்டி யாண்டனர்.

**ஹூணர்கள் :**

ஹூணர்கள் என்னும் கூட்டத்தார் முரட்டுத் தனத்துக்கும் கொடுஞ்செயலுக்கும் பேர்பெற்றவர் கள் என்று முன்பே குறிப்பிட்டோம். இவர்கள் வெண்மையான தோற்றமுடையவர்கள். உரோமப் பேரரசின் அழிவிற்குக் காரணமாக இருந்தவர்களும் இவர்களே. ஹூணர் என்ற சொல் பண்டைய மேல்நாட்டு மக்களால் ஒரு பெரிய வசைமொழியாகக் கருதப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது,

ஜெர்மானியரின் கொடுஞ் செயல்களைக் கண்ட ஐரோப்பியர், அவர்களை ஜெர்மன் ஹூணர்கள் என்று இகழ்ந்து கூறியது குறிப்பிடத்தக்கது.

## இராசபுத்திரர் :

வட இந்தியாவிலுள்ள இராசபுதனத்தில் வாழும் இராசபுத்திரர்கள், பாலைநில மக்களின் பண்பு களான முரட்டுத்தனம், அஞ்சாமை, உடற்கட்டு, சுயேச்சை விருப்பம் முதலிய யாவும் வாய்க்கப் பெற்றவர்கள். இந்தியாவில் நுழைந்த வெள்ளை ஹூணர்களின் குருதிக் கலப்பு இவர்கள்பால் உண்டு. இவர்கள் போர் உணர்வுக்கு இதுவும் ஒரு காரணம் என்று வரலாற்றாசிரியர் கூறுவர்.

## ஆப்கானியர் :

பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆப்கானியர் என்ற கூட்டத்தார் தலையெடுத்துக் கொலை, கொள்ளை முதலியவற்றை அஞ்சாமல் செய்தனர். பதினேழு முறை இந்தியாவின் மேல் படையெடுத்து இந்திய நாட்டின் செல்வத்தை வாரிச் சென்ற **கஜினியும்**, இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி தோன்று வதற்குக் காரணமாயிருந்த **கோரியும்** இவ்வினத் தவரே.

இன்னும் **தாத்தாரியர்** (Tartars), **காத்துகள்** (Goths), **செல்ஜக் துருக்கியர்** (Turks), **சீதியர்** (Sythians) முதலியோர் வீரமும் போர்வெறியும் கொண்ட மக்களாக விளங்கினர். ஆனால், இவர்கள் யாவரும் பேரரசை நிறுவி ஆட்சி செய்ய வில்லை.

# 4. போர் வெறியர்கள்

தம் வாள் வலியால் உலகத்தையே நடுங்க வைத்த மாபெரும் படைத் தலைவர்கள் என்று உலக வரலாற்றிலே சிறப்பாகக் குறிக்கப்படுபவர்கள் அலெக்சாந்தர், ஜூலியசு சீசர், செங்கிஸ்கான், நெப்போலியன், அடால்ப் ஹிட்லர் ஆகிய ஐவருமே ஆவர். இவர்களால் மக்கள் இனத்திற்கு நன்மையைவிடத் தீமையே மிகுதி என்றாலும், இவர்களுடைய நெஞ்சுறுதியையும், மாற்றாரும் போற்றும் மாவீரத்தையும், நுண்ணிய அறிவாற்றலையும், தன்னம்பிக்கையையும், உலையா ஊக்கத்தையும் நாம் வியக்காமலிருக்க முடியவில்லை. ஒரு வீழ் கொள்ளி வானில் திடீரென்று தோன்றிப் பெருஞ் சுடர் விட்டு விரைவில் அழிந்துபோவது போல் இவர்கள் அழிந்து போனாலும், உலக வரலாற்று வானில் என்றும் புகழொளி வீசிநிற்கும் வடமீனாக விளங்குகிறார்கள். இவர்கள் பேராற்றலை வியந்து போற்றுவோம்; ஆனால் இவர்கள் மண்ணாசையை இகழ்ந்து தூற்றுவோம்.

## மாவீரன் அலெக்சாந்தர் :

கிரீசின் வட பகுதியான மாசிடோனியா நாடே அலெக்சாந்தரின் தாயகமாகும். மாசிடோனியர், பேரும் புகழும் கொண்டு நாகரிகத்தின் உச்சியிலே வாழ்ந்த கிரேக்கர் (Homoric Greeks) களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களல்லர். இவர்

களைக் கிரேக்கர்கள் என்று குறிப்பிடுவதைவிட கிரேக்கப் பண்பும் காட்டுமிராண்டிப் பண்பும் ஒருங்கே கொண்ட முரட்டுக் கூட்டத்தார் என்று கூறுவதே பொருந்தும். அலெக்சாந்தரின் வெற்றிக்கும், புகழுக்கும் அவனே முழுக் காரணம் என்று கூறிவிட முடியாது. அவன் தந்தையான **பிலிப்பும்** ஒரு முக்கியக் காரணம் என்று கூறவேண்டும். பிலிப் சாகும்போது, சிறந்த அரசியல் அமைப்போடு கூடிய ஒரு பெரு நாட்டையும், கட்டுப்பாடும் போர்ப்பயிற்சியும் பெருவலியும் ஒருங்கே உடைமையப் பெற்ற காலாட் படையையும், கண்டோர் அஞ்சத் தக்க கப்பற் படையையும், அளவற்ற பொற்குவை யும், மணிக்குவையும் நிறைந்த ஒரு பெருங் கரு வூலத்தையும் விட்டுச் சென்றிருந்தான். தன் தந்தை அமைத்துக் கொடுத்திருந்த இச்சிறந்த அடிப்படை யின் மேல்தான் அலெக்சாந்தர் தன் பேரரசு மாளி கையை நிறுவினுன்.

**மாவீரன் அலெக்சாந்தர்** (Alexander the Great) என்று வரலாற்றுசிரியர்களால் இவன் சிறப்பாக அழைக்கப்படுகிருன். **மாவீரன்** என்ற இப்பட்டப் பெயர் உலகில் வேறு எந்த வீரனுக்கும் கிட்டாமல் இவனுக்கே வாய்த்த ஒரு தனிப் பெருமை யுடையது. பட்டமேறியபோது இவனுக்கு வயது இருபது; கண்டோர் விரும்பும் கட்டழகும், தன் தந்தையைப்போல் உரம் பெற்ற உடற்கட்டும், அஞ்சாமையும் வாய்க்கப் பெற்றவன். அக்காலத் தில் கிரேக்க நாட்டிலேயே தலை சிறந்த அறிஞுக விளங்கிய **அரித்தாத்தல்** (Aristotle) என்பவரிடத்

தில் கல்வி பயின்றதால் இவன் இலக்கியத்திலும், கிரேக்கப் பண்பாட்டிலும் பேரார்வம் கொண்டு விளங்கினுன்; பட்டமேறியதும் முதன் முதலாக கிரேக்க நாடு முழுவதையும் தன் ஆட்சியில் கொணர விரும்பினுன். அதற்கு இடையூருக விளங்கிய **தீப்ஸ்** என்ற கிரேக்க நகரை வேரும் வேரடி மண்ணுமில்லாமல் அழித்தொழித்தான்; ஆயிரக் கணக்கான மக்களைப் படுகொலை செய் தான்; பல்லாயிரவரை அடிமைகளாக விற்ருன்; இங்ஙனம் கிரீசைத் தன் கொடுஞ் செயலால் நடுங்க வைத்தான்.

பாரசீகரும் கிரேக்கரும் பரம்பரைப் பகைவர்கள். எனவே அலெக்சாந்தரின் அணிவகுப்பு பாரசீகத்தை நோக்கி விரைந்தது. இவன் பாரசீகப் பேரரசன் **மூன்ரும் டேரியசை** இரு முறை முறியடித்தான்; டேரியசின் முன்னேனை **சொர்க்சிஸ்** கிரேக்க நாட்டில் ஏதென்ஸ் நகரைக் கொளுத்தியதற்குப் பழி வாங்க டேரியசின் அரண்மனையைத் தீயிட்டு அழித்தான்; அதோடு டேரியசின் மகளையும் மனைவியாக்கிக் கொண்டான். ஆயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த பாரசீகக் கவி **பிர்தௌசி** இயற்றிய **ஷாநாமா** என்ற இலக்கியத்தில், அலெக்சாந்தருக்கும் டேரிய சுக்கும் நடந்த போர் கற்பனை நயத்தோடு வருணிக் கப்படுகிறது.

சிற்ருசியா, சிரியா, எகிப்து, ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளையும், பாரசீகப் பேரரசில் அடங்கி யிருந்த நடுஆசிய நாடுகளையும் அலெக்சாந்தர் வென் ருன்; வடமேற்குக் கணவாய்களின் வழியாகச் சிந்து நதிப் பள்ளத்தாக்கை அடைந்தான். புருடோத்தமன்

என்ற இந்திய மன்னன் அலெக்சாந்தரை எதிர்த்து வீரத்துடனும் அஞ்சாமையுடனும் போருடற்றினன். இறுதியில் புருடோத்தமன் தோல்வியுற்ருலும், அவன் வீரத்தையும் அஞ்சாமையையும் அலெக்சாந்தர் புகழ்ந்து, அவனுடைய நாட்டை அவனுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டான். தட்சசீல மன்னனை **அம்பி** என்பான், கிரேக்கப் பெரும் படையைக்கண்டு அஞ்சி, ஆயிரம் மாடுகளைக் கொன்று பெருவிருந்து நடத்தி, அலெக்சாந்தரின் தாள் பணிந்தான். தாயகத்தை விட்டு நெடுந் தொலைவு வந்துவிட்டதாலும், பெற்ருேரையும் மனைவி மக்களையும் பிரிந்து அதிக நாள் ஆகிவிட்டபடியாலும், கிரேக்க வீரர்கள் ஊர் திரும்பும் எண்ணத்தில் மேற்செல்ல மறுத்தனர். அலெக்சாந்தரின் ஆருயிர்க் குதிரை **புசிபலசும்** இறந்தது. வேறு வழி இல்லாமல் அலெக்சாந்தர் நாடு திரும்பவேண்டியதாயிற்று. திரும்பிச் செல்லும் வழியில், தன் முப்பத்துமூன்ரும் வயதில் பாபிலோன் என்ற விடத்தில் நோய்வாய்ப்பட்டு இறந்தான்.

தன்னுடைய குறுகிய காலவாழ்வில் இப்பெரிய மனிதன் சாதித்தது என்ன? சில போர்களைவென்று புகழ் கொண்டான். அவ்வளவே! இவன் பெரிய படைத் தலைவன் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனல் எல்லையற்ற வீண்பெருமையும், தலைச் செருக்கும் கொண்டவன் ; எவ்விதக் கொடுமைகளையும் அஞ்சாமல் செய்யும் உள்ளத்தைக் கொண்டிருந்தான் ; ஆட்சிபீடம் ஏறியபொழுது தனக்கு இடையூருக இருந்த சிற்றன்னை (பிலிப்பின் இரண்டாம் மனைவி) யையும், அவள் பெற்ற பச்சிளங்

குழந்தையையும் கொன்ருெழித்தான் ; மிகவும் சினங்கொண்ட சமயங்களில், தன் ஆருயிர் நண்பர் களையும் கொன்று வீழ்த்திஞன். சிற்பக்கலைக்கும், கட்டடக் கலைக்கும் நிலைக்களஞய் விளங்கிய எழில் மிக்க நகரங்களை மண்மேடாக்கி, மக்களைப் பலிக் கடாக்களைப் போல் வெட்டி வீழ்த்திக் குருதியாறு பெருக்கெடுத்தோடுமாறு செய்தான் ; பாரசீகப் பேர ரசை அழித்து, அழகும் ஆடம்பரமும் திகழ அணி தேர்ப்புரவியும் ஆட்பெரும் படையும் புடை சூழ, அந்நாட்டு அரியணையில் அமர்ந்திருந்தபோது, தன்னைக் கடவுளுக்கு ஒப்பானவன் என்று எண்ணி இறுமாப்புக் கொண்டான். தன் முன் வருபவர் யாராக இருந்தாலும் தலை குனிந்து, தன் தாளை முத் தமிட வேண்டுமென்று ஆணையிட்டான். பாவம்! இத்தகைய பீடும் பெருமையும் உடன் அழிய மிக வும் இளமையிலேயே செத்தொழிந்தான்.

அவனுடைய இறப்புக்குப் பின் அவன் நிறுவிய பேரரசைத் தாலமி, செலூயூகசு போன்ற அவன் படைத் தலைவர்கள் பங்கு போட்டுக் கொண்டனர். அவனுடைய குடும்பத்தாரும் ஒரு வரையொருவர் வெட்டிக்கொண்டு மாண்டனர். ‘ உலகத்தை வென்றவன் ’ என்று அலெக் சாந்தரை இன்று அழைக்கிருர்கள். ஒரு சமயம் தான் வெற்றிகொள்ள உலகில் வேறு நாடுகள் இல்லையே என்று அவன் அழுதாஞம். ஆஞல் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் ஒரு சிறிய நிலப்பரப்பைத் தவிர அவன் வேறு எதையும் வெற்றிகொள்ளவில்லை ; சிற்றரசஞன புருடோத்தம னின் வீரமே அவனை வியப்பிலாழ்த்தியது என்ருல்

அப்போது கங்கைக்கரையில் பேரரசை நிறுவியிருந்த வலிமிக்க நந்தர்களிடம் மோதியிருந்தால் அவன் நிலை யாதாகியிருக்குமோ! சீனநாடு அலெக்சாந்தர் காலத்தில் செல்வச் சிறப்பும் ஆட்சிச் சிறப்பும் பெற்ற ஒரு பெருநாடாக விளங்கியது. அவன் அதற்கு அருகில் கூடச் செல்லவில்லை. இருந்தாலும் தன் குறுகிய வாழ்நாளில் இரண்டு கண்டங்களில் தன் பெயரை நிலைநாட்டியதோடு, முதன் முதலில் உலகத்தை வென்றவன் என்ற பெருமையையும் உலக வரலாற்றிலே நிலைநாட்டிவிட்டுச் சென்று விட்டான். வெகுதொலைவிலுள்ள நடு ஆசியாவில் அவனை இன்றும் மறவாமல் **சிக்கந்தர்** என்று அழைக்கிறார்கள்; பல நகரங்கள் கூட அவன் பெயரால் நிறுவப்பட்டுள்ளன; எகிப்திலுள்ள **அலெக்சாந்திரியா** இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## ஜூலியசு சீசர் :

ஜூலியசு சீசர் என்னும் சொல் ஆங்கில இலக்கிய உலகில் மங்காது புகழ் ஒளி வீசும் ஒரு பெயராகும். உரோம நாட்டு வரலாற்றிலோ வெற்றிச் சுடர் பரப்பும் ஒரு பொன்னேடாகும். சீசரின் வரலாற்றை நாடகக் காவியமாக எழுதியதில் சேக்சுபியருக்குப் புகழா? அன்றிச் சேக்சுபியர் மகாகவியால் தன் வரலாறு காவியமாக்கப்பட்டதால் சீசருக்குப் புகழா? என்று நாம் அறுதியிட்டுக் கூற முடியாது. அந்நாடகத்தால் இருவருமே புகழ் எய்தினர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

கெயசு சீசர் என்ற செல்வச் சீமானுக்கு மகனாக ஜூலியசு சீசர் உரோமாபுரியில் பிறந்தான்.

சீசர் இளைஞனாக இருந்தபொழுது உரோமநாடு குடியரசாக (Democratic Country) விளங்கியது. மக்கள் மன்றம் (Senate) அரசியல் தலைமை தாங்கி நாட்டை ஆண்டுவந்தது. பெயரளவுக்கு உரோம நாடு குடியரசாக விளங்கியதேயன்றி, அரசியலில் செல்வர்களே செல்வாக்குப் பெற்று விளங்கினர். ஆனால் சீசர் செல்வக் குடியில் பிறந்திருந்தும் குடிமக்கள் கட்சியில் பற்றுக்கொண்டு மக்களின் நன்மை கருதிப் பணியாற்றி வந்தான். மக்கள் கட்சித் தலைவருள் ஒருவரான **சின்னாவின்** மகள் **கார்னீலியாவைப்** பிரபுக்கள் கட்சியின் பெரிய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் சீசர் திருமணம் செய்துகொண்ட செயல் இதற்குச் சிறந்த சான்றாகும்.

சீசர் ஒற்றைநாடி உடம்பினன் ; ஆனால் வயிரம் போன்ற உள்ளமும், மடங்கலன்ன உடல் வலியும், இன்னல்களை இன்முகத்துடன் தாங்கிக் கொள்ளும் ஆற்றலும் பெற்று விளங்கினான். உரோமாபுரிப் படையில் பங்குகொண்ட சின்னாட்களில், தன் அஞ்சாமையாலும், போரில் காட்டிய வீரத்தாலும் படைப் பேராளாக (Military tribune) உயர்த்தப் பட்டான். சில காலம் கீழ்த்துறைக் குற்ற நடுவராகப் (Preator) பணியாற்றினான்.

உரோம நாட்டின் வடக்கே **காலியா** (இப்போது பிரான்சு என்று அழைக்கப்படுகிறது) என்ற பெருநாடு பலவேறுபட்ட முரட்டுக்கூட்டத்தாரைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. அவர்கள் உரோமப் பேரரசுக்குப் பெரிதும் தொல்லை கொடுத்து

வந்தனர். உரோம அரசு நிலை பெறவேண்டுமானால் காலியா நாட்டையும் வென்று, உரோமாபுரி ஆட்சியின் கீழ்க்கொண்டு வரவேண்டுமென்பதைச் சீசர் உணர்ந்தான்; மக்கள் மன்றத்தின் இசைவு பெற்று, ஒருபெரும் படையோடு காலியாவை நோக்கிப் புறப்பட்டான்; அங்கு வாழ்ந்த பல திறப்பட்ட முரட்டுக் கூட்டத்தாரையும் வென்று, காலியா நாடு முழுவதையும் தன்னடிப்படுத்தினான்; அதோடு ஜெர்மானியப் பேரரசனையும் வென்று, ஜெர்மனி நாட்டை உரோமப் பேரரசின் வட எல்லையாக்கினான். காலியா நாட்டில் அமைதியையும் செழிப்பையும் உண்டாக்கினான்; வலிமையும் கட்டுப்பாடும் மிக்க ஒரு சிறந்த படையை நிறுவினான்; தன் கப்பற் படையின் துணைகொண்டு, பிரிட்டன் மீது இருமுறை படையெடுத்தான்; அங்கு வாழ்ந்த பழங்குடி மக்களான கெல்ட்டுகளை வென்றான்; எக்காரணம் பற்றியோ அங்கு உரோமானியரின் ஆட்சியை நிறுவவில்லை.

இவ்வாறு சீசர் சென்றவிடமெல்லாம் வெற்றிக் கொடி நாட்டிவிட்டு, காலியா நாட்டுக்குத் திரும்பினான். இதற்குள் பாம்பி என்ற ஒரு வீரன் சீசருக்குப் போட்டியாக உரோமாபுரியில் செல்வாக்குப் பெற்று மக்கள் மன்றத்தை ஆட்டிவைக்கும் ஆற்றல் பெற்றவனாக விளங்கினான். சீசரின் செல்வாக்கைத் தொலைத்துவிட வேண்டும் என்ற உள்ள உறுதியோடு, சீசருக்கு விரோதமான சில சட்டங்களையும் மக்கள் மன்றத்தின் துணைகொண்டு செய்திருந்தான். இதனால் பெருஞ் சினங்கொண்ட சீசர் தன் வலிமிக்க படையோடு, உரோமாபுரி நோக்கி இரை வேட்ட

புலிபோல் கிளம்பினான்; இத்தாலியின் எல்லையி லிருந்த இரவென்னா நகரத்தில் பாடி வீடு அமைத் துத் தங்கினான். அப்பாசறையில் தன் வீரர்களை நோக்கி, "பேரும் புகழும் மிக்க உரோம நாட்டுப் போர் வீரர்களே! மாற்றாரும் போற்றும் மாண்புமிக்க மறவர்களே! ஏழை மக்களின் உழைப்பைத் தங்கள் இன்பவாழ்வின் பீடமாக அமைத்து வெறியாட்ட மாடும் செல்வர்களும், தன்னலமே உருவான பாம்பி யும் என்னை அழித்தொழிக்கப் போர் முரசு முழங்குகின்றனர். உரோமாபுரியின் பண்டைப் பெருமையையும் புகழையும் நிலைநாட்டத் தகுதியும் ஆற்றலும் உடையவன் யாரென்பதை நீங்கள் அறி வீர்கள். இப்போரில் நாம் தோல்வியடைந்தால் அது இணையற்ற வீரர்களாகிய உங்களுக்கும், நாம் உயிரினும் மேலாகப் போற்றும் குடியாட்சிக்கும் சாவுமணியாகும். எனவே தந்நலக்காரரின் பேரா சையைத் தொலைத்து, உரோமாபுரியின் தாளில் பூட் டப்பட்டுள்ள விலங்குகளைத் தகர்த்தெறிவது நம் கடமையாகும்" என்று உணர்ச்சிமிக்க வீரமொழிகள் புகன்றான். கொல்லும் வேங்கை முன் புள்ளிமான் நிற்குமா? காட்டுத் தீ முன் காய்ந்த சருகு எம்மாத் திரம்? வெங்கட் சுறாவை மீன் எதிர்க்க முடியுமா? பாம்பியின் படை சூறைக் காற்றில் பட்ட இலவம் பஞ்சுபோல் இடம் தெரியாமல் பறந்தோடி விட்டது. பாம்பி கப்பலேறிக் கிரீசுக்கு ஓடிவிட்டான். சீசர் ஏறு நடையோடு உரோமாபுரி வீதியை வலம் வந் தான். மக்கள் கடலெனச் சூழ்ந்து, "உரோமாபுரி யின் தந்தை சீசர் வாழ்க!" என்று வாழ்த்தினர்.

'மழை விட்டும் தூவானம் விடவில்லை' என்றாற் போல, பாம்பி நாட்டைவிட்டு ஓடியும், அவன் தொல்லை ஓயவில்லை. பாம்பியின் ஆட்கள் ஸ்பெயி னில் பெருங் கிளர்ச்சி செய்தனர். உடனே சீசர் ஒரு பெரும் படையோடு ஸ்பெயினுக்குச் சென்று, அக் கிளர்ச்சிக்காரர்களை ஒழித்து அமைதியை நிலைநாட் டினான். வினை வலியும் தன் வலியும் மாற்றான் வலி யும் துணைவலியும் தூக்கிச் செயலாற்றுவது, அரசி யலில் வீற்றிருக்கும் மாவீரர்களின் தலையாய கடமை யல்லவா? பாம்பியின் தன்மையைச் சீசர் நன் குணர்ந்தவன். பாம்பி தன்னிடத்தில் தோற்றோடி னாலும், உரோம நாட்டின் போற்றத்தகுந்த வீரர் களில் ஒருவன் என்பதைச் சீசர் நன்கு அறிந்திருந் தான். "இளைதாக முள் மரம் கொல்க களையுநர் கைகொல்லும் காழ்த்த விடத்து" என்ற உண்மை சீசருக்குத் தலைகீழ்ப் பாடம். எனவே உரோமாபுரி யில் மீண்டும் தன் செல்வாக்கை நிலைநாட்டிக் கொண்டு, 15,000 காலாட்களுடனும், 500 குதிரை வீரர்களுடனும் ஒரு சிறந்த கப்பற்படையுடனும், பாம்பி வாழ்ந்த கிரீசை நோக்கிச் சென்றான். பாம்பி சீசரின் படையைப் போன்ற இருமடங்கு படையுடன் எதிர்த்துப் பெரும் போர் புரிந்தான். ஆனால் சீசரின் நுண்ணறிவும், செயலாற்றும் வன்மை யும், பாம்பியின் படையைப் படுதோல்வியடையு மாறு செய்துவிட்டன. பாம்பி தப்பியோடி எகிப்தை யடைந்து, அலெக்சாந்திரியாவில் ஆட்சி புரிந்து வந்த இளந்தாலமியிடம் சரண்புகுந்தான். பாம்பி தங்கள் நாட்டிலிருப்பது, தங்கள் ஆட்சிக்கு இடை

யூறு என்று எண்ணிய இளந்தாலமி, வஞ்சனையாகப் பாம்பியைக் கொலை செய்தான்.

சீசர் பாம்பியைத் துரத்திக்கொண்டு எகிப்து வந்து சேர்ந்தான். பாம்பியின் தலை சீசரின் முன்னுல் கொணரப்பட்டது. அதைக் கண்டதும் சீசரின் மனம் வருந்தியது. தன்னையொத்த ஒரு பெருவீரன் வஞ்சனையால் கொல்லப்பட்டதற்குப் பெரிதும் உளங் கவன்ருன். எதிரியாக இருந்தாலும், பாம்பி தன் ஒரே மகளான ஜூலியாவின் கணவனல்லவா! பாம்பியை வீழ்த்திய கொலைக்காரர்களைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டான். பாம்பியின் வீரத்தைப் பாராட்டி, அவனது இறப்புக்காக மனம் வருந்திப் புலம்பியழுதான்.

இளந்தாலமியைக் கொன்ற பிறகு, அவன் உடன் பிறந்தாளான கிளியோப்பாத்திரையை எகிப்து நாட்டின் அரியணையில் அமர்த்திஞன். கிளியோப்பாத்திரை சிறந்த அழகி. தன் பேரழகால் உரோம நாட்டு வரலாற்றையே மாற்றி அமைத்தவள். சேக்சுபியர் இவளை ஒப்பற்றவளாகவும், சாகசக்காரியாகவும் கூறுகிருர்; திராய் நகர அழிவுக்குக் காரணமாக விளங்கிய கிரேக்கப் பேரழகி ஹெலனின் முழு அழகையும் கிளியோப்பாத்திரையின் ஒரு புருவத்தில் காணலாம் என்று பாராட்டிப் பேசுகிருர். சீசர் அவள் வனப்பில் ஈடுபட்டுச் சிறிது காலம் அவளோடு வாழ்ந்தான். சீசர் ஒரு கடமை வீரன். கடமை உணர்ச்சி உந்தவே, எகிப்தை விட்டு உரோமாபுரிக்குப் புறப்பட்டான்.

இதற்குள்ளாக, உரோமப் பேரரசுக்கு அடங்கி வாழ்ந்த சிற்ருசியாவின் மன்னன், அங்கிருந்த

உரோமநாட்டுப் படையைத் துரத்திவிட்டுத் தனி யாட்சி நடத்தத் தொடங்கினான். இதை உணர்ந்த சீசர் **சீலா** என்ற விடத்தில் அவனை முறியடித்துப் பெரு வெற்றிபெற்றான். இந்தச் சீலாப்போர் வரலாற் றுப் புகழ் பெற்றதாகும். இவ்வெற்றியைச் சீசர் உரோமநாட்டு மக்கள் மன்றத்துக்குத் தெரிவித்த முறை இன்றும் புகழ்பெற்றதாகும். இதைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, "வந்தேன்; கண்டேன்; வென்றேன்" என்று செய்தியனுப்பினான். இதனால் இவன் நுண்ணறிவு புலப்படும். இறுதியாக இவன் வட ஆப்பிரிக்காவிலும், ஸ்பெயினிலும் நடந்த கிளர்ச்சிகளை வெற்றிகரமாக வென்றடக்கினான். இவ்வாறு மாற்றாரின் வலி தொலைத்து, யாவராலும் வெல்லுதற்கரிய இமயமாய் உரோமாபுரியில் சீசர் வீற்றிருந்தான்.

சீசரின் செல்வாக்கும், பெருமையும் மேன்மே லும் வளர்வதைக் கண்ட பிரபுக்கள், பெரும் அழுக் காறு கொண்டனர். அவர்களில் தலைசிறந்தவன் **காசியசு** என்பவன். சீசரின் அன்பையும் நன்மதிப் பையும் பெற்று விளங்கிய பெருமகன் **புரூதசின்** உள்ளத்தையும் கெடுத்து, அவனையும் தன்பக்கம் சேர்த்துக் கொண்டான் காசியசு. ஒரு நாள் சீசர் மக்கள் மன்றத்துக்குச் செல்லும்போது இக்கெடு மதியாளரால் படுகொலை செய்யப்பட்டான்.

சீசருக்கும் உலகில் தோன்றிய மற்றைய மாவீரர்களுக்கும் நிறைந்த வேறுபாடுண்டு. மற்ற வீரர்கள் பெற்றிருந்த எல்லாப் பண்புகளையும் சீசர் பெற்றிருந்தான். ஆனால் அவர்கள் கனவிலும்

கருதமுடியாத சில அரும் பண்புகளும் ஆற்றல் களும் சீசரிடத்தில் அமையப் பெற்றிருந்தன. மற்ற வர்கள் படைசெலுத்துவதில் வல்லவர்கள். ஆனால் சீசர் படையோடு ஆட்சி செலுத்துவதிலும் வல்ல வன். அக்காலத்திலேயே இவன் உரோம நாட்டின் எல்லா நகர்களிலும் நகராட்சி மன்றங்களை (Municipality) நிறுவினான்; நாட்டைப் பல மண்டலங் களாகப் பிரித்து, மண்டலத் தலைவர்களை அமர்த்தி னான்; உரோமப் பேரரசில் அடங்கியிருந்த எல்லா நாட்டினர்க்கும் குடியுரிமை (Citizen right) அளித்திருந்தான்.

சீசர் கொடைத்திறன் மிக்கவன். ஏழைகட்கு இல்லையென்னாது வழங்கும் வள்ளல். இவன் செல் வக்குடியில் பிறந்திருந்தாலும், ஏழைகட்கு உணவுத் தானியங்களைத் திங்கள்தோறும் தவறாமல் வழங்க ஆணையிட்டிருந்தான்; தன் இறப்பிற்குப்பின் விட் டுச் சென்ற இறுதி முறி (Will)யில் தன் செல்வத் திலிருந்து ஒவ்வோர் உரோமானியனுக்கும் மூன்று பொன் நாணயங்கட்குக் குறையாமல் ஈந்து மகிழ் விக்க வேண்டுமென்று எழுதியிருந்தான்; தன் விளை நிலங்களையும் தைபர் நதிக்கரையில் தனக்குச் சொந்தமாயிருந்த பூங்காவையும் பொதுமக்கட்கு உரிமையாக்குமாறு குறிப்பிட்டிருந்தான். "செத்துங் கொடை கொடுத்தான் சீசர்" என்று எல்லோரும் பாராட்டினர்.

சீசர் வகுத்த ஆண்டுக் குறிப்பேடு (Calendar) அவன் நுண்ணறிவுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாம். பழங்கால உரோமாபுரியின் ஆண்டுக் குறிப்பேட்

டில், ஒன்பது திங்கள்களே இருந்தன. சீசர் மேலும் தொண்ணூறு நாட்கள் கூட்டி, ஓர் ஆண்டிற்கு முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் ஆறுமணி என்றும், நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை பிப்ரவரித் திங்களுக்கு இருபத்தொன்பது நாட்களென்றும் பேரறிஞரைக் கலந்து மிகப்பொருத்தமான ஆண்டுக் குறிப்பேடு ஒன்றை உருவாக்கினன்.

உரோமாபுரியில் **தோலபெல்லா** என்ற மாநில ஆட்சித் தலைவன் (Governor) நெறி தவறிய முறைகளில் பொருள் சேர்த்துச் செல்வந்தன் ஆனதன் விளைவாகக் குடிமக்களால் மக்கள் மன்றத்தின் முன் நிறுத்தப்பட்டான். மக்கள் மன்றம் அவனை விடுதலை செய்துவிட்டது. ஆனல் சீசர் தன் நாவன்மையாலும் அஞ்சாமையாலும் எல்லாரும் அவன் குற்றத்தை உணருமாறு செய்தான். தோலபெல்லாவும் கடுமையாக ஒறுக்கப்பட்டான். சீசர், கேட்டார்ப் பிணித்துக் கேளாரும் வேட்ப மொழியும் சொல்லாற்றல் பெற்றவன். பேச்சு வன்மை பெறுவதற்காக **ரோட்சு** (Rhodes) என்ற நகரின்கண் அமைந்திருந்த பேச்சுக்கலை மன்றத்தில் மாணவனுக இருந்து பயின்ருன். **அப்பலோனியசு** என்ற சொல்லேருழவர் சீசரின் நல்லாசிரியராக விளங்கினர். சீசர் சிறந்த எழுத்தாளனும்கூட. அவன் எழுதியுள்ள '**காலியா நாட்டுப் போரைப் பற்றிய நூல்**' (De Bello Gallico) ஐரோப்பாவில் ஆயிரக்கணக்கான கல்லூரிகளில் இன்றும் இளைஞர்களால் விருப்புடன் பயிலப்பட்டு வருகிறது.

திங்கட் பெயர்களில் ஒன்ருன **ஜூலை** என்பது ஜூலியசின் நினைவாக வைக்கப்பட்டதாகும். சீசர்

என்ற சொல் பிற்காலத்தில் பேரரசன் என்ற பொருளில் வழங்கியது. ஜெர்மானியப் பேரரசனின் பெயரான **கெய்சர்** என்பதும், உருசிய நாட்டு மன்னனின் பெயரான ஜார் என்பதும் *சீசர்* என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டவையே. கெய்சர் என்ற சொல் இந்துஸ்தானி மொழியிலும் நெடுங்காலமாக வழங்கி வருகிறது. **கெய்சர்-இ-ரோம்** (உரோமப் பேரரசர்), **கெய்சர்-இ-ஹிந்த்** (இந்திய நாட்டுப் பேரரசர்) என்று இந்துஸ்தானியில் சொல்லிவந்தோம். இங்கிலாந்து மன்னர்கள் கெய்சர்-இ-ஹிந்த் என்ற பட்டத்தை மகிழ்ச்சியுடன் பூண்டு விளங்கினுர்கள்.

*சீசரின்* அறிவாற்றலும், ஆட்சித் திறனும் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியவை. ஆனுல் அவன் பேராட்சி வெறி, பல நாட்டு மண்களில் குருதி வெள்ளம் பெருக்கெடுத்தோடுமாறு செய்தது; பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களைச் சாக்கடலில் தள்ளியது; பல நாட்டு மக்கள் உரிமை இழந்து அடிமை வாழ்வை மேற்கொள்ளுமாறு செய்தது. அக்குற்றத்தை மக்கள் இனம் என்றும் மன்னிக்க முடியாது.

## செங்கிசுகான் :

**செங்கிசு** என்ற சொல்லுக்கு வெற்றி வீரன் என்பது பொருள். அவன் இயற்பெயர் **தாமுசின்** என்பது. இப்பட்டப் பெயர் அவனுக்கு மக்களால் வழங்கப்பட்டது. செங்கிசு இளமையில் ஆதரவற்றவனுக இருந்து படிப்படியாக முன்னுக்கு வந்தவன். **குருல் தாய்** என்று அழைக்கப்பட்ட மங்கோலியப் பேரவை,

அவனை மகாகானகத் தேர்ந்தெடுத்தது. மகாகான் என்ருல் பேரரசன் என்பது பொருள்.

மங்கோலியரின் முன்னுள் வாழ்வைப் பற்றி எந்தவித வரலாறும் இல்லை. கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டில் எழுதப்பட்டு, பதினன்காம் நூற்ருண்டில் சீனுவில் வெளியிடப்பட்ட '**மங்கோலியரின் இரகசிய வரலாறு**' என்னும் நூல் மகாகான் தேர்தலைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது:

"கம்பளிக் கூடாரங்களில் வாழ்ந்து வந்த மங்கோலியர் அனைவரும் கூடி ஒரே தலைவனின்கீழ் ஒன்றுபட்ட காலையில், அவர்கள் வேங்கைப் புலி ஆண்டில், ஓனன் ஆறு தோன்றுமிடத்துக்கு அருகில் பேரவை கூடி, ஒன்பது பீடங்களின் மேல் வெண்கொடி உயர்த்தி, மகாகான் என்ற பட்டத்தைச் செங்கிசுக்கு அளித்தார்கள்."

செங்கிசு மகாகான் ஆனபொழுது அவனுக்கு வயது ஐம்பத்தொன்று. ஆகவே அவனை இளைஞனென்று சொல்வதற்கில்லை. இவ்வயதில் பெரும் பாலோர் உலகத் தொல்லைகளிலிருந்து நீங்கி ஓய்வும் அமைதியும் பெற விரும்புவர். ஆனல் செங்கிசுகானின் வெற்றியும் வீரமும் செறிந்த வாழ்க்கை இப்பொழுதுதான் துவங்குகிறது. இது பெரு வியப்பிற்கும் சிந்தனைக்கும் உரிய செய்தியாகும். மாபெரும் வெற்றி வீரர்களெல்லாம் இளமையிலேயே போர் விருப்புக் கொண்டு விளங்குவர். ஆனல் செங்கிசுகான் இளமைத் துடிப்பில் தன் படையெடுப்புகளைத் துவக்கவில்லை; நடுத்தர

வயதைக் கடந்து தன் வாழ் நாளில் பெற்ற பட்டறிவை அடிப்படையாக வைத்து, முன்னெச்சரிக்கையோடு ஒவ்வொரு செயலையும் செய்தான்.

மங்கோலியரின் ஒற்றுமையும், கட்டுப்பாடும், பெருந்தொகையும் அவர்கள் வெற்றிக்குச் சிறந்த காரணங்களாக இருந்தாலும், செங்கிசுகானின் படைத் தலைமை அவர்கட்குக் கிடைத்திராவிட்டால் மங்கோலியப் பேரரசு உலகைக் கட்டியாண்டிருக்க முடியாது என்று அறுதியிட்டுக் கூறலாம். அலெக்சாந்தரின் போராற்றலை ஒரு பேரிடிக்கு ஒப்பிட்டால் செங்கிசுகானின் போராற்றலைக் கரைபுரண்டு பாய்ந்தோடும் பெரிய காட்டாற்றுக்கு ஒப்பிடலாம். இடி தான் விழுந்த இடத்தை மட்டும் அழிக்கும். காட்டாறு எதிர்ப்பட்டவற்றை எல்லாம் அழித்து விட்டுச் சென்றுவிடும். போர்க்கலையறிவில் செங்கிசுகானுக்கு ஈடு சொல்லக்கூடிய படைத்தலைவன் இதுவரையில் உலக வரலாற்றிலேயே தோன்றவில்லை என்று உறுதியாகக் கூறலாம். அவனுக்கு முன்னால் அலெக்சாந்தரும் சீசரும் விளக்கின் முன் மின்மினி போல்வர். செங்கிசு தன்வரையில் பெரிய படைத் தலைவன் மட்டுமல்லன். தன்கீழிருந்த ஒவ்வொருவனையும், வலிமையும் அஞ்சாமையும் மிக்க அரியேறுகளாக மாற்றும் 'இரசவாதம்' அறிந்திருந்தான். தாயகத்திலிருந்து பல்லாயிரக் கணக்கான கல்களுக்கு அப்பால் பகைவர் நாட்டில் தங்களை விடப் பெருந்தொகையுள்ள எதிரிகளை அவன் வீரர்கள் எளிதில் புறங்கண்டார்களென்றால், செங்கிசின் போர்த் திறமைக்கு வேறு சான்று வேண்டியதில்லை.

தன் வீரர்களைப் போலவே, அவன் தன் படையி லிருந்த குதிரைகளுக்கும் சிறந்த பயிற்சியளித்திருந் தான்.

முதன் முதலாக, செங்கிசுகான் கிழக்கு நோக் கிச் சென்று, வடசீனுவிலும், மஞ்சூரியாவிலும் பரவி யிருந்த கினிய சாம்ராச்சியத்தை யொழித்து, பீகிங் நகரைக் கைப்பற்றிக்கொண்டான். கொராசம் நாட் டையும் வென்ருன். பிறகு தன் படைவெள்ளத்தை மேற்கு நோக்கித் திருப்பிவிட்டான்.

ஆசியரும் ஐரோப்பியரும் தங்களை நோக்கி ஒரு பெரும் புயல் கிளம்பிவிட்டதை உணர்ந்தனர். மங்கோலியப் போர் உருளை எதிர்ப்பட்ட எழில் நகரங்களையும் எண்ணற்ற மக்களையும் இரக்கமின்றி நசுக்கிக் கொன்றது. அழகிய அரண்மனைகளும், மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் நிறைந்த பொகாரா நகரம் பொசுக்கிச் சாம்பலாக்கப்பட்டது. கொராசம் நாட்டுத் தலைநகராகிய சாமர்க்கண்டு மண் மேடாகியது. அதில் வாழ்ந்த பத்து லட்சம் மக்க ளில் 50,000 பேரே உயிர் பிழைத்தனர். ஈரட், பால்க் முதலிய வளநகர்கள் பலவும் பாழ்பட்டன. கோடிக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். நடு ஆசியாவில் பல நூற்ருண்டுகளாக தழைத் தோங்கிய கலைகளும், கைத்தொழில்களும் பெயர் சொல்வதற்கின்றி மறைந்தொழிந்தன. பாரசீகத் தின் நாகரிக வாழ்க்கை பூண்டற்றுப் போயிற்று. செங்கிசுகான் சென்ற விடமெல்லாம் சுடுகாடாயின. பிறகு அவன் உருசிய நாட்டிற்குள்ளும் புகுந்தான். அங்கு ஆண்ட கீவ் கோமகனை வென்று சிறைப்படுத் திஞன்.

செங்கிசுகானின்பேரரசு கிழக்கே பசிபிக்மாகடலி லிருந்து, மேற்கே கருங்கடல் வரையில் பரவியிருந் தது. வலிகுன்ருமல் அது மேலும் மேலும் வளர்ந்து கொண்டேயிருந்தது. உலகத்தில் இவ்வளவு பெரிய நிலப்பரப்பை எந்த வீரனும் வென்றதில்லை. இப் பரந்த மங்கோலியப் பேரரசுக்கு மங்கோலியாவில் உள்ள **காரகோரம்** என்னும் சிற்றூரே தலைநகராக விளங்கியது. செங்கிசுகான் நாடோடியாகவும், கல்வியறிவற்றவனுகவும் இருந்தாலும், அரசியல் அமைப்புத் திறனில் மிகவும் வல்லவன். தனக்குக் கீழ் அறிவாற்றல் மிக்க அமைச்சர்களை வைத்துக் கொண்டு, அரசாட்சியைச் செம்மையுறச் செய்தான். தன்னுடைய எழுபத்திரண்டாம் வயதில் செங்கிசு கான் உயிர் துறந்தான் என்ருலும் அவன் இறப்பிற் குப் பிறகு, மங்கோலியப் பேரரசு சீர்குலைந்து போகா மலிருந்தது ஒன்றே, அவனுடைய கூரிய அரசியல் அறிவிற்கும், செயலாண்மைக்கும் சான்று பகர் கின்றது.

அராபிய, பாரசீக வரலாற்ருசிரியர்களின் கண் களில் செங்கிசுகான் ஒரு கொடிய அரக்கனுகத் தென்படுகிருன். அவர்கள் அவனைக் ‘கடவுளின் கொலைக் கருவி’ என்று அழைக்கிருர்கள். செங்கிசு கான், நகரங்களை அழித்ததற்கு இன்னெரு காரண மும் இருந்தது. நாடோடி உணர்ச்சி மிகுந்தவ னுகையால்நகரங்களையும் பட்டணங்களையும் அவன் வெறுத்தான். பாழ்வெளிகளில் வாழ்வதையே அவன் விரும்பினுன். ஒருசமயம் அவன் சீன நகரங் களை எல்லாம் தகர்த்துத் தரைமட்டமாக்கக் கருதினு னும். ஆனுல் யார் செய்த நல்வினையோ, அவன்

அவ்வாறு செய்யவில்லை. நாகரிகத்தை நாடோடி வாழ்வோடு இணைக்கவேண்டும் என்பது, அவனுடைய குறிக்கோள். ஆனால் அது நிறைவேறவில்லை; நிறைவேறவும் முடியாது.

செங்கிசுகான் கொடியவன்! கல்நெஞ்சன்! படு கொலையாளன்! கலையையும் நாகரிகத்தையும் அழிக்க வந்த காலன்! மக்களுயிரை அஞ்சாது குடித்த இரத்த வெறியன்! ஆனால் தன் வெற்றிச் சிறப்பால் எல்லாருடைய உள்ளங்களையும் கொள்ளை கொண்ட மாவீரன்!

## நெப்போலியன் :

அலெக்சாந்தரும் சீசரும் நல்ல வாய்ப்பும் வசதியும் முதலிலேயே அமையப் பெற்றுப் பெருமையும் புகழும் பெற்றவர்கள். ஆனால் நெப்போலியன் மிகவும் ஏழ்மை நிலையிலிருந்து, படிப்படியாக உயர் நிலைக்கு வந்து இறுதியில் ஐரோப்பாக் கண்டம் முழுவதையும் கட்டியாண்ட பேரரசனாக விளங்கினான். அலெக்சாந்தர் போர்க்கலையை நன்கறிந்த படைத்தலைவன். சீசர், போர்வன்மையும் அரசியல் அறிவும், பேச்சு வன்மையும், நுண்ணறிவும் மிக்கவன். செங்கிசுக்கான் போராற்றலிலும் அரசியல் அமைப்பு முறையிலும் வல்லுநன். ஆனால் அவனுக்கும் கல்விக்கும் நெடுந்தூரம். எழுத்து என்று ஒன்று இருப்பதாக நெடுங்காலம் அவனுக்குத் தெரியாது. ஆனால் நெப்போலியன், இவர்களுடைய பண்புகளெல்லாம் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்ததோடு, சிறந்த கல்வி

மானுகவும் விளங்கினுன். நெப்போலியன் என்ற சொல் ஐரோப்பிய வல்லரசுகளுக்கு ஒரு பேரிடியாக விளங்கியது. ஆனுல் பிரெஞ்சு நாட்டு மக்களுக்கு உணர்ச்சியையும் நாட்டுப்பற்றையும் ஊட்டும் மதிப்பிற்குரிய ஒரு சொல்லாக இன்று விளங்குகிறது.

நெப்போலியன் **கார்சிகா** என்னும் தீவில் **சார்லஸ் போனபார்டி** என்ற வழக்கறிஞருக்கும், அழகும் பெருந்தன்மையும் வாய்ந்த **இரமோலினி** அம்மையாருக்கும் பிறந்தான்; 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பற்கேற்ப, ஒரு வீரனுக்குரிய உயர் பண்புகளெல்லாம் இளமையில் வாய்க்கப் பெற்றிருந்தான். மரத்திஞல் செய்த ஈட்டியும், துப்பாக்கியுமே இளமையில் அவனுடைய விளையாட்டுக் கருவிகள். போர் வீரர்கள் அணிவகுத்துச் செல்வதைக் காண்பதில் அவனுக்குப் பெருவிருப்பம் உண்டு. வீதிகளில் போருடை அணிந்து செல்லும் வீரர்களைக் கண்டால், அவர்கள் பின்னுலேயே திரிவான். கீழ்ப்படிதல், வாய்மை, ஏழைக்கு இரங்கல் முதலியன, இளமையிலேயே அவன்பால் படிந்த தலையாய பண்புகளாம். அவன் உயர்வுக்கும், நற்பண்புகளுக்கும் காரணமாக விளங்கியவர், தாயாரான இரமோலினி அம்மையாரே. நெப்போலியன் தன் தாயிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தான். தன் தாயைப் பற்றி ஓரிடத்தில் குறிப்பிடும்போது, "கணவனை இழந்த என் தாய் வேறு துணையின்றிக் குடும்பத்தை நடத்தி வந்தாள். அவளைத் தாயாகப் பெற்றது எங்கள் நற்பேறு என்று தான் கூறவேண்டும். இன்பத்தையும் துன்பத்தையும் அவள் ஒன்று போல் எண்ணும் மனப் பண்

புடையவள். அவளைப் போன்ற ஓர் உயர்ந்த பெண் மணியை இப்பாரில் காண்பதரிது" என்று புகழ்ந்து கூறியுள்ளான்.

சிறுவயதில் அவன் தன் சொந்த ஊரிலும், பிறகு **பிரையன்** என்ற இடத்திலிருந்த இராணுவக் கல்லூரி யிலும் கல்வி பயின்றான்; கல்வியில் மிகவும் ஊக்கம் காட்டினான். வீண் பொழுது போக்கும் பழக்கம் அவ னிடத்தில் இல்லை. கணிதக் கலையில் மிகவும் திறமை காட்டினான். ஒருமுறை ஆசிரியர் அளித்த ஒரு கணக்கு, எந்த மாணவனாலும் செய்து முடிக்க முடிய வில்லை. நெப்போலியன் மூன்று நாள் தனியறை யில் அமர்ந்து இரவு பகலாக முயன்று அக்கணக் கைப் போட்டு முடித்தான். வரலாற்று நூல் கற்ப தில் அவனுக்குப் பேரார்வம் உண்டு. அவன் சொந்த ஊராகிய **அஜேசியாவின்** புறத்தே ஒரு பாறை உள் ளது. அவன் அதிலுள்ள குகையில் எப்பொழுதும் தனிமையில் அமர்ந்து படித்துக்கொண்டிருப்பானாம். அது இப்பொழுதும் **'நெப்போலியன் குகை'** (Nepolean Grotto) என்று அழைக்கப்படுகிறது. இராணுவக் கல்லூரியை விட்டு வெளியேறும் போது அவன் ஆசிரியர் பின் வருமாறு சான்றிதழ் வழங்கி யுள்ளார்: "நெப்போலியன் போனபார்ட்டி நல்ல பழக்க வழக்கங்களும் கீழ்ப்படியும் பண்பும் உள்ள வன்; கணக்கில் வல்லவன்; நிலநூற் கல்வியிலும், வரலாற்றுக் கல்வியிலும் நல்ல தேர்ச்சியுடையவன்; நல்ல அறிவாளி; படிப்பிலே கண்ணும் கருத்துமா யிருப்பவன்; சுறுசுறுப்புடையவன்; இராணுவத்திற்கு ஏற்றவன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

நெப்போலியன் தன் பதினாரும் அகவையி லேயே துணைப்படைத் தலைவனாக நியமிக்கப்பட் டான். அக்காலத்தில்தான் புகழ் மிக்க பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்றது. மக்கள் கொதித்தெழுந்து, கொடுமை புரிந்துவந்த செல்வர்களையும், பெருநிலக் கிழார்களையும் கொன்று குவித்தனர். அவர்களைக் கொல்வதற்கென்றே **கில்லடின்** (Gillotine) என்ற கொலைப் பொறி செய்யப்பட்டது. அரசனும் அவன் குடும்பத்தாரும் அதில் பலியிடப்பட்டனர். இறந்த வர் போக எஞ்சி இருந்த செல்வர்களும் நிலக் கிழார்களும் இங்கிலாந்து போன்ற அண்டை நாடு களுக்கு ஓடி ஒளிந்தனர். இப்புரட்சியைக் கண்ட மற்ற ஐரோப்பியர்கள், தங்கள் நாட்டிலும் எங்கு இத்தீ பரவிவிடுமோ என்று அஞ்சி நடுங்கினர். பிரெஞ்சுக் குடியரசை ஒடுக்க, இங்கிலாந்து பிரான் சின் மேல் போர் தொடுத்தது. வலி மிக்க ஆங்கிலப் பெரும் படையை, **தவுலன்** துறைமுகத்தில் நெப்போ லியன் முறியடித்தான்; உடனே பீரங்கிப் படைத் தலைவனாக உயர்த்தப்பட்டான்; உள் நாட்டுப் போரில் நாற்பதாயிரம் மக்கள் கொண்ட படையைத் தன் சிறு பீரங்கிப் படையால் சிதறடித்தான்.

பாரிசு நகரத்தில் கலகங்களைத் தடுப்பதன் பொரு ட்டு, எல்லாரிடமும் இருந்த படைக் கருவிகளையும் கைப்பற்றுமாறு நெப்போலியன் ஆணையிட்டான். அவ்வூரில் **ஜோசப்பைன்** என்ற அழகிய கைம்பெண் வாழ்ந்து வந்தாள். அவளுடைய கணவன் புரட் சிக்காரரால் கொல்லப்பட்டான். அவள் வீட்டி லிருந்த வாளும் நெப்போலியன் ஆட்களால் கைப்பற்றப்பட்டது. அவ்வாளைத் திருப்பிப்

பெறத் தன் மகனை அவள் நெப்போலியனிடம் அனுப்பினாள். "என் தந்தையின் நினைவுச் சின்னமாக அவ்வாள் ஒன்றே இருக்கிறது; அன்பு கூர்ந்து அதைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்" என்று கண்ணில் நீர் ததும்ப அச்சிறுவன் நெப்போலியனிடம் கேட்டான். நெப்போலியன் உள்ள மிரங்கி, அச்சிறுவனிடம் வாளைத் திருப்பிக் கொடுத்துவிட்டான். மறுநாள் அதற்கு நன்றி தெரிவிப்பதற்காக, ஜோசபைன் நெப்போலியனிடம் வந்தாள். அவளுடைய அமைதியான அழகும், பணிவோடு கூடிய இனிய பண்பும் நெப்போலியனைப் பெரிதும் கவர்ந்தன. தன்னைவிட ஈராண்டு வயதில் முதிர்ந்தவளான ஜோசபைனை நெப்போலியன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டான்.

சின்னாட்களில் நெப்போலியன் இத்தாலியில் இருந்த பிரெஞ்சு சேனைக்குத் தலைவனாக அமர்த்தப் பட்டான். **போ** நதிக்கரைப் போரும் **மாண்டுவாக் கோட்டை** முற்றுகையும், **வியன்னா** நகரில் நடந்த போரும் நெப்போலியன் **ஆஸ்திரியரின்** மேல் அடைந்த மாபெரும் வெற்றிகளாகும். பிறகு நெப்போலியன் நாற்பதாயிரம் வீரர்களும், முப்பது போர்க் கப்பல்களு மடங்கிய பெரும் படையோடு **எகிப்தின்** மேற் படையெடுத்துச் சென்று வெற்றி மாலை சூடினான்; இந்தியாவின்மேல் படையெடுக்கவும் திட்டமிட்டான். ஆனால் கடற்போரில் வல்லவனும் அஞ்சா நெஞ்சனுமான **நெல்சனின்** தலைமையில் வந்த ஆங்கிலக் கடற்படை, நெப்போலியனின் கடற்படையை **டிரபால்கர்** என்னுமிடத்தில்

படுதோல்வி யடையும்படி செய்து விட்டது. ஆனால் நெப்போலியன் உள்ளம் தளரவில்லை. இதற்குள்ளாக இதாலியில் இருந்த பிரெஞ்சுப் படை துரத்தப் பட்டதாகவும், மற்ற வல்லரசுகள் பிரான்சின்மேல் போர்தொடுக்க முயற்சிப்பதாகவும் செய்தி கிட்டியது. உடனே நெப்போலியன் பிரெஞ்சு நாடு நோக்கிப் புறப்பட்டான். இவன் பிரான்சை அடைந்த பொழுது, உள் நாட்டுக்குழப்பம் மிகுந்திருந்தது. நெப் போலியன் சென்ற வழியில் அவனைக் கொல்வதற்கு வெடிகுண்டும் வைக்கப்பட்டது. ஆனால், அவன் குழப்பக்காரரை அடக்கி, நாட்டில் அமைதியான ஆட்சி நிலைபெறுமாறு செய்தான். இச்சமயத்தில் ஆங்கிலேயர் எகிப்தைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டனர். நெப்போலியன் ஆங்கிலேயருக்கு நல்ல பாடம் கற்பிக்க எண்ணித் தக்க ஆயத்தத் தோடு ஆங்கில நாட்டின் மேல் போர்தொடுக்க முனைந்தான். அப்போது ஆங்கில நாடு பஞ்சத்தா லும் பட்டினியாலும் வாடியிருந்ததால், போரை விடுத்து அமைதியை விரும்பியது. எகிப்தையும் மால்ட்டாவையும் திருப்பிக் கொடுக்க இசைந்தது. இவ்வாறு இரு நாடுகளும் இகல் நீங்கி நட்புறவு கொண்டன.

ஆனால் இந்நட்பு நீண்ட நாள் நீடிக்கவில்லை. நெப்போலியன் மீண்டும் இங்கிலாந்தின்மேல் போர் தொடுக்க மூந்நூறாயிரம் வீரர்களையும், இரண்டாயிரம் பீரங்கிப் படகுகளையும் திரட்டினான். போலோன் என்ற இடத்தில் பாசறை அமைத்துத் தங்கியிருந் தான். நெப்போலியனின் வளர்ச்சியையும் செல்

வாக்கையும் கண்டு, தங்களுக்கும் இடையூறு நேருமோ என்று அஞ்சிய பிரசியாவும், உருசியாவும் திடீரென்று பிரான்சைத் தாக்கின. ஒரு திங்களில் இவ்விரு படைகளையும் நெப்போலியன் முறியடித்தான். போர்ச்சுகல், ஸ்பெயின் நாடுகளையும் வென்று தன்னடிப்படுத்தினுன். ஆஸ்திரியர்களை மறுபடியும் இரேட்டிஸ்பன் என்ற விடத்திலும் தோற்கடித்து அவர்கள் கோட்டையைக் கைப்பற்றினுன். இப்போர் மிகவும் போற்றத் தகுந்ததாகும். கோட்டைக்குள் முதலில் நுழைய ஐம்பது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் மதில் மேலிருந்த ஆஸ்திரியர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டனர். மறுபடியும் ஐம்பது பேர் பலியாயினர். அப்பிரெஞ்சு வீரர்களின் தன்னலமற்ற உயிர்க்கொடை வெல்ல முடியாத அக்கோட்டையை எளிதில் வெல்லுமாறு செய்தது.

நெப்போலியனின் வீரத்தையும், ஆட்சித் திறமையையும் போற்றி, பிரெஞ்சு மக்கள் நெப்போலியனையே மன்னனுக்க விரும்பினர். நெப்போலியனும் அதற்கிசைந்து கிருத்தவ மத குருவான போப்பின் நல்வாழ்த்தோடு முடிபுனைந்து, ஜோசபைனேடு அரியணை ஏறினுன். நெப்போலியன் பேரரசனுனதும், மற்ற வல்லரசுகள் குலை நடுக்கம் கொண்டன. சிலர் அவன் நட்புறவை நாடினர். உருசிய நாட்டு மன்னன் தன் தங்கையை நெப்போலியனுக்கு மணவியாக்க விரும்பினுன். ஒரு வல்லரசோடு மண உறவுகொண்டால் தனக்கும் தன் நாட்டுக்கும் வலிமை ஏற்படுமென்று நெப்போலியன் கருதினுன். தன் அண்டை நாடும், வல்லரசுமான ஆஸ்திரிய

நாட்டு இளவரசி, அழகிலும் அறிவிலும் சிறந்தவள் என்று கேள்விப்பட்டு, அவளைத் திருமணம் செய்து கொள்ள நெப்போலியன் விரும்பினான். கிருத்தவ சமயக் கொள்கைப்படி ஒரு மனைவியிருக்க மற்றொருத்தியை திருமணம் செய்துகொள்ள முடியாது. எனவே தன் முதல் மனைவியான ஜோசபைனுக்கு, வாழ்க்கை வசதியும், போதிய செல்வமுமளித்து விட்டு அவள் இசைவின் பேரில் மணவிலக்குப் பெற்றுக்கொண்டு, ஆஸ்திரிய அரசிளங்குமரி **மேரி லூயிசாவை** மறுமணம் செய்துகொண்டான். அவர்களுக்கு அடுத்த ஆண்டில் ஓர் ஆண் மகவும் பிறந்தது.

பிரான்சும் ஆஸ்திரியாவும் மண உறவால் ஒற்றுமைப் பட்டதால், தனக்கு ஆபத்து ஏற்படலாம் என்று நினைத்த உருசிய மன்னன் நெப்போலியனிடம் பகைமை பாராட்டினான். எனவே நெப்போலியன் ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு, உருசியாவின் மேல் போர் தொடுத்தான். உருசியப் படை பின்னடைந்தது; உருசிய நாட்டின் தலைநகரான மாஸ்கோவை நெப்போலியன் எளிதில் கைப் பற்றிக் கொண்டான்; ஆனால், மாஸ்கோவில் மனித வாடைகூட இல்லை. மாஸ்கோவை முதலிலேயே தீயிட்டுக் கொளுத்திவிட்டு உருசியர் வேறு இடம் சென்றுவிட்டனர். நெப்போலியன் ஏமாற்றத்தோடு திரும்பினான். நெப்போலியன் படையெடுப்பால் உருசிய மக்களடைந்த கொடுந்துயர், உருசியப் பேரறிஞர் **தால்ஸ்தாய்** எழுதிய **போரும் அமைதியும்** என்ற நூலில் உருக்கமாக வருணிக்கப்படுகிறது.

உருசியப் படையெடுப்பிலிருந்து, நெப்போலியனின் வீழ்ச்சி தொடங்கியது. பிரெஞ்சுப் படை திரும்பும்போது கொடிய பனிக்காலம் துவங்கியது. குளிரினாலும் பசியினாலும் பல்லாயிரக்கணக்கான பிரெஞ்சு வீரர்கள் இறந்தனர். பனியிலும் குளிரிலும் பழக்கப்பட்ட உருசியர்கள், இச் சமயத்தை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, பிரெஞ்சுப் படைக்குப் பெரும்சேதம் விளைவித்தனர். எஞ்சிய சிறுபடையோடு நெப்போலியன் பிரெஞ்சு நாடு திரும்பினான். பிரெஞ்சுப் படை கேடுற்றதை அறிந்த மற்ற வல்லரசுகள் ஒன்று கூடி நெப்போலியனை எதிர்த்தன. பெண் கொடுத்த ஆஸ்திரிய மன்னனும் அவர்களுடன் சேர்ந்துகொண்டான். இந் நிலையில் கூட நெப்போலியன் பல இடங்களில் வெற்றி பெற்றான். இறுதியில் தோல்வி யடைந்து, பிரான்சுக்கு இருநூறு கல் தொலைவிலுள்ள **எல்பா** என்னும் தீவிற்கு அனுப்பப்பட்டான். சிறிது நாட்களில் எல்பாவிலிருந்து தப்பி வந்து மறுபடியும் பிரெஞ்சு மன்னனென முடி சூட்டிக் கொண்டான். ஆங்கிலேயரும் பிரசியரும் ஒன்று சேர்ந்து ஒரு பெரும் படையோடு பெல்ஜிய நாட்டிலுள்ள **வாட்டர்லூ** என்ற இடத்தில் நெப்போலியனை எதிர்த்தனர். அப்போரில் நெப்போலியன் தோல்வியுற்று, ஆங்கிலத் தளபதியான **வெலிங்டன்** பிரபுவால் சிறைப்பிடிக்கப்பட்டான். ஆங்கிலேயர்கள் ஐரோப்பாவிலிருந்து ஆறாயிரத்து இருநூறு கல் தொலைவிலுள்ள **செயிண்ட் ஹெலினா** என்ற தீவில் நெப்போலியனைச் சிறைவைத்தனர். அவன் ஆறு ஆண்டுகள் அங்கு வாழ்ந்து தன்னுடைய ஐம்பத்து மூன்றாவது

வயதில் இறந்தான். அவனுடைய பிணம் அத்தீவி லேயே புதைக்கப்பட்டது. இருபது ஆண்டுகட்குப் பிறகு, அவ்வீரவுடல் பிரெஞ்சு நாட்டிற்குக் கொண ரப்பட்டு, ஒருபேரரசனுக்குரிய சிறப்போடு அடக்கம் செய்யப்பட்டது.

நெப்போலியனைப் போல் பெரு முயற்சியும், பேருழைப்பும், வியத்தகு அறிவாற்றலும் வாய்க்கப் பெற்ற மனிதனை உலகில் காண்பதரிது. ஒரு நாளைக்கு இரண்டுமணி நேரம் தான் அவன் உறங்குவது வழக்கம். அவன் தன்னைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, "என்னுடைய மூளையில் பல வேலை முறைகள் ஒழுங்காகவும், தனித்தனியாகவும், அறைகளைப் போன்று அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வேலையை மறந்து மற்றொரு வேலையைப் பற்றி எண்ணும் போது முந்திய அறைகளை மூடிக் கொண்டு, பிந்திய அறையைத் திறந்து கொள் வேன். இரண்டு வேலைகள் ஒன்றோடொன்று கலப் பதில்லை. எனக்குக் களைப்பே ஏற்படுவதில்லை. வீண் எண்ணத்திற்கு என் மூளையில் இடங்கிடையாது. உறங்க விரும்பினால் எல்லா அறைகளையும் மூடி விட்டு, உடனே அயர்ந்து தூங்கிவிடுவேன். நினைத்தபொழுது உறங்குவதற்கு என் மூளையைப் பழக்கி வைத்திருக்கிறேன்" என்று கூறினான்.

தனக்கு இன்னா செய்தாரையும் மன்னிக்கும் அரும்பண்பினை நெப்போலியன் பெற்றிருந்தான். தன்னைக் கொல்லச் சதி செய்தவரையும் மன்னித் தான். ஆனால் கொடியோரைக் கடுமையாக ஒறுத் தான்; ஓர் இளம் பெண்ணைக் கட்டாய மணம்

செய்து கொண்ட ஒரு செல்வக் கிழவன், தன்னை விரும்பவில்லை என்பதற்காக அவளைக் கொலை செய்தான். இதை உணர்ந்த நெப்போலியன், பல பிரபுக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், அவனுக்குக் கொலைத்தண்டனையளித்தான். "கொலை யிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களை கட்டதனொடுநேர்"—என்னும் உயர்மொழி, அரசர் கள் கடைப்பிடித்தொழுக வேண்டிய அறநெறி யன்றோ!

நன்றிமறவாத நற்பண்பு அவன் வாழ்வில் தலை யோங்கி நின்றது. அவன் போர்க்களத்தில் மயங்கி வீழ்ந்த பொழுது தனக்கு நீர் கொடுத்துதவிய போர் வீரனுக்கு உயர் பதவி நல்கினான். பாரிசில் வேலையில்லாமல் திரிந்த காலத்தில் தன்னை ஆதரித்த ஒரு பெண்மணிக்கு, தான் பேரரசனாக விளங்கிய காலத்தில் பெரும் பொருள் நல்கினான். அவன் குடும்பம் வறுமைப் பிணியில் வாடிய காலத் தில் 6,000 பிராங்குகள் கொடுத்துதவிய நண்பன் ஒருவனுக்குப் பிற்காலத்தில் 60,000 பிராங்குகள் கொடுத்ததோடு, அவனைச் சிறந்த அலுவலிலும் அமர்த்தினான்.

நெப்போலியன் சிறந்த படைத்தலைவன் மட்டு மல்லன்; சிறந்த அரசியல் அறிஞனுங்கூட. நாட்டின் முன்னேற்றத்திற்கான அருஞ்செயல்கள் பல ஆற்றி னான். நாற்பதினாயிரம் மைல் நீளமுள்ள பாதைகள் அவன் காலத்தில் போடப்பட்டன. பதினான்கு பாலங்கள் கட்டப்பட்டன. பல கல்லூரிகளும், தொழிற்சாலைகளும், மருத்துவ மனைகளும் அவனால்

நிறுவப்பட்டன. வாணிகம் வளர்ந்தது. நாடு செழித்தது.

நெப்போலியன் ஓயாமல் படித்துக்கொண்டிருப்பான். பாசறையில் கூடப் படித்துக்கொண்டிருப்பது அவன் வழக்கம். கட்டுக் கதைகள் படிப்பது அவனுக்குப் பிடிக்காது. மத நூல்களையும் உயர்ந்த ஆராய்ச்சி நூல்களையும் இலக்கியங்களையுமே அவன் படிப்பான். பைபிள், குர்ஆன் ஆகிய இரண்டு சமய நூல்களையும் அவன் படித்துக் கிருத்தவ சமயத்திற்கும் இசுலாமிய சமயத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ச்சி செய்து வந்தான்.

பீரங்கிக் குண்டுகள் பறந்த போர்க்களத்தில் நின்றபொழுதுகூட அவன் மரணத்தைப் பற்றி அஞ்சியதில்லை. "இங்கு நிகழ்கின்ற போர்களில் நான் மரணத்தையே நாடி அலைகிறேன். மரணத்தைப் பற்றிய அச்சமே எள்ளளவும் எனக்குக் கிடையாது. சாவே எனக்கு இன்பமூட்டவல்லது" என்று அவன் ஒரு சமயம் கூறினான்.

நெப்போலியன் வாட்டர்லூ போரில் தோல்வியடைந்து போர்க்களத்தில் நின்றான். அவன் இடையில் ஒரு கட்டாரி மட்டும் இருந்தது. அருகில் சென்று அவனைக் கைது செய்ய யாருக்கும் நெஞ்சுறுதியில்லை. பிறகு நெப்போலியன் தானே கட்டாரியைத் தொலைவில் வீசியெறிந்தான். அதன் பிறகே அவனைக் கைது செய்தனர்.

நெப்போலியன் தன்னுடைய அறிவினாலும், ஆற்றலினாலும், தளராத ஊக்கத்தாலும் தனி அரசை

நிலைநாட்டிப் புகழ்பெற்றான்; முதன் முதலாக ஐரோப்பாவிற்குப் போர் முறையின் நுணுக்கங்களை எடுத்துக் காட்டினான்; சிறிய படையைக் கொண்டு பெரிய படையைத் தகர்த்து வெற்றிபெறும் வழியைக் கண்டு பிடித்தான்; அஞ்சா நெஞ்சத்துடன் தனி மனிதனாக நின்று ஐரோப்பாவைக் கலங்கச் செய் தான்; நெப்போலியனை இன்றும் பிரெஞ்சு மக்கள் கடவுள்போல் போற்றி வருகின்றனர்.

போர்க்களத்தில் நுழைந்தால் நெப்போலியன் காலன்போல் விளங்குவான். ஆனால் தனி வாழ்வில் அவனைப்போன்ற உயர் மனிதனைக் காணமுடியாது. நெப்போலியன் பேராட்சி வெறி கொண்டவன் தான்; ஆனால் இறுதிக் காலத்தில் அதற்காக வருந் தினான்; தான் இறக்கும்போது, தன் மகன் நடந்து கொள்ளவேண்டிய முறைகளைப் பற்றிப் பின்வரு மாறு குறிப்பிடுகிறான்:

"என் மகன் என் வாழ்க்கையைப் பின்பற்றி நடக்கவேண்டும். உண்மையான பிரெஞ்சுக் காரனாக எல்லா வகையிலும் விளங்கவேண்டும். விளையாட்டுக்காகப் போர் தொடங்கக் கூடாது. மிகவும் தவிர்க்க முடியாத நிலையில், போரில் இறங்க வேண்டும். பிரெஞ்சு நாட்டின் புகழை உயர்த்த வேண்டும். நாட்டின் அமைதிக்காகப் பாடுபட வேண்டும். அயல் நாட்டினரின் துணையால் பட்டத்துக்கு வர முயற்சிக்கக் கூடாது. அப்படி அரசாள்வதைவிடச் சும்மா இருக்கலாம்" என்று எழுதிவைத்தான்.

# 5. உலகப் போர்கள்

## போருக்கு முன் :

பதினெட்டாம் நூற்ருண்டில் மேலே நாடுகள் விஞ்ஞானத்தில் பெரிதும் வளர்ச்சியுற்றன. சிறந்த விஞ்ஞானப் பொறிகளும், கடலிலும் மண்ணிலும் விண்ணிலும் செல்லும் சிறந்த போக்குவரவுச் சாதனங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. ஒவ்வொரு நாடும் தொழில் துறையில் மிக முன்னேறியது. **கேப்டன் குக், டேவிட் லிவிங்ஸ்டன்** முதலியோர், பல புது நாடுகளைக் கண்டறிந்தனர். நாட்டின் கைத்தொழிலே வளர்த்து நிறைந்த பொருள்களை உற்பத்தி செய்வதற்கும், அப்பொருள்களை உண்டாக்குவதற்கான மூலப் பொருள்களைப் (Raw Meterials) பெறுவதற்கும், அவ்வாறு உண்டாக்கிய பொருள்களை விற்றுப் பெரும் பொருள் திரட்டுவதற்கும், ஒவ்வொரு வல்லரசும் போட்டி போட்டுக்கொண்டு உலகின் பல பகுதிகளையும் வென்று, குடியேற்ற நாடுகளை (Colonies) ஏற்படுத்தி, அவைகளைச் சுரண்டத் தொடங்கின. ஆதிக்கத்தையும் வாணிகத்தையும் பரப்ப, வல்லரசுகள் ஒன்றையொன்று விரைத்துப் பார்க்கத் தொடங்கின. ஜெர்மனி நீண்ட காலத்திற்குப் பிறகு வல்லரசாக மாறியது ; பிறநாடுகளைக் கைப்பற்றித் தன் செல்வாக்கை வளர்க்க வேண்டுமென்று பேரவாக் கொண்டது. **பிஸ்மார்க்** என்ற தலைசிறந்த தலைவர் தோன்றி, ஜெர்மனியின்

உயர்வுக்குப் பெரிதும் பாடுபட்டார். விஞ்ஞானத்தி லும் பொருளாதாரத்திலும் ஜெர்மனி வெகுவாக முன்னேறியது; தொழிற்றுறையில் வியக்கத்தக்க முன்னேற்றம் காட்டியது; பொருள்களை மலிவாக உற்பத்தி செய்து, மற்ற வல்லரசுகளோடு வாணிகத் தில் போட்டியிட்டது; சிறந்த கப்பற் படையையும், பெரிய நிலப் படையையும், வலிய விமானப் படை யையும் நிறுவியது. ஜெர்மனியின் முன்னேற்றத் தைக் கண்டு, மற்ற வல்லரசுகள் பொறாமையும் அச்சமும் கொண்டன. குறிப்பாக ஜெர்மனியின் வலிய கப்பற்படையைக் கண்டு, கடலரசியான இங்கிலாந்து கொண்ட அழுக்காற்றுக்கு அள வில்லை. "ஜெர்மனிதான் உலகத்திற்குத் தலைமை வகிக்கப் போகிறது. அது தனக்குரிய இடத்தைப் பெற விரும்புகிறது. ஜெர்மனியின் வருங்காலம், அதன் கடலாதிக்கத்தைப் பொறுத்திருக்கிறது. உலகெங்கும் தன்னுடைய பண்பாட்டைப் பரப்ப வேண்டியது அதன் கடமையாகும்," என்று ஜெர்மானியப் பேரரசர் கெய்சர் பெருமுழக்கம் செய்தார்.

பிரான்சும் ஜெர்மனியும் பரம்பரைப் பகைவர் கள். ஜெர்மனியிடம் முதலில் அடைந்த தோல் விக்குப் பழி வாங்க, தக்க வாய்ப்பைப் பிரான்சு எதிர்நோக்கியிருந்தது. துருக்கியின் நட்பைப் பெற்று, வாணிக வளர்ச்சிக்காகப் பாக்தாத் வரையில் இருப்புப்பாதை அமைக்க எடுத்துக்கொண்ட ஜெர் மனியின் முயற்சி, மற்ற வல்லரசுகளின் பொறாமைத் தீயை மேலும் கிண்டிவிட்டது. ஜெர்மனி, ஆஸ்தி

ரியா, இதாலி ஆகிய நாடுகளின் முக்கூட்டு ஒப்பந்தம், பிரிட்டன் பிரான்சு உருசியா ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து எதிர்ப்பு அணி அமைக்கக் காரணமாக இருந்தது. எதிர்பாராமல் ஏற்பட்ட பால்கன் போரில், குருதி ஆறு ஓடியது. செர்பிய நாட்டு மன்னரான **அலெக்சாந்தரும்,** அரசி **டிகாரா வும்,** அரச குடும்பத்தாரும் அந்நாட்டுப் புரட்சிக் காரர்களால் வெறுக்கத்தக்க முறையில் படுகொலை செய்யப்பட்டனர். சுயாட்சி வேண்டி அயர்லாந்து பெரும் புரட்சி செய்து கொண்டிருந்தது.

இத்தகைய சூழ்நிலையில் ஒவ்வொரு நாடும், தங்கள் படைப் பலத்தை அளவுக்கு மீறிப் பெருக்கத் தொடங்கியது. ஒவ்வொரு நாட்டு அரசியல் வாதிகளும், தலைவர்களும் நாட்டு மக்களைப் போரில் நாட்டங்கொள்ளத் தூண்டும் வகையில் பிரசாரம் செய்தனர். செய்தித் தாள்கள் இப்பணியில் பெரும் பங்கு கொண்டன. படைக்கலப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில், உயர்ந்த அரசியல் அலுவலாளர்களும், அரசியலில் செல்வாக்குப் பெற்ற செல்வந்தர்களும், பெரும் பங்காளிகளாக இருந்தனர். அவர்களுக்கு இப் போர்க்கோலம் நல்ல 'சம்பா அறுப்பாக' இருந்தது. போர் ஏற்பட்டால் நிறையத் தளவாடங்களை உற்பத்தி செய்து, திரண்ட பொருளைச் சேர்க்க அவர்கள் விரும்பினர். அவர்கள் தன்னலம் கருதிப் போரை ஆதரித்ததோடு தங்கள் செல்வாக்கால் அரசியலாரையும் போருக்குத் தூண்டினர்.

**உலகப் போர் :**

இச்சமயத்தில்தான் முதல் உலகப் போர் துவங்கியது. ஆஸ்திரிய நாட்டு இளவரசரும் அவர் மனைவியும், தங்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்த **பாஸ்னியா** நாட்டின் தலைநகரான **சிராஜிவோவுக்குச்** சென்றனர். இளவரசர் **பெர்டினண்டும்** அவர் மனைவியும் திறந்த கோச்சு வண்டியில் ஊர்வலம் வந்தபொழுது, யாரோ அவ்விருவரையும் சுட்டுக் கொன்று விட்டனர். ஆஸ்திரியப் பேரரசு, பாஸ்னியாவின் அண்டை நாடான **செர்பியாவை** இச்சதிக்கு உடந்தையாக இருந்ததாகக் குற்றம் சாட்டியது. செர்பியா குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டது; ஆனால் ஆஸ்திரியா மன்னிக்க மறுத்துச் செர்பியாவின் மீது போர் தொடுத்தது. இச்சிறு பொறியே உலகப் போர் என்னும் காட்டுத் தீயாக மாறியது.

போர் விருப்புக் கொண்டு எல்லா வல்லரசுகளும் இருந்தாலும், சில சூழ்நிலைகளின் காரணமாக முதலில் போரில் இறங்கத் தயங்கின. அறிவற்ற அமைச்சர்களின் தூண்டுதலால், உருசிய மன்னன் ஜார் பெரும்படை திரட்டிப் போருக்குத் தயாரானன். உருசியாவின் போர்க்கோலத்தைக்கண்ட ஜெர்மனி, உருசியா படை திரட்டுவதை நிறுத்த வேண்டுமென்று கூறியது. ஆனல், ஜார் அதற்குச் செவி சாய்க்கவில்லை. உடனே ஜெர்மனி பிரான்ஸ் மீதும், உருசியா மீதும் போர் அறிவிப்புச் செய்தது. பெல்ஜிய நாட்டின் நடுநிலைமையை மீறி, அதன் வழியாக ஜெர்மனி தன் படையைப் பிரான்சு நோக்கிச் **செலுத்**

தியது. பெல்ஜியம் தன் சிறு படையால், பொங்கி வரும் ஜெர்மானியப் படைக் கடலுக்கு அணைகோல முயன்றது. சினங் கொண்ட ஜெர்மானியர் பெல்ஜியம் நாட்டாரை அச்சுறுத்த வெருவந்த செயல்களிலிறங்கினர். உலுவெயின் என்ற அழகிய நகரையும் அந்நகரிலிருந்த புகழ்பெற்ற பல்கலைக் கழகத்தையும் ஜெர்மானியர் தவிடுபொடியாக்கினர். எதிர்ப்பட்ட பொருள்களை யெல்லாம் எற்றி நசுக்கிக் கொண்டு, ஜெர்மானியப் போர் உருளை மலை உருளுவது போல் பாரிசு நோக்கிச் சென்றது. போர் துவங்கிய ஒரு திங்களுக்குள், பாரிசு ஜெர்மானியர் கைக்குக் கிட்டிவிடும் போலிருந்தது. பிரெஞ்சியர் தங்கள் தலைநகரைப் பாரிசிலிருந்து போர்டோவுக்கு மாற்றுவதற்குக்கூட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டனர். இதற்குள்ளாக உருசியப்படை ஜெர்மனியின் ஒரு பகுதியான பிரசியாவைத் தாக்கியது. எனவே ஜெர்மானியர் மேற்கிலும் கிழக்கிலும் இரு முனைப் போராட்டம் நடத்த வேண்டியதாயிற்று. பிரசியாவிலுள்ள சதுப்பு நிலங்களிலும் ஏரிகளிலும் ஜெர்மானியர் உருசியப் படையை வளைத்து அடியோடு அழித்து விட்டனர். இது ஜெர்மானியர் உருசியரின் மீது அடைந்த மாபெரும் வெற்றியாகும். ஜெர்மன் படை இரண்டாகப் பிரிந்ததும், பிரெஞ்சியர் ஐம்பது மைல் முன்னேறிப் பாரிசைக் கைப்பற்றிக் கொண்டனர். பிறகு அகழிப்போர் (Trench Warfare) மூண்டது; உருசியப் படை ஆஸ்திரியப் படையைத் தோற்கடித்தது. ஆனால் ஜெர்மானியரிடம் எல்லா இடங்களிலும் தோல்வியே கண்டது. இதற்குள் துருக்கி சூயஸ் கால்வாயைத் தாக்கியது. உடனே

ஆங்கிலேயர்கள் துருக்கிப் பேரரசின்மீது படை யெடுத்து, இராக்கையும், பாலஸ்தீனத்தையும், சிரி யாவையும் தாக்கினர். அராபியருக்குக் கையூட்டு வழங்கி, துருக்கியருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யு மாறு தூண்டினர். என்ன செய்தும் துருக்கியை வெல்ல முடியவில்லை.

ஆப்பிரிக்காவிலிருந்த ஜெர்மன் குடியேற்ற நாடுகளை நேசக் கட்சியார் (பிரான்சு, இங்கிலாந்து, உருசியா) தாக்கினர். இத்தாலி பலநாள் மதிற்மேற் பூனையாக இருந்தது; நேசக் கட்சியார் கையுயர்ந்த தும் உடனே அவர்களுடன் சேர்ந்து கொண்டது; நேசக்கட்சியார் கொடுத்த கையூட்டைப் பெற்றுக் கொண்டு, ஆஸ்திரியாவின் மேல் போர் தொடுத் தது. அதே ஆண்டில் பல்கேரியா ஜெர்மனியுடன் சேர்ந்து கொண்டது. உருமேனியா நேசக் கட்சியு டன் சேர்ந்து கொண்டது. நடு ஐரோப்பிய வல்லரசுக ளான ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் பெல்ஜியம், பிரான்சின் வட கிழக்குப் பகுதி, போலந்து, செர்பியா, உருமேனியா ஆகிய நாடுகளைப் பிடித்துக் கொண் டன. ஆனால் பிரான்சோடு நடந்த மேற்குப் போர் முனையில் மட்டும், எந்த முன்னேற்றமும் காட்ட முடியவில்லை.

பிரிட்டன் கடலரசி என்ற பெயரைப் பூண்டு கடலாதிக்கத்தில் ஈடும் எடுப்புமின்றி விளங்கிய நாடாகும். எனவே கடலில் நேசக் கட்சியினரின் கையே மேலோங்கி யிருந்தது. ஆனால், அந்நிலைமை அதிக நாள் நீடிக்கவில்லை. மிகவும் திறமை படைத் தவனை எம்டன் என்று இன்றும் நாம் கூறுகிறோம்

அல்லவா? எம்டன் என்பது ஒரு ஜெர்மானியப் போர்க் கப்பல். அது நேசநாட்டுக் கப்பல்களைக் கதி கலங்க வைத்தது. அதனால் மூழ்கடிக்கப்பட்ட நேச நாட்டுக் கப்பல்கள் கணக்கிலடங்கா. சென்னையைக் கூட அக்கப்பல் தாக்கியது. ஜெர்மனியானது தன் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்டு, நேசப் படையினரின் கப்பல்களைக் கடலின் அடிவயிற்றுக்குள் அனுப்பிக் கொண்டே இருந்தது. இந்நீர்மூழ்கிக் கப்பற் போரில் ஜெர்மனி நல்ல வெற்றியடைந்த தென்றே சொல்லவேண்டும். மேலும் ஜெர்மானியரின் **ஜெப்பலின்** விமானங்கள், நிலாக்கால இரவுகளில் பறந்துவந்து இலண்டன் நகர்மீதும், படைக் கலத் தொழிற்சாலைகள் மீதும் குண்டுகளை வீசிப் பேரழிவு செய்தன. நச்சுப்புகையையும் ஜெர்மன் கையாண்டது.

**டாங்கி** என்பது, முதல் உலகப் போரில் பயன் படுத்தப்பட்ட ஆங்கிலேயரின் புதுப் படைப்பு; மேடு பள்ளம் எல்லா இடங்களிலும் கம்பளிப்பூச்சி போல் ஊர்ந்து செல்லக்கூடிய அரக்கப் பொறி. இதன் தாக்குதலால் நூறுயிரக் கணக்கான வீரர்கள் கொல்லப்பட்டனர். ஜெர்மானியத் தலைவர்கள் தங்கள் நீர்மூழ்கித் தாக்குதலை இன்னும் கடுமையாக்கி, இங்கிலாந்தைப் பட்டினி போட்டுப் பணிய வைப்ப தென்று முடிவு செய்தனர். இங்கிலாந்திற்கு உணவு ஏற்றிச் செல்லும் நொதுமல் கப்பல்களையும் மூழ்கடிப் போம் என்று அறிவித்தனர். அதைக் கேட்டு அமெரிக்கா கடுங்கோபங் கொண்டது. **லூசிடானியா** என்ற ஆங்கிலக் கப்பல் ஜெர்மானிய நீர்மூழ்கிக்

கப்பலால் மூழ்கடிக்கப் பட்டது. அதில் பயணம் செய்தவர்களில் நிறைய அமெரிக்கரும் இருந்தார்கள். இதனுற் பெருஞ்சினங் கொண்ட அமெரிக்காவும் போரில் இறங்கியது.

இதற்குள்ளாக, ஜெர்மனிக்குச் சாதகமாக ஒரு நிகழ்ச்சி நடந்தது. 1917-இல் உருசிய நாட்டில் புரட்சி ஏற்பட்டு, ஆட்சி போல்ஷ்விக்குகளின் கைக்கு மாறியதால், அவர்கள் போரை நிறுத்திவிட்டார்கள். அதனுல் ஜெர்மனி தன் முழு வலியையும் மேற்குப் போர்முனைக்குத் திருப்பிவிட்டது. உருசியாவில் புரட்சி நடக்குமென்று ஒரு திங்களுக்கு முன் தெரிந்திருந்தால், ஜெர்மனியை வெல்ல யாராலும் முடியாது. உலக வரலாறே மாறியிருக்கும். ஆனுல், இதற்குள் பிரிட்டிசாரின் கடல் வலிமை ஓங்கியது. மேலும் அமெரிக்கா புது வலிமையோடு போரில் இறங்கியது. ஆங்கிலக் கப்பற்படை, உணவு ஏற்றிச் செல்லும் ஜெர்மானியக் கப்பல்களைத் தாக்கி, அந் நாட்டைப் பட்டினி போட்டது. ஜெர்மானிய மக்கள் பசிக்கொடுமையால் வாடினர். அதற்குள் ஜெர்மனியில் முடியாட்சி வீழ்ந்தது. கெய்சர் ஜெர்மனியை விட்டு ஆலந்து நாட்டிற்கு ஓடிவிட்டார். எனவே ஜெர்மனி சமாதானத்தை நாடுவதைவிட வேறு வழியில்லாமல் போய்விட்டது. 1918-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் பதினெட்டாம் நாள், இரு சாராரும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அமெரிக்க மக்கட் தலைவரான **உட்ரோ வில்சன்** வகுத்த பதினுன்கு கொள்கைகளைக் கொண்ட ஒப்பந்தத்தோடு முதல் உலகப்போர் முடிவடைந்தது.

## முதல் உலகப் போரின் விளைவுகள் :

முதல் உலகப் போரால் விளைந்த கேட்டை வரையறுத்துக் கூற முடியாது. போரில் பங்கு கொண்ட நாடுகளில் பட்டினியும் கொள்ளை நோயும் தலைவிரித்தாடின. கடன் தொல்லையும், பொருளாதார நெருக்கடியும் குரல் வளையை நெறித்தன. அரசியல் வாதிகள், தொழில் முதலாளிகள் ஆகியோரின் போர் வெறியாலும் பேராசையாலும் போர் ஏற்பட்டது. ஆனால் அதன் விளைவால் அவதியுற்றவர் ஏழைகளும் நடுத்தர மக்களுமே. ஒவ்வொரு நாட்டிலும் ஒரு குற்றமு மறியாத இலட்சக்கணக்கான இளங் குருத்துகள் போர் என்னும் பலி பீடத்திலே சாய்க்கப்பட்டன. போரின் கொடுமையை அதிகம் விவரிக்க வேண்டியதில்லை. அப்போரில் ஏற்பட்ட அழிவுகளைக் கணக்கிட்டு வெளியிடப்பட்டுள்ள பட்டியலைப் பார்த்தாலேபோதும். மனிதன் எந்த அளவு விலங்கு நிலைக்குத் தாழ்ந்திருக்கிறான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். அப்பட்டியல் பின்வருமாறு :—

போர் வீரர்களில் மாண்டவர்கள் என்று நிச்சயமாகத் தெரிந்தவர்கள் :

ஒரு கோடி முப்பது லட்சம் பேர்.

மாண்டதாகக் கருதப்படுபவர்கள் :

முப்பது லட்சம் பேர்.

மக்களில் (Civilians) மாண்டவர்கள் :

ஒரு கோடி முப்பது லட்சம் பேர்.

காயம்பட்டவர்கள் : இரண்டு கோடிப் பேர்.

சிறைப்பட்டவர்கள் : முப்பது லட்சம் பேர்.

போரில் அநாதையாக்கப்பட்ட குழந்தைகள் :
தொண்ணூறு லட்சம் பேர்.
போரால் கணவனை இழந்த கைம்பெண்கள் :
ஒரு கோடிப் பேர்.
நேசக் கட்சியினரின் போர்ச் செலவு :
சுமார் நாலாயிரத்து நூறு கோடி பவுன்.
ஜெர்மன் கட்சியின் போர்ச் செலவு :
சுமார் ஆயிரத்து ஐந்நூறு கோடிப் பவுனுக்குமேல்.

## இரண்டாம் உலகப்போர் :

முதல் உலகப்போரில் பங்கு கொண்ட நாடுகள் அடைந்த இன்னலுக்கு அளவில்லை. ஆனால் போர் முடிவுற்றதும் ஒவ்வொரு நாடும் பழிவாங்கும் எண்ணமும் பகை உணர்ச்சியும் கொண்டு விளங்கினவேயன்றி அமைதி கொள்ள விரும்பவில்லை. அமெரிக்க மக்கட் தலைவரான உட்ரோ வில்சன் உலக அமைதி கோரி **உலக நாடுகள் கழகம்** (League of Nations) என்ற ஓர் அமைப்பை நிறுவினர். ஆனால், அமெரிக்க நாடே அதில் பங்குகொள்ளாமலிருந்தது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இறுதியில் அக்கழகம் ஒரு பொம்மலாட்டமாகவே முடிந்தது. அதனால் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியவில்லை. அதன் சட்டதிட்டங்கட்கு அடங்காமல், ஜப்பான் சீன நாட்டின்மேல் படையெடுத்தது. இதாலியானது அபிசீனியா, ஆல்பேனியா முதலிய சிறு நாடுகளின்மேல் படையெடுத்து வென்று, தன் பேரரசோடு சேர்த்துக்கொண்டது. ஜெர்மானிய மக்கள், மக்களாட்சியைவிடச் சர்வாதிகார

ஆட்சியையே பெரிதும் விரும்பும் இயல்பினர். முதல் உலகப் போரால், பிரான்சு, பெல்ஜியம் முதலிய நாடுகளுக்குப் பெரும் அழிவு ஏற்பட்டதே தவிர, ஜெர்மன் நாட்டிற்குச் சிறிதும் அழிவு ஏற்படவில்லை. ஆனால் ஜெர்மானியப் பேரரசின் குடியேற்ற நாடுகளும், நிலக்கரிச் சுரங்கங்களும் நேச நாட்டினரால் பறித்துக் கொள்ளப்பட்டன. பெரிய பொருளாதார நெருக்கடியும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஜெர்மனியை ஆட்கொண்டன. இந்நிலையில் மக்களாட்சியால் ஜெர்மனியில் உருப்படியான முன்னேற்றம் எதுவும் செய்ய இயலவில்லை. பசியாலும், பட்டினியாலும், நோயாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் வாடிய அம் மக்கள், தங்கள் குறை நீங்க எத்தகைய மாறுதலையும் மேற்கொள்ளும் நிலையிலிருந்தனர். இச்சமயத்தில்தான் ஜெர்மானிய அரசியல் அரங்கில் உலகமே அஞ்சத்தக்க ஒரு போர்வெறியன் தோன்றினன். அவன்தான் **அடால்ப் ஹிட்லர்.**

ஹிட்லர் **பிரௌனு** என்ற ஆஸ்திரிய நகரில் பிறந்தவன். இளமையிலேயே தந்தையை இழந்த அவனுக்குக் கல்வி கற்கப் போதிய வாய்ப்பில்லை. ஒரு சிறந்த ஓவியனுக வேண்டுமென்பது அவன் ஆசை. ஆனல் அது ஈடேறவில்லை. அவன் தன் பசிப்பிணியைப் போக்கிக்கொள்ள **வியன்ன** நகரில் ஒரு கட்டடக் கூலியாக வாழ்க்கை நடத்தினன்; முதல் உலகப்போர் துவங்கியதும், ஒரு போர் வீரனுகப் படையில் சேர்ந்தான். போரில் அவன் காட்டிய வீரத்தை மெச்சி, ஜெர்மானிய அரசாங்கம்

அவனுக்கு இரும்புச்சிலுவை வழங்கியது. அவன் போரில் அடிபட்டு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டான். உடல் நலம் சீர்பட்டு மருத்துவ மனையிலிருந்து அவன் வெளிவருவதற்குமுன் உலகப் போர் முடிவுற்றது.

முதல் உலகப் போர் முடிந்ததும்,ஜெர்மனி நூறுயிரம் போர் வீரர்களுக்குமேல் படைவைத்துக்கொள்ளக் கூடாது என்று நேச நாடுகள் ஆணையிட்டிருந்தன. அப்படையிலிருந்த தலைவர்களெல்லாம், சர்வாதிகார ஆட்சியையே பெரிதும் விரும்பினர். சர்வாதிகாரிகளான **பிஸ்மார்க், இரண்டாம் வில்லியம்** போன்ருர் காலத்தில் ஜெர்மனி ஒரு பெரிய வல்லரசாக விளங்கியதை அவர்கள் எண்ணிப்பார்க்கலாயினர். இச்சமயத்தை ஹிட்லர் ஒரு நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டான். கேட்போர் உள்ளங்களைத் தன்வயப்படுத்தி,அவர்களை வியப்பிலாழ்த்தும் சொல்லாற்றலை ஹிட்லர் பெற்றிருந்தான். அவன் வாயைத்திறந்தால் சொற்கள் காட்டாற்றின் கடுவேகத்தோடும், வாள் வீச்சைப் போன்ற வலிமையோடும் வெளிவரும். தான் பேசுவது என்ன என்று சில சமயங்களில் அவனுக்கேகூடப் புரியாமலிருக்குமாம். ஆனால் தேன் குடத்தை மொய்க்கும் ஈயைப் போல், அவன் பேச்சைக் கேட்க மக்கள் திரண்டனர். தான் நினைப்பதை எல்லா ஜெர்மானிய மக்களும் நினைக்குமாறு அவன் பேசினான். அவன் பேச்சைக் கேட்ட மக்கள் ஆரவாரித்தனர்; அழுதனர்; அவன் நா ஆடியபடியெல்லாம் ஆடினர். "விரைந்து தொழில்

கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்ற உயர்மொழி பொய்யாகுமா !

ஹிட்லரின் ஆதரவாளர்கள் நாட்டில் பெருகினர். **தேசீய சமதர்மக் கட்சி** (National Socialist Party) என்ற ஒரு புதிய கட்சியை ஹிட்லர் தோற்றுவித்தான். அதன் குறுக்கமே **நாஜி** (Nazi) என்ற சொல்லாகும். நாட்டின் பொதுத் தேர்தலில் ஹிட்லர் கலந்துகொண்டு ஜெர்மானிய அரசியலையும் கைப்பற்றினான்; ஆட்சியைக் கைப்பற்றியதும், நாட்டில் வேறு கட்சிகள் எதுவும் இருக்கக் கூடாது என்று ஆணையிட்டான். 'இம்மென்றால் சிறைவாசம்; ஏனென்றால் வனவாசம்' என்ற பழமொழி இவன் ஆட்சிக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. ஹிட்லர் என்ன எண்ணினானோ அதையே எல்லாரும் எண்ண வேண்டும். அவன் கட்சிக் கொள்கையையே செய்தித் தாள்களும் நூல்களும் நாடகங்களும் பிரசாரம் செய்ய வேண்டும். அவனுக்கு எதிராக நாவசைத்தவர்கள், வீதியில் திரியும் வெறிநாயைவிடக் கேவலமாகச் சுட்டுத்தள்ளப்பட்டனர். அவன் ஆட்சியை விரும்பாத அறிஞர்களும், விஞ்ஞானிகளும், கலைஞர்களும் நாட்டைவிட்டு வெளியேறினர்; வெளியேற்றப்பட்டனர். அவ்வாறு வெளியேறியவர்களில், இந் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானியான **ஐன்ஸ்டீனும்** ஒருவர்.

ஜெர்மன் நாட்டின் வறுமைப் பிணியையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க, ஹிட்லர் பல விசித்திரமான வழிகளைக் கையாண்

டான். நாட்டின் எல்லாத்துறைகளிலும் செல்வாக்கும் திறமையும் பெற்றிருந்த யூதர்களையெல்லாம் நாட்டைவிட்டு வெளியேற்றிவிட்டு, ஜெர்மானிய இளைஞர்களை அத்துறைகளில் அமர்த்தினன். படைக்கலங்கள் உற்பத்தி செய்யும் பெரும் தொழிற்சாலைகளை நிறுவி, எஞ்சியிருந்தவர்களுக்கு வேலை கொடுத்தான். இவ்வாறு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கியவுடன் இரண்டாம் உலகப் போருக்கு வேண்டிய ஆயத்தங்களில் மூழ்கினன்.

முதல் உலகப்போரினல் சோர்வடைந்த மற்ற நாடுகள், போரில் அதிக அக்கறை கொள்ளாமல் நாட்டின் முன்னேற்றத்தில் ஈடுபட்டிருந்தன. ஹிட்லர் இவ்வளவு விரைவில் போர் முழக்கம் செய்வான் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை; 'உலக நாடுகள் கழகத்தின் ஒப்பந்தங்களையெல்லாம் மீறி, "ஜெர்மானிய மக்கள் எந்தெந்த நாடுகளில் சிதறி வாழ்கிருர்களோ, அந்நாடுகளையெல்லாம் கைப்பற்றுவேன்" என்று கூறி 1938-இல் ஆஸ்திரிய நாட்டின் மேல் படை செலுத்தி, அந்நாட்டை வெற்றிகொண்டான்; அடுத்த ஆண்டில் செக்கோஸ்லேவேகியாவையும் வென்ருன்; போலந்தின்மீது போர்தொடுத்தான். ஹிட்லரின் புயல்வேகப் படையெடுப்பையும் வெற்றியையும் கண்ட பிரான்சும், பிரிட்டனும் போர் செய்வதற்கேற்ற வாய்ப்பும் வசதியும் பெற்றிராவிட்டாலும், வேறுவழியின்றி ஜெர்மனியின் மீது போர் அறிவிப்புச்செய்யவேண்டியதாயிற்று. உடனே ஹிட்லர், ஒருவரையொருவர் தாக்கக் கூடாது என்று கூறி உருசிய நாட்டுடன் ஓர் ஒப்பந்தம் செய்து

கொண்டான். ஒப்பந்தம் செய்து கொண்டாலும், உருசிய நாட்டுத் தலைவனான ஸ்டாலின் ஏமாளியாக இருக்க விரும்பவில்லை. உருசிய நாட்டின் எல்லையிலிருந்த போலந்தின் கிழக்குப் பகுதிக்கு உருசியப் படையை அனுப்பி வைத்தான். ஆனால் பயிற்சியும் ஆற்றலும் கொண்ட ஜெர்மானியப்படைமுன், உருசியப்படைகள் நிற்கமுடியவில்லை. போலந்து முழுவதும் ஜெர்மானியரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

பிரான்சு அரசாங்கம் போருக்கு வேண்டிய ஆயத்தங்களில் சுறுசுறுப்பாக இறங்கியது; எல்லையில் ஒரு பெரும்படையை நிறுத்தி, அரண் செய்திருந்தது. ஜெர்மானியப் படை டென்மார்க், நார்வே, ஆலந்து, பெல்ஜியம் முதலிய சிறு நாடுகளை எளிதில் வென்று வெற்றிக்கொடி நாட்டியது. ஆங்கிலப் படை, தன் போர்க்கருவிகளையெல்லாம் போட்டு விட்டு உயிர் பிழைத்தால் போதுமென்று ஓட்டமும் நடையுமாக இங்கிலாந்து திரும்பியது. பிரெஞ்சுப் படை சூறைக்காற்றில் பட்ட எச்சில் இலைபோல் பறந்தோடிவிட்டது. ஜெர்மானியப்படை வெற்றி முழக்கத்தோடு பாரிசில் நுழைந்தது. பிரெஞ்சு நாடு சமாதானத்தை வேண்டி ஹிட்லரிடம் மண்டியிட்டது.

அவ்வாண்டு ஆகஸ்டுத் திங்களில், ஜெர்மானியப் போர் விமானங்கள் இங்கிலாந்து நாட்டின் முக்கிய நகரங்களின் மீதும் படைக்கலத் தொழிற்சாலைகளின்மீதும் குண்டுமாரி பொழிந்தன. ஆனால் அதற்குள்ளாக ஆங்கிலநாட்டுத் தொழிற்சாலைகளி

லிருந்து அரிகேன் (Hurricane), ஸ்பிட்ஃபைர் (Spit Fire) என்ற விமானங்கள் வெளிவரத்தொடங்கின. அவை ஜெர்மானிய விமானங்களைவிட வேகமும் வலிமையும் வாய்ந்தவை. ஒரே நாளில் எண்பத்தைந்து ஜெர்மானிய விமானங்களை அவை அழித்தன. ஜெர்மனியின் விமானத்தாக்குதல் பெருந்தோல்வியடைந்தது. இத்தோல்வி இரண்டாம் உலகப் போரில் ஒரு திருப்புமையமாகும். இத்தாக்குதலில் பிரிட்டன் தோல்வியடைந்திருந்தால், மேற்கு ஐரோப்பியக் கண்டம் முழுவதும் ஜெர்மானியரின் ஆளுகையின் கீழ் வந்திருக்கும். அக்கண்டம் முழுவதிலும் இருக்கும்படியான மூலப்பொருள், தொழிற்சாலைகள் முதலிய யாவும் ஜெர்மானியரின் கையில் சிக்கியிருக்கும். பிறகு அமெரிக்காவையும் உருசியாவையும் தனித்தனியே எதிர்த்துப் போராடி, ஜெர்மனி உலக அரசியாக, வெற்றிக்கொடி நாட்டியிருந்தாலும் வியப்பொன்றுமில்லை.

இதற்குள்ளாக இதாலி, ஜெர்மனியுடன் சேர்ந்து கொண்டு பிரிட்டன் பிரான்சு ஆகிய நாடுகளின் மேல் போர் அறிவிப்புச் செய்தது. பிரிட்டன் போதிய அளவு படையை இங்கிலாந்தில் வைத்துக்கொண்டு, மீதிப்படையை ஐரோப்பாவிற்குள் அனுப்பியது. அப்படைக்குத் தலைமை தாங்கிய **ஆர்ச்பால்டு வேவல்,** இதாலியப் படைகளைத் தாக்கினார். இதாலிய கப்பற்படை நாசமாக்கப்பட்டது. வட ஆப்பிரிக்காவில் இதாலிய நிலப்படையைத் தாக்கி முறியடித்ததோடு, ஓர் இலட்சத்து முப்பதாயிரம் பேரைச்சிறைப் பிடித்தார் வேவல். இதாலியக் குடியேற்ற நாடுக

ளான எரித்திரியா, **சோமாலிலண்ட், அபிசீனியா** முதலிய பகுதிகளைத் தாக்கி வெற்றி கொண்டார்.

இதற்குள்ளாக ஹிட்லர் தன் போர்க்குதிரையைக் கிழக்கு நோக்கிச் செலுத்தினான்; கிரீசை வென்றான்; உருசிய நாட்டின் மேல் புயல் போலப் பாய்ந்தான். ஜெர்மானியப்படை மிக வேகமாக முன்னேறி **லெனின் கிரேடு** வரை வென்ற தோடல்லாமல், மாஸ் கோவிற்கு முப்பது கல் தொலை வரையிலும் சென்று விட்டது. **டானெட்ஸ், டான்** ஆகிய ஆறுகளின் சம வெளிகளிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களும் இரும்புச் சுரங்கங்களும் கைப்பற்றப்பட்டன. உருசிய நாட்டின் கோதுமைக் களஞ்சியமான **உக்ரெயினும்** ஜெர்மானியரால் கைக்கொள்ளப்பட்டது.

உலகப் போரை வெற்றிகரமாக வென்று முடிக்கும் சூழ்நிலையும் நல்வாய்ப்பும் ஹிட்லருக்கு ஏற்பட்டுவிட்டன. கிட்டத்தட்ட ஐரோப்பாக் கண்டம் முழுவதும் அவன் காலடியிலிருந்தது. போருக்கு வேண்டிய உணவுப் பொருள்களும், மற்றப் பொருள்களும் அளவுக்குமீறி அவனிடத்திலிருந்தன. பிரிட்டனும் உருசியாவும் அமெரிக்க உதவியை நாடி நின்றன. இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ஹிட்லரின் கூட்டுப்படைகள் முழு மூச்சோடு தாக்கின. இச்சமயத்தில் ஜப்பானியர் எவ்விதப் போர் அறிவிப்புமின்றி, ஹாவாய்த் தீவின் சிறந்த துறைமுகப்பட்டினமான **பெர்ல்** என்ற இடத்தில் தங்கியிருந்த அமெரிக்கக் கப்பற் படையின் மேல் விமானத் தாக்குதல் புரிந்த

னர். ஜெர்மானியர் தங்கள் நீர்மூழ்கிக் கப்பல்களால் மிக விரைவோடும் தீவிரத்தோடும் கணக்கற்ற ஆங்கிலக் கப்பல்களை மூழ்கடித்தனர். ஆனால் ஆங்கிலக் கப்பற்படை தன் முழுவலிமையோடு தாக்கி, ஜெர்மானிய நீர் மூழ்கிக் கப்பல்களை அழித்தது.

வட ஆப்பிரிக்காவில் இதாலி முதலில் இழந்த நாடுகள் யாவும் திரும்பவும் கைப்பற்றப்பட்டன. ஜெர்மானியப்படை, எகிப்து நாட்டின் சிறந்த கப்பல் தளமான **எல் அலோமின்** வரையிலும் கைப்பற்றிக் கொண்டது. ஹிட்லர் மீண்டும் உருசிய நாட்டின் மீது தன் தாக்குதலைத் தொடங்கினான். சிறந்த எண்ணெய்க் கிணறுகள் அடங்கிய **காகசசின்** பெரும் பகுதி ஜெர்மானியரால் கைக்கொள்ளப்பட்டது. ஜெர்மன்படை **ஸ்டாலின்கிரேடையும்** நெருங்கிவிட்டது.

இவ்வெற்றி உலகப்போரின் இரண்டாம் திருப்புமையாகும். ஸ்டாலின்கிரேடு வெல்லப்பட்டால், உருசிய நாட்டின் எண்ணெய்க்கிணறுகளின் பெரும்பகுதி ஜெர்மானியர் கைக்குச் சென்றுவிடும். பிறகு உருசிய நாட்டிற்கு உய்வு கிடையாது. எகிப்தில் அலெக்சாந்திரியா வெல்லப்பட்டால், சூயஸ் கால்வாய் எளிதில் ஜெர்மானியர் கைக்குச் சென்றுவிடும். பிறகு இந்தியாவின் மீதும் தூரக்கிழக்கு நாடுகள் மீதும் படையெடுப்பது எளிதாகிவிடும். ஜப்பானியரின் போர்ப் பலமும், ஜெர்மானியரின் பலமும் ஒன்று சேர்ந்துவிடும். மேலும் அட்லாண்டிக் மாகடலில், உருசியா, பிரிட்டன் நாடுகளுக்கு வரும் அமெரிக்க உதவிக் கப்பல்களை மூழ்கடித்து, அந்

நாடுகளைப் பட்டினிபோட்டுப் பணிய வைக்க முடியும். ஆனால் அப்படி ஒன்றும் நடந்து விடவில்லை. வெற்றிச் சக்கரம் வேறு பக்கம் உருளத் தொடங்கியது.

**வீழ்ச்சி :**

நேச நாட்டினரின் படைகள் ஹிட்லரின் உதவிப் படைகளை வட ஆப்பிரிக்காவிலிருந்து அடியோடு துரத்திவிட்டன; **திரிபோலி, டூனிசியா** முதலிய பகுதிகளை வென்று, **சிசிலியின்** மேலும் படையெடுத்தன. கிழக்கு முனையில் உருசியர்கள் ஜெர்மானியப் படையை முறியடித்து, **காகசஸ்** பகுதி முழுவதையும் மீட்டனர். மூன்று இலட்சம் ஜெர்மானியப் போர் வீரர்களைக் கொன்றும், சிறைப்பிடித்தும் வெற்றி கொண்டனர். ஜெர்மானியர் கைப்பற்றியிருந்த உருசிய நாட்டின் பகுதிகள் மிக விரைவில் மீட்கப்பட்டன.

பிறகு நேசப்படைகள் இத்தாலியின் மீதும் படை யெடுத்தன. இதாலி அடிபணிந்தது. முசோலினி தப்பியோடிவிட்டான். இதற்குள் ஜப்பானியர் வியக்கத்தக்க முறையில் பல பசிபிக் தீவுகளையும், மலேயா, இந்தோனேசியா, பர்மா முதலிய பகுதிகளையும் வென்று இந்தியாவின் கிழக்கு எல்லையிலும் நுழைந்து விட்டனர். ஆனால் அமெரிக்க நிலப் படையும், கப்பற்படையும், ஒவ்வொரு நாட்டிலும் சிதறிக்கிடந்த ஜப்பானியப் படையை அழித்தொழித்து விட்டன. அமெரிக்கப் போர் விமானங்கள் ஜப்பானின்மேல் குண்டுமாரி பொழியத் தொடங்கின.

உருசியர்கள் ஜெர்மானியப் படையை உருசிய நாட்டின் எல்லைக்கு வெளியே விரட்டியதோடு, உருமேனியா, ஹங்கேரி முதலிய நாடுகளின் மீதும் படையெடுத்தனர். நேசப்படைகள் பிரான்சின் எல்லையில் வந்து குவிந்தன. பாரிசு மீட்கப்பட்டது. சில நாட்களில் ஜெர்மன் நாட்டின் மேற்கெல்லையைத் தாண்டி, ரைன் ஆற்றங்கரையை நேசப் படைகள் அடைந்தன. அமெரிக்க விமானங்களும் ஆங்கில விமானங்களும் இரவுபகலாகத் தொடர்ந்து ஜெர்மனியின் படைக்கலத் தொழிற்சாலைகள் மீதும், கிடங்குகள் மீதும், நீர்மூழ்கிக் கப்பற்றுறைகளின் மீதும், செய்தித்துறைச் சாதனங்கள் மீதும் குண்டுகளைப் பொழிந்தன. ஜெர்மானியர்களால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு நகரக்கூட முடியவில்லை. தளவாடங்களை உற்பத்தி செய்யவும் முடியவில்லை. இந்நிலையிலும் ஜெர்மானியர் மனந்தளராமல் இறுதிப் போர்புரிந்தனர்; பறக்கும் குண்டு (Flying bombs) களையும், ஆளில்லாத இராக்கெட் விமானங்களை (Rocket Aeroplanes)யும் இங்கிலாந்தின் மேல் ஏவிப் பெருஞ்சேதம் விளைவித்தனர். போர் முறையில் இத்தாக்குதல் பெரிய சாதனையே என்றாலும், காலங் கடந்த முயற்சியாகிவிட்டது.

உருசியர்கள் ஜெர்மனியைக் கீழ்த்திசையில் தாக்கினர். தொழில் வளம் செறிந்த ரூர் பகுதி, நேசப்படையினர் ஆதிக்கத்தில் வந்தது. உருசியர் பெர்லினைக் கைப்பற்றினர். முசோலினி கைது செய்யப்பட்டு, இத்தாலிய மக்களாலேயே கொல்லப்பட்டான். ஹிட்லரும் இறந்துவிட்டதாக அறிவிக்கப் பட்டது.

ஜெர்மனி வீழ்ச்சியடைந்ததும் நேசநாட்டினர் தங்கள் முழு வலிமையையும் ஜப்பானை நோக்கிச் செலுத்தினர். **பறக்கும் கோட்டைகள்** (Super Fortresses) என்று சொல்லப்பட்ட பெரிய போர் விமானங்கள் ஜப்பான் நாட்டின் பெரிய படைத் தளங்களை நிர்மூலமாக்கின.

இத்தாக்குதலைவிட ஜப்பான் நாட்டின் தோல் விக்குப் பெரிதும் காரணமாக விளங்கியது அணு குண்டே. நேச நாட்டினரின் பெருமுயற்சியாலும் பெரும் பொருட்செலவாலும் இது கண்டறியப்பட் டது. ஜப்பான் நாட்டின் பெரிய படைத்தளமான **இரோசிமாவின்** மேல் முதல் அணுகுண்டு போடப் பட்டது. அந்நகரம் இரண்டரை லட்சம் மக்கட் தொகை கொண்டது. ஆனால் அதில் உயிர் தப்பிய வர்கள் ஆறுயிரவரே. அது மட்டுமல்லாமல் அதி லிருந்து தாக்கப்பட்டு, இரத்த வடிகங்கள் அழிக்கப் பெற்றுப் பல்லாயிரக்கணக்கான மக்கள் மிகவும் கொடிய நோய்கட்குள்ளாயினர். பிறகு ஜப்பானின் பெரிய கப்பல் தளமான **நாகசாகியின்** மேல் மற்று மோர் அணுகுண்டு போடப்பட்டது. அந்நகரம் இருந்த இடம் தெரியவில்லை. உடனே ஜப்பான் அடிபணிந்தது. இரண்டாம் உலகப்போர் முடிவுற் றது.

இவ்வுலகப் போரில் ஐந்து கோடிக்கு அதிக மான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இலட்சக்கணக்கான மக்கள் ஒவ்வொரு நாட்டிலும் காயமடைந்தனர். இப்

போரில் அழிவுற்ற நகரங்கள், உணவுப் பொருள்கள், போர்க்கப்பல்கள், வானஊர்திகள் ஆகியவற்றின் மதிப்பைக் கணக்கிட்டறிய முடியாது. அவ்வழிவின் அளவிற்கு ஓர் உவமை கூறவேண்டுமானால், ஹிட்லரின் போர் வெறியைக் குறிப்பிடலாம்.

இப்போரினால் உலக மக்கள் அடைந்த துன்பங்களுக்கு அளவு கூறவியலாது. புதுப்புதுப் பிணிகள் பல தோன்றலாயின. பசியும் பிணியும் எங்கும் தலை விரித்தாடின. நச்சுப் புகைகளும், புதிய வகை வெடி குண்டுகளும் இந்தப் போரில் மிகுதியாகப் பயன்பட்டதனால் தட்பவெப்ப நிலையே மாறுபட்டதெனக் கூறுதலும் மிகையாகாது. ஜப்பான் மீது வீசப்பட்ட அணுகுண்டு வெடித்ததனால், வானிலை மாறுபட்டதெனின், போரின் கொடுமையை என்னென்பது! போரில் நேரில் ஈடுபடாத நம் நாட்டிலேயே, போரின் விளைவால் பஞ்சமும் பிணி வகைகளும் தலைவிரித்தாடின வென்றால், போரில் நேரில் ஈடுபட்ட நாடுகளின் கதி என்னவாயிருக்கும் என்பதை எடுத்துரைக்கவும் இயலுமோ!

# 6. போரைத் தடுக்க வழி

"மூன்றும் உலகப்போர் மூண்டால், அதில் என்னென்ன போர்க் கருவிகள் பயன்படுத்தப்படும்?" என்று உலகப் பேரறிஞர் ஐன்ஸ்தீனைப் பார்த்து ஒரு நண்பர் கேட்டார்.

"மூன்றும் உலகப் போரில் பயன்படுத்தப்படும் கருவிகளைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் நான்காம் உலகப்போரில் கற்கருவிகளே பயன்படுத்தப் படும்" என்று நகைச் சுவையும் கருத்தாழமும் கொண்ட விடையை அவர் தம் நண்பருக்குக் கூறினர்.

பேரறிஞர் ஐன்ஸ்தீனின் கூற்று மறுக்க முடியாத உண்மையாகும். மூன்றும் உலகப்போர் ஏற்பட்டால், உலகம் அழிவது திண்ணம். மக்கள் நாகரிகம் மறுபடியும் கற்காலத்திற்குத் திரும்ப வேண்டியதுதான்.

## அமைதி இயக்கங்கள்:

முதல் உலகப் போரினல் ஏற்பட்ட அழிவையும், பொருள் இழப்பையும், உயிர்க்கொலையையும் கண்ட உலக நாடுகள், போர் அரக்கன் பிடியிலிருந்து எவ்வாறேனும் மீள வழிகாணவேண்டும் என முயற்சித்தன; அம்முயற்சியின் பயனுக 'உலக நாடுகள் கழகம்' என்ற ஓர் அமைப்பு ஏற்பட்டது என்றும், அதை முன்னின்று நிறுவியவர், அமெரிக்க நாட்டுத் தலைவராக விளங்கிய உட்ரோ வில்சன்

என்றும் கண்டோம். ஆனால் அந்த அமைப்பால் இரண்டாம் உலகப் போரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. பேராட்சி வெறிகொண்ட ஜப்பான், ஜெர்மனி, இதாலி முதலிய நாடுகள், மறுபடியும் உலகத்தில் போர்த்தீயை மூட்டிவிட்டன. அதன் விளைவே இரண்டாம் உலகப்போர்.

இரண்டாம் உலகப்போர் முடிவுறுதற்கு முன்பாகவே, அமெரிக்க நாட்டுத் தலைவராக விளங்கிய **ரூஸ்வெல்ட்டும்,** இங்கிலாந்து நாட்டின் போர்க் காலப் பேரமைச்சராக விளங்கிய **வின்ஸ்டன் சர்ச்சிலும்,** சந்தடியின்றி அட்லாண்டிக் மா கடலின் ஒரு பகுதியில் ஒரு கப்பல் தளத்தின் மீது சந்தித்து 'அட்லாண்டிக் அறிக்கையை' வெளியிட்டனர். அவ்வறிக்கைதான் **'ஐக்கிய நாட்டுச் சபை'** என்னும் உலக அமைப்பின் வித்தாகும்.

**ஐ. நா. சபை :**

ஐ. நா. சபையின் அடிப்படைக் குறிக்கோள் உலக அமைதியே. வட கொரியர்களுக்கும் தென் கொரியர்களுக்கும் நடந்த போரை, இச்சபை தீர்த்து வைத்தது. இந்தோசீனாவில், மக்கள் உரிமை வேட்கை கொண்டு டாக்டர் ஹோசிமின் தலைமையில் பொங்கி எழுந்தனர். பிரெஞ்சுப் பேரரசு அந்நாட்டு மக்களுக்கு உரிமை தர மறுத்து, உள்நாட்டுக் குழப்பத்தைத் தூண்டிவிட்டுக் கொடுமை செய்தது. இதில் ஐ. நா. சபை தலையிட்டு அந்நாடு விடுதலையடைய ஆவன செய்தது; பாரசீக நாட்டு முதலமைச்சரான டாக்டர் முசாதிக், எண்ணெய்க் கிணறுகளை நாட்டுடைமையாக்கிய பொழுது எழுந்த ஆங்கிலோ

ஈரானியச் சண்டையைத் தீர்த்து வைத்து, அமை தியை நிலைநாட்டியது; கிரீசில் நடந்த உள்நாட்டுப் போரைத் தீர்த்து வைத்தது; எகிப்து நாட்டு அர சாங்கம் சூயஸ் கால்வாயை நாட்டுடைமை ஆக்கிய போது சூழ்ந்த போர் மேகத்தையும் விரட்டியடித் தது. ஐ. நா. சபையின் இச்செயல்கள் யாவும் மிகவும் பாராட்டுதலுக்குரியவை.

## அணுகுண்டு அச்சம்:

இந்நிலையில் மீண்டும் உலகப்போர் வராமல் தடுக்க, ஐ. நா. சபையின் பாதுகாப்புக் கழகம் (Security Council) ஒன்றே போதுமா என்ற ஐயப்பாடு உலக மக்கள் உள்ளத்திலே தோன்றியிருக்கிறது. இரோசிமா, நாகசாகி ஆகிய இடங்களில் அணு குண்டினுல் ஏற்பட்ட பேரழிவைக்கண்டு, ஜப்பானி யர் எவ்வளவு அச்சம் கொண்டனரோ அதைவிடப் பன்மடங்கு, வெற்றியாளர்களான அமெரிக்கரும், ஆங்கிலேயரும் கொண்டனர். அணுகுண்டானது இப்போது பணம் படைத்த வல்லரசுகளால், பெருஞ் செலவில் பெரிய படைக்கலத் தொழிற்சாலை களில் மட்டும் தயாரிக்கப் படுகிறது. ஆனுல் இதே அணுகுண்டு, சிறிய நாடுகளால் சிறிய தொழிற் சாலைகளில், குறைந்த செலவில் செய்து முடிக் கும் நிலைமை ஏற்பட்டால் என்ன ஆவது? அல்லது இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாகத் தனிப்பட்ட ஒருவனுல், குடிசைத் தொழிலில் உருவாக்கக்கூடிய ஓர் எளிய பொரு ளாக அணுகுண்டு மாறி, ஒரு குறும்புக்காரன்

கையில் அது கிடைத்துவிட்டால், இவ்வுல கத்தை அவனிடமிருந்து எப்படிக் காப்பாற்றுவது? என்பனபோன்ற கேள்விகள் அறிஞர்களின் உள்ளத் தில் தோன்றுகின்றன. ஆனால், வல்லரசுகளோ போட்டி போட்டுக் கொண்டு, நீர்வளிக் குண்டுகளை யும், கண்டத்திலிருந்து கண்டம் பாயும் பறக்கும் குண்டுகளையும் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள் ளன; அதுவுமன்றி, படைகளையும் படைக் கருவி களையும் பெருக்குவதால்தான் உலகத்தில் போரை ஒழிக்க முடியும் என்றும் கூறி வருகின்றனர். ஆனால் அணுகுண்டு, நீர்வளிக் குண்டுகளின் அச்சத்தி னாலேயே இன்று போர்ப் பீதி அடங்கிவிட்டதாகச் சொல்ல முடியாது. உலக வல்லரசுகள் ஒன்றன் குரல்வளையை ஒன்று நெறிப்பதற்குரிய காலத்தை யும் வாய்ப்பையும் ஒவ்வொரு விநாடியும் எதிர் நோக்கிக்கொண்டிருக்கின்றன.

## மூன்றும் உலகப்போர் ஏற்பட்டால்!

ஒரு குறிக்கோளுக்காக யாரேனும் ஒருவன் உயி ரைக் கொடுக்கலாம். ஓர் உயர்ந்த குறிக்கோளுக்காக ஓராயிரவர்கூட இறக்கலாம். ஆனால் சில அரசி யல் வாதிகளின் பேராசைக்காகவும், தந்நலத்திற் காகவும், பல கோடி மக்கள் இறப்பதென்பது மன் னிக்கமுடியாத மாபெருங் குற்றமாகும். ஒரு நாட்டை எந்த ஓர் அரசியல்வாதியாவது போருக்குத் தூண்டி விடுவானானால், அவன் இரும்பு மனம் கொண்ட கொலைஞனைவிட இழிவானவன். எந்த ஒரு நாடா வது அரசியல் வாதிகளின் தூண்டுதல்களை மேற்

கொண்டு போரில் இறங்குமேயானல் அச்செயல் ஒரு மாபெரும் கூட்டுத் தற்கொலை (Mass suicide) யாகும். மேலைநாட்டு அறிஞர் ஒருவர், “மூன்ரும் உலகப் போர் ஏற்பட்டால் யார் வெல்வர்? யார் வீழ்வர்? என்று உறுதியாகச் சொல்ல முடியாது. உலகம் சுடுகாடாக்கப்படும். வெற்றியடைந்த நாடு ஈடும் எடுப்புமற்ற மாபெரும் சக்தியாக விளங்கும்; உலகப் பேரரசியாகத் தலைநிமிர்ந்து நிற்கும். ஆனல் கட்டியாள உலகத்தில் மக்களினம்தான் இருக்காது. அவ்வாறு ஏற்படும் உலகப் போரில், பெருநிலப் பரப்பைத் தன்னகத்தில் கொண்ட உருசிய நாடு மறுபடியும் புத்துயிர் பெற்ருலும் பெறலாம். உருசிய நாட்டைவிட அமெரிக்க நாட்டிற்கு மாபெரும் சேதம் விளையும். அப்போரில் ஆங்கிலேயர் கலந்து கொண்டால் பிரிட்டன் என்ற நாடு உலகப் படத்திலேயே இல்லாமல் போய்விடும்” என்று கூறியுள்ளார்.

இன்றைய உலகம் இரண்டு மாபெரும் கொள்கைகளின் மோதற்களமாக விளங்குகிறது. அமெரிக்காவும் அதன் துணை நாடுகளும், உருசியாவும் அதன் துணை நாடுகளும் ஈரணியாகப் பிரிந்து, தங்கள் தங்கள் கொள்கைகளையும் செல்வாக்கையும் வளர்ப்பதில் பேருக்கம் காட்டுகின்றன. உலக ஒருமைப்பாட்டைப் பற்றி எங்கும் பேசப்படும் இக்காலத்தில் இவ்விரண்டு அணிகளும் பிரிந்து வெகு தொலைவில் சென்றுகொண்டிருக்கின்றன. இவர்கள் பகை நெருப்பு எப்பொழுது பற்றி எரியுமென்று யாரும் சொல்ல முடியாது. யாராவது ஒருவர் உலக நன்மையின் பொருட்டுத் தங்கள்

கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். மேற்கூறிய இரண்டு வல்லரசுகளும் பிறநாட்டு அரசியலில் தலையிட்டுத் தங்கள் பொருளாதார ஆதிக்கத்தை அதன் மீது திணிப்பதை நிறுத்தி உலக ஒருமைப்பாட்டிற்கு முயலல் வேண்டும். இந்த நிலைக்கு வல்லரசுகள் தங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் வரையிலும் உலகப்போர் ஏற்படுவதற்குரிய சூழ்நிலைகள் உருவாகாதவாறு காத்தல் ஐ. நா. சபையின் வேலையாகும். ஆனால் விரைவில் ஏற்படக்கூடிய உலகப் போரைச் சிலகாலம் பாதுகாப்புச் சபை தடுத்து நிறுத்தலாமே தவிர, ஒரே அடியாகப் போரை ஒழிக்க முடியாது.

**கூட்டாட்சி :**

ஆங்கில நாட்டு அறிஞரான திருவாளர் **கோல்** என்பார், போரை ஒழிப்பதற்காக ஐரோப்பிய நாடுகளுக்குக் கூறும் அறிவுரை மிகவும் போற்றற்குரியதாகும். உருசியா நீங்கலாக உள்ள ஐரோப்பிய நாடுகள் யாவும் இனம், ஒழுகலாறு, பண்பாடு ஆகியவற்றில் பெரிதும் ஒற்றுமைப்பட்டிருக்கின்றன. எனவே அவைகள் யாவும் ஒன்றுபட்டு ஒரு கூட்டாட்சி அமைக்கவேண்டுமென்று அவர் கூறுகிறார் : “ உழவு, தொழில் வளர்ச்சி முதலியவை எல்லா நாடுகளுக்கும் பொதுவான முறையில் நடைபெறவேண்டும்; பொதுவான நாணயமுறை அமையவேண்டும்; எல்லா நாடுகளின் ஆறுகளிலுள்ள நீரும் சக்தியும் பொதுவான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்; வாணிக உரிமை, போக்குவரத்துரிமை யாவும் எவ்விதக் கட்டுப்பாடு

களுமின்றிப் பொதுவான அடிப்படையில் நடைபெறவேண்டும்; எல்லா நாட்டு மக்களுக்கும் விரும்பிய நாடுகளில் வாழக் குடியுரிமை (Citizen right) அளிக்கப்படல் வேண்டும்; ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குள் நுழைய நுழைவுச் சீட்டு (Pass-port) வேண்டியதில்லை; ஒவ்வொரு நாடும் தங்கள் உள் நாட்டு அரசியலைக் கவனித்துக் கொள்ள ஒரு சட்டசபை அமைத்துக் கொள்ளலாம்; எல்லா நாடுகளுக்கும் பொதுவான பாராளுமன்றம் கூட்டவேண்டியதில்லை. எல்லா நாட்டு உறுப்பினர்களும் வேண்டும் பொழுது கூடி, பொதுவான திட்டங்களைப்பற்றிக் கலந்து முடிவுக்கு வரலாம்.

"இத்தகைய கூட்டாட்சி முறையால் ஐரோப்பாக் கண்டத்தின் தொழில் வளம் பெருகும்; விளைவு மிகும்; பொருள் வளம் உயர்வடையும்; தொழிற்சாலைகளில் பெருவாரியாக உருவாக்கப்படும் பொருள்களுக்கு நல்ல வரவேற்பும் தேவையும் பெருகும். காரணம், ஏற்றுமதி, இறக்குமதி வரிகளின்றிப் பரந்த ஐரோப்பாக் கண்டம் முழுவதும் அப்பொருள்களை விற்கலாமன்றோ? இவ்வாறு பொருள் வளத்தைப் பெருக்கிக் கொண்டால், வல்லரசுகளின் பொருளாதாரத் தாக்குதலிலிருந்து அவர்கள் விருப்பு வெறுப்புக்கு ஆளாகாமலிருக்க முடியும். ஐரோப்பாவில் போரே நிகழாமலும் தடுக்க முடியும்."

இவர் கூறிய இவ்வறிவுரை ஐரோப்பாவிற்கு மட்டுமன்று. உலகத்தின் மற்றப் பகுதிகளுக்குந்தான்.

குறிப்பாக ஆசியப் பெருநிலத்திலுள்ள இந்தியா, சீனம், இலங்கை, பர்மா, ஜப்பான், மலேயா முதலிய பகுதிகளில் வாழும் மக்களின் தன்மையும் பண்பாடும் ஏறக்குறைய ஒத்து விளங்குகின்றன. புத்த சமயம் எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஒரு பாலமாக இருந்து இணைத்து வைக்கிறது. இந்து சமயம் பெற்றெடுத்த அன்புக் குழந்தைதானே பௌத்தம்! எனவே இந்நாடுகள் ஒன்றுபட்டு வாழ்வதில் யாது தீதுளது?

மத்தியக் கிழக்கில் வாழும் அரபு நாடுகளான ஈரான், ஈராக், துருக்கி, எகிப்து, அராபியா முதலியவற்றில் வாழும் மக்கள் ஒரே இனத்தவர்; சமயத்தால் ஒன்றுபட்டவர்; அவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டாட்சி அமைத்து வாழ்ந்தால் போர் வெறி கொண்ட வல்லரசுகள் அந்நாடுகளைத் தங்கள் கையில் உருளும் பகடைக்காய்களாகப் பயன்படுத்த முடியாதல்லவா? இக்கூட்டாட்சி முறை உலக ஒருமைப் பாட்டிற்குச் சிறந்த வழி காட்டியாகும். இதைக்கேட்போர் ஏளனம் செய்வர்; எள்ளி நகையாடுவர்; பகற் கனவு என்பர். ஆனால், இன்னும் எவ்வளவு காலமானாலும் உலகம் போரை ஒழித்து, இம்முறையில் ஒன்றுபடும் காலம் ஒன்று கட்டாயம் வரும்.

### மனித உள்ளம்:

இன்றைய சூழ்நிலையில் உலகம் ஒற்றுமை உணர்வை வளர்க்கும் என்று கூறுவதற்கில்லை. காரணம் மக்கள் உள்ளத்தில் உண்மை உணர்வு குன்றி, போலி உணர்வு மலிந்து வருகிறது.

எவன் போரின் கொடுமைக்கு இரங்கிப் பகலில் கண்ணீர் வடிக்கிருனே, அவன் இரவில் அணு குண்டு ஆராய்ச்சி நடத்துகிருன். அன்பைப்பற்றி யும் அருளைப் பற்றியும் எவன் மக்கள் முன்னிலையில் சொன்மழை பொழிகிருனே, அவன் உள்ளத்தால் அரக்கனுகக் கரந்து வாழ்கிருன். மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை ஆகிய மூவாசைகளை யும் விலக்கி, பசித்தால் புசித்து, வியர்த்தால் குளித்து, நிழல் கண்டால் ஒதுங்கிப் பற்றற்ற வாழ்வு வாழவேண்டுமென்று எவன் உருக்கமாகப் பேசுகி ருனே, அவன் வயிருர உண்டு, புலனுர நுகர்ந்து, உடலார உடுத்து உலகை ஏமாற்றுகிருன். சமத்து வத்தைப் பற்றிப் பொது மேடைகளில் பேசுபவன் பெரிய சர்வாதிகாரியாகிருன். மனிதனை மனிதனுக எண்ணும் உள்ளம் இவ்வுலகில் மருந்துக்குக் கூட இல்லை. வெள்ளை நிறம் படைத்தவன் கறுப்பு நிறத் தவனை வெறுக்கிருன்.

தென்னுப்பிரிக்காவில் வாழும் கறுப்பர்கள் இன்றும் தெருக்களிலும் உணவு விடுதிகளிலும் பொது இடங்களிலும் ஒதுக்கி வைக்கப்பட்டுச் சேரி வாழ் மக்களாக வாழ்கின்றனர். ஐ. நா. சபையின் தீர்ப்பைக்கூடத் தென்னுப்பிரிக்க அரசாங்கம் பொ ருட்படுத்தாமல் நிறத்திமிர் காட்டுகிறது. கடந்த சில திங்கள்கட்குமுன் ஐக்கிய அமெரிக்காவில் **லிட் டில்ஸ்ராக்** என்ற இடத்தில், பள்ளிக்கு வந்த நீக்ரோ மாணவர்களை வெள்ளை மாணவர்கள் அடித்துத் துன்புறுத்திய செய்தியை உலகமறியும்.

ஆஸ்திரேலியா இந்திய நாட்டைப் போல் பல மடங்கு பரப்புள்ள ஒரு பெருநிலம். ஆனால் அதில் வாழும் மக்கட் தொகை ஐம்பது இலட்சம் தான். நம் நாட்டில் சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய மூன்று நகரங்களில் வாழும் மக்கட் தொகையும் இவ்வளவு தான். ஆஸ்திரேலியாவில் வாழும் மக்கள் ஆங்கில நாட்டிலிருந்து குடியேறியவர்கள். 'அவர்கள் வெள்ளை ஆஸ்திரேலியக் கொள்கை' (White Australian Policy) என்ற ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றனர். அதன்படி வெள்ளையர்களே, அதுவும் குறிப்பாக ஆங்கிலேயர்களே அந்நாட்டில் குடியுரிமை (Citizen Right) பெற முடியும். என்னே இவர்கள் கறுப்பின் பால் கொண்ட வெறுப்பு!

இக்கொடுமைகளெல்லாம் செய்பவர்கள் யார்? கல்வியறிவற்றவர்களா? பண்பறியாப் பாமரரா? நாகரிகமற்ற காட்டு மிராண்டிகளா? மலைப்பகுதிகளிலும் காடுகளிலும் வாழும் பழங்குடிமக்களா? பனிப் பகுதிகளில் வாழும் எஸ்கிமோக்களா? அல்ல! நாகரிகத்தின் உச்சியிலிருந்து அறிவுரை கூறுபவர்கள்! வீரர்களையும், விஞ்ஞானிகளையும், அறிஞர்களையும், அரசியல் வாதிகளையும், கலைஞர்களையும், கவிஞர்களையும் உலகிற்குப் பெற்றெடுத்து வழங்கியவர்கள் என்று பெருமை பேசிக்கொள்பவர்கள்! பொதுமை உணர்ச்சியை உலகிற்குப் போதனை செய்பவர்கள்! இன்றைய உலகை அழிவுப் பாதையிலிருந்து மீட்க அரும்பாடு படுவதாக அரற்றுபவர்கள்!

மக்களின் இத்தகைய மனப்போக்கு மாற வேண்டும். போலி உணர்வு நீங்கி, உண்மை உணர்வு ஓங்க வேண்டும். வருணத்தின் பெயரால், சமயத்தின் பெயரால், செல்வத்தின் பெயரால், வலிமையின் பெயரால், நிறத்தின் பெயரால் இவ்வுலகில் நிலவும் உயர்வு தாழ்வு ஒழிய வேண்டும். மனித உடலில் விலங்கின் உள்ளத்தைப்பெற்று வாழ்வதை விடுத்து, மனிதன் மனித உள்ளத்தோடு வாழக் கற்றுக் கொள்ள வெண்டும்.

மக்களின் இத்தகைய மனமாறுதலுக்கு ஏற்ற மருந்து தமிழகத்திலும், இந்தியத் துணைக்கண்டத்திலும் மலிந்து கிடக்கிறது. முதன் முதலில், அந்த மருந்தை 'இன்னு செய்யாமை' என்ற பெயரில் உலக அங்காடியில் விலை கூறி விற்றவர் தமிழகத்தின் தனிப் பெரும் புலவர் வள்ளுவரே! நம் கண்ணெதிரில் வாழ்ந்த காந்தியடிகள், அதே மருந்தை 'அஹிம்சை' என்ற பெயரில் உலகிற்கு வழங்கினர். அணுகுண்டைத் தெய்வமெனப் போற்றி வாழும் இக்கால மக்கள், அவரைக் கோமாளி என்று கூறி எள்ளி நகையாடினர்; வறட்டு வேதாந்தி என்று வம்பு பேசினர்.

இப்பாழும் உலகம் அறிஞரின் அறிவுரையை என்றும் ஏற்றுப் போற்றியதில்லை.

சோக்ரதருக்கு நஞ்சு வழங்கிக் கொன்ற நன்றி கெட்ட மக்கள் தாமே நாம்!

ஏசுவைச் சிலுவையில் அறைந்து கொன்ற கொடியவர் தாமே நாம்!

நபிநாயகத்தைக் கல்லாலடித்துத் துன்புறுத்திய கயவர் தாமே நாம்!

கலீலியோவைக் கடுஞ்சிறையிலிட்ட கல் நெஞ்சர் தாமே நாம்!

காந்தியடிகளை விட்டோமா? அவரையும் சுட்டுக் கொன்ருேம்!

ஆனல் அவர் அறிவுரையை உணருங்காலம் தொலைவில் இல்லை. விரைவில் உணரப்போகிருேம்; உணரவேண்டும். 'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைத் திருப்பிக்கொடு' என்பது வாய் வேதாந்தமாக இருந்து பயனில்லை. 'இன்ஞ செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு' என்று மேடையில் பேசிப் பயனில்லை. செயலில் காட்ட முயலவேண்டும். 'ஒன்று செய்; நன்று செய்; அதுவும் இன்று செய்' என்பது மேலோர் கூற்று. இவ்வுண்மையை உலக மக்கள் உணரவேண்டும். அதுவும் அணுகுண்டை யும், நீர்வளிக் குண்டையும் கையிற்கொண்டு, உலக அரங்கில் அம்மானை ஆடும் வல்லரசுகள் உணர வேண்டும். அவ்வழிவுக் கருவிகளால் உலகம் சுடு காடாக மாறி, மனிதப்பூண்டு மாண்டொழிவதற்கு முன் உணர வேண்டும். அது வரையில் இவ்வுல கிற்கு மீட்சி இல்லை.

'யாதும் ஊரே; யாவருங் கேளிர்!'

---

# கட்டுரைப் பயிற்சி

1. தமிழரின் போர் முறை.
2. தமிழ் மகளிர் வீரம்.
3. தமிழரின் படை வகுப்பு.
4. கிரேக்கரின் போர்ப்பண்பு.
5. அலெக்சாந்தரின் பேராட்சி வெறி.
6. உலக அரசி உரோமாபுரி.
7. ஜூலியசு சீசர்.
8. நெப்போலியன்.
9. முதல் உலகப்போரின் காரணங்கள்.
10. உலக நாடுகள் கழகம்.
11. இரண்டாம் உலகப்போருக்குரிய காரணம்
12. ஹிட்லரின் போர் வெறி.
13. உலகப்போர்களில் அமெரிக்கரின் பங்கு.
14. ஐ. நா. சபை.
15. உலகப்போர்களும் ஜப்பானும்.
16. அணுகுண்டு அச்சம்.
17. போரைத் தடுக்க வழி.

குறிப்பு :—ஒவ்வொரு கட்டுரையும் இரண்டு பக்கங்கட்குக் குறையாமல் இருக்கவேண்டும்.

# PAARUM PORUM

BY

Pulavar M. SHANMUGASUNDARAM, B.A.,

★

Grams : 'BOOKS' Phone : 399

SIVALINGAM PUBLISHING HOUSE

Post Box No. 96,

ERODE.

Copy Right] 1960 [Price Re. 1-10 nP.